Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU





முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 27 சனிக்கிழமை (09.06.2012) பக்கங்கள் 20 ஓசை – 252

இணைந்து செயற்பட (09)



நம்மை பாதுகாத்துக்கொள்ள... (15)



நல்லூருக்கு வெற்றி (07)



பொறுப்புடன் செயற்படவில்லை (12)



பிரபாகரனின் பொழிப்புரை (08)



# உலகளாவிய கூட்டு முயற்சிமூலம் இலங்கையில் சமாதானம் மலரும்

## பாப்பரசர் தெரிவிப்பு



(வத்திக்கான்)

இலங்கையின் அனைத்துத் தரப்பினரும் உள்ளடங்கும் வகையில் அந்த தரப்புக்கள் எதிர்ப்பார்க்கும் சமாதானம், உலகளாவிய கூட்டு முயற்சிகளின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று பரிசுத்த பாப்பரசர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றைய தினம் பாப்பரசர் 16 ஆவது பெனடிக்கை வத்திக்கானில் வைத்து சந்தித்தார். இதன்போது இருவரும் இந்தக் கருத்தை பரிமாறிக்கொண்டதாக வத்திக்கான் பாப்பரசர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பாப்பரசர் அலுவலகம் செய்திக்குறிப்பு

(19) ஆம் பக்கம் பார்க்க

## கைதி தப்பியோட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறையில் தடுப்புக் காவலிலிருந்த கைதியொருவர் நேற்று முன்தினம் மாலை தப்பியோடியுள்ளதாக யாழ். சிறைச்சாலை பிரதம அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

வழக்கு ஒன்றிற்காக ஊர்காவற்றுறை நீதிமன்றத்திற்கு கொண்டுசெல்லப்பட்ட இக் கைதி சிறைக்காவலரை தாக்கிவிட்டு தப்பியோடியதாக அவர் தெரிவித்துள்ளார்.

கொலைக் குற்றச்சாட்டு தொடர்பில் குறித்த கைதி 5 வருடங்களாக சிறைத் தண்டனை அனுபவித்து வருவதாகவும் யாழ். சிறைச்சாலை பிரதம அத்தியட்சகர் குறிப்பிட்டுள்ளார். இக்கைதியை பொலிஸார் தேடி வருகின்றனர். (எஸ்)

# ஹன்டர் வாகனம் மோதி குடும்பப் பெண் உயிரிழப்பு

## கிளிநொச்சியில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

ஹன்டர் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குடும்பப் பெண் மரணமாகியதுடன் அவரது கணவர் படுகாயமடைந்துள்ளார்.

கிளிநொச்சி டிப்போ அருகாமையில் நேற்றுப் பகல் 11.25 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த சிறிகரன் ரதிராணி (வயது - 28) என்ற குடும்பப் பெண்ணே உயிரிழந்ததுடன், அவரது கணவரான கா.சிறிகரன் (வயது - 31) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியைச் சேர்ந்த கணவன், மனைவி இருவரும் வீட்டிலிருந்து கிளிநொச்சி நகரப்பகுதிக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

# தெரிவுக்குழுவில் கூட்டமைப்பு பங்கேற்க அரசிடம் பொதி கையளிக்கும் ஐ.தே.க.

(கொழும்பு)

நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றுவதை உறுதி செய்யக்கூடிய ஆலோசனைகள் அடங்கிய ஒரு பொதியை அரசாங்கத்திடம் கொடுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி நேற்று தெரிவித்துள்ளது.

பந்து இப்போது அரசாங்கத்தின் பக்கம் உள்ளது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இந்தப் பொதியில் ஏற்கனவே பல்வேறு அரசாங்கங்களினாலும் முன்வைக்கப்பட்ட, ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆலோசனைகள் அடங்கியுள்ளன என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. கூறினார்.

மங்கள முனசிங்க குழு அறிக்கை, ஜனாதிபதி சந்திரிகா முன்வைத்த பொதி, அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கை, ஜனாதிபதி தேர்தலின்போது வெளியிடப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் என்பவை நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆராயப்பட வேண்டுமென தமிழ்த் தேசிய கூட்டமைப்பு விரும்புகின்றது.

இந்த விடயங்களை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் நாம் அரசியல் தீர்வைப் பெற்றுக்கொள்ள

(19) ஆம் பக்கம் பார்க்க

# சமூகநல உதவித் திட்டம் குடாநாட்டில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சின் பல்வேறு சமூகநலத் திட்டங்களை அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்றைய தினம் வைபவரீதியாக குடாநாட்டில் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த சமூக சேவைகள் அமைச்சர் உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்கு விஜயம் செய்து அங்கு விசேட தேவையுடைய ஒருவருக்கான வீட்டுத் திட்டத்தின் கீழான வீடு ஒன்றிற்குரிய அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

தொடர்ந்து யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு விஜயம் செய்த அவர் அங்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்த விசேட தேவையுடையவர்களுக்கான வீட்டுத்

(19) ஆம் பக்கம் பார்க்க



# தேசியக் கொடியை ஏற்ற மறுத்த விநாயகமூர்த்தி எம்.பி.

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் தேசியக் கொடியை ஏற்றி வைக்குமாறு சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கேட்டுக்கொண்ட போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தான் ஏற்றவில்லையெனத் தெரிவித்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சினால் விசேட தேவையுடையோருக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது தேசியக் கொடியேற்றும் நிகழ்வில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த இலங்கைக்கு உதவத் தயார்

## பொதுநலவாய நாடுகளின் அமையம் அறிவிப்பு



இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான நடைமுறைகளுக்கு உதவத் தயாரென பொதுநலவாய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது. பொதுநலவாய நாடுகளின் வர்த்தக சபைக் கூட்டம் அண்மையில் லண்டனில் நடைபெற்றது.

எனினும் இதன்போது இடம்பெறவிருந்த ஜனாதிபதி மகிந்தவின் உரை இரத்துச்செய்யப்பட்டது. எனினும் பொதுநலவாய நாடுகளின் செயலாளர்

(19) ஆம் பக்கம் பார்க்க

# முதலமைச்சர் வேட்பாளரால் கூட்டமைப்பில் முரண்பாடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்தால் யாரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது என்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் முரண்பாடு எழுந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதலமைச்சர் வேட்பாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அல்லது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் எனவும் ஆனால், இதனை ஏற்க மறுத்த தமிழ்த் தேசியக்

(19) ஆம் பக்கம் பார்க்க

# பிரசவத்தின்போது மரணம் மாத இறுதியில் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் பிரசவத்தின் போது தாய்மார்கள் மரணமடையும் சம்பவங்கள் தொடர்பாக யாழ். நீதிவான் நீதிமன்றில் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த ஒரு மாதத்தில் பிரசவத்தின் போது 5 தாய்மார்கள் மரணமாகியுள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெறும் தாய்மாரின் மரணம் குறித்துப் பல்வேறு தரப்பினரும் மருத்துவர்கள் மீது குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெறும் மரணங்கள் தொடர்பான திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி யாழ். நீதவான் நீதிமன்றில் அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தார்.

அவ் அறிக்கையின் அடிப்படையில் இம்மாத இறுதிக்குள் யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா முன்னிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் சிலர் மீது விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளதாக நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (எஸ்)

# கோடரி கொண்டு மனைவி மீது தாக்குதல்

இளம் மனைவியை கோடரியினால் தாக்கி படுகாயப்படுத்திய இளம் கணவரை உடனடியாகக் கைது செய்யும் வகையில் யாழ்.நீதவான் மா.கணேசராசா நேற்று பிடியாணை பிறப்பித்தார்.

யாழ்ப்பாணம் கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 18 வயது இளம் பெண் ஒருவரை வாலிபர் ஒருவர் காதல் திருமணம் செய்திருந்தார். இவர்களுக்கு மூன்று வயதில் குழந்தை ஒன்றும் உள்ளது.

குடித்துவிட்டு வந்து தன்னை அடித்து உதைப்பதாகவும், வேறு ஒரு பெண்ணுடன் இவருக்கு தொடர்பிருப்பதாகவும் இவ் இளம பெண் தன் கணவர் மீது குற்றம் சாட்டியதுடன் அவர் மீது தாபரிப்பு வழக்கும் தாக்கல் செய்திருந்தார்.

இந்நிலையில், தனது மனைவியைக் கணவர் கோடரியினால் தாக்கியதில் அவர் படுகாயமடைந்தார். பொலிஸாரிடமும், நீதிவானிடமும் நேற்று இப்பெண் முறைப்பாடு செய்த நிலையில் உடனடியாகக் கணவரைக் கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்ட நீதவான் பிடியாணை பிறப்பித்தார். (137, எஸ்)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

நேசரி வீதி, தையிட்டி காங்கேசன்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த கந்தசாமி கீர்த்தனன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும், விசேட அடையாள அட்டையும், கறுத்த நிறப் பேர்சுடன் கண்டெடுக்கப்பட்டு தினமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## அறிவித்தல்
## வேலணை பிரதேச சபை
### நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழா - 2012

1. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர்திருவிழாவானது 19.06.2012 தொடக்கம் 04.07.2012 வரை நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இக்காலப் பகுதியில் ஆலய வீதியிலும், வெளிச்சுற்றாடலிலும், புங்குடுதீவு, குறிகாட்டுவான் பகுதியிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வோர் வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு, நயினாதீவு உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு வியாபார அனுமதிப்பத்திரம் பெற்று பிரதேச சபையின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும். அனுமதிப்பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2. உயர்திருவிழாக் காலத்தில் நயினாதீவில் காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரையும், பின்னர் பி.ப. 4.30 மணி முதல் இரவு 11.00 மணி வரையும் பிரதான வீதியிலும், யாத்திரிகர் மடத்திற்கு அப்பாலும், ஆலயத்தின் தெற்கு மதிலுக்கு அருகிலுள்ள வீதியிலும், மேற்கு மதில் எல்லைக்குள்ளும், துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் உட்செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரதேசசபையின் வாகனத் தரிப்பிடத்திற்கு மேலதிகமாக எந்தவொரு தனி நபருக்கும் வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

3. குறிகாட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உப அலுவலகத்தினால் வாகனத் தரிப்பிட வசதிகள், சுகாதார வசதிகள், குடிநீர் வசதிகள், தற்காலிக இளைப்பாறு மண்டப வசதிகள், மின்சார வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும், சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால் பணிக்கப்படும் ஒழுங்கு முறைகளைப் பேணுமாறு யாத்திரிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4. வாகனத் தரிப்பிடங்களில் உரிய தரிப்பிடக் கட்டணங்களைச் செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு வாகன உரிமையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**சி.சிவராசா,**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேச சபை.**

**06.06.2012**

(C/1617)

# இன்று பரிசளிப்பு விழா

(நயினாதீவு)

நயினாதீவு ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பிடாரி அம்பாள் வேள்வித் தினத்தை முன்னிட்டு நடத்திய 21ஆவது பொது அறிவுப் பரீட்சையின் பரிசளிப்பு விழாவும். கலை நிகழ்ச்சிகளும் ஸ்ரீ பிடாரி அம்பாள் சனசமூக நிலைய நிகழ்ச்சி அரங்கில் இடம்பெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் கதிர்மகிந்தன் தலைமையில் இன்று இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வேலணைக் கோட்ட கல்விப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன், சிறப்பு விருந்தினர்களாக நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் கோவில் அறங்காவலர் சபை தலைவர் கா.ஆ.தியாகராஜா, நயினாதீவு மகா வித்தியாலய அதிபர் சோ.குகநேசன், நயினாதீவு நாகபூசணி வித்தியாலய அதிபர் திருமதி சி.இராசரெத்தினம், ஸ்ரீ. பிடாரி அம்பாள் ஆலய நிர்வாக உறுப்பினர் நா.கதிரவேற்பிள்ளை, ஸ்ரீ.பிடாரி அம்பாள் ஆலய அன்னதானச் சபையின் பொருளாளர் மு.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# மின் தடை பற்றிய தகவல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர்அழுத்த மற்றும் தாழ்அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்யவேண்டியிருப்பதால் கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீடப் பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், மருதனார்மடம், உடுவில், மானிப்பாய், சங்குவேலி, கட்டுடை, சுதுமலை, கோண்டாவில், இணுவில் பிரதேசம், தாவடி குளப்பிட்டிப் பிரதேசம், தட்டார்தெருப் பிரதேசம், கோம்பயன்மணல் பிரதேசம், நாச்சிமார் கோவிலடி 11.06.2012 திங்கட்கிழமை, 13.06.2012 புதன்கிழமை, 15.06.2012 வெள்ளிக்கிழமை, 17.06. 2012 ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும்

யாழ் பிரதான வீதியில் நீதிமன்றம் தொடக்கம் கச்சேரி வரையான பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்சசெழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம், சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலப்பகுதி, மல்லாகம், தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான் ஆகிய இடங்களில் 12.06.2012 செவ்வாய்க்கிழமை, 14.06.2012 வியாழக்கிழமை, 16.06. 2012 சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரையும்

உரும்பிராய், மருதனார்மடப் பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களில் 12.06.2012 செவ்வாய்க் கிழமை, 13.06.2012 புதன்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும்

உரும்பிராய், கோண்டாவில், மருத்துவபீடப் பிரதேசம், திருநெல்வேலிப்பிரதேசம், கந்தர்மடப் பிரதேசம், யாழ் நகரம் முழுவதும், தட்டார்தெருப் பிரதேசம், கொட்டடி, நாவாந்துறை, மீனாட்ச்சிபுரம், காக்கைதீவு, கச்சேரிப் பிரதேசம் ஆகிய இடங்களில் 17.06.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.00 மணிவரையும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## நிரந்தர மருத்துவர் நியமனம்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அத்தியட்சகராக தர்மராஜன் வினோதன் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் தெல்லிப்பளை ஆதார வைத்தியாசலையில் பதில் வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (116

# வழிபாட்டுத் தல நிர்மாணம் அனுமதி பெறப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

புதிய மத வழிபாட்டுத் தலங்களை நிர்மாணித்தல் தொடர்பாக புத்த சாசனம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சினால் 02.09.2011 ஆம் திகதி வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் எந்தவொரு மத வழிபாட்டுத் தலத்தையேனும் நிர்மாணிக்கும் போது அமைச்சின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவ் அனுமதியை வழங்குவதற்கு குறிப்பிட்ட பிரதேசத்தின் பிரதேச செயலர், பிரதேச சபைத் தலைவர் ஆகியோரின் அறிவுரைகளும், சிபார்சுகளும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வழிபாட்டுத்தலங்களை நிறுவுவது தொடர்பில் யாழ்.மாநகர முதல்வரின் அறிவுரைகளும், சிபார்சுகளும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்படும் எந்தவொரு மதத்தைச் சார்ந்த அமைப்புப் பணியையும் அதன் ஆரம்பத்திலேயே தடுப்பதற்கு கிராமசேவை உத்தியோகத்தர்களின் பங்களிப்பும் இன்றியமையாததாகிறது.

# காணி உறுதியில் மோசடி சூத்திரதாரிக்கு பிணை

போலியான கையெழுத்து இட்டு காணி உறுதியில் மோசடி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவரை யாழ்.நீதிமன்றம் நேற்று பிணையில் செல்ல அனுமதித்தது.

சாவகச்சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த கனகசபை யோகநாதன் என்பவர் ஞானேஸ்வரி வசந்தகுமார் என்பவரின் 5 பரப்பு வீட்டுடன் கூடிய காணியை போலிக் கையெழுத்திட்டு தம் உடைமையாக்கிக் கொண்டதாக யாழ்.விடேச குற்றத் தடுப்புப் பொலிஸாரினால் யாழ்.நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

1953 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ஆம் திகதி குறித்த காணியை ஞானேஸ்வரி வசந்த குமாருக்கு சீதனமாக எழுதப்பட்டிருந்தது. 1987 ஆம் ஆண்டு இவ் ஆதனம் ஈடு வைக்கப்பட்டு 1988 ஆம் ஆண்டு தனது கணவரிடம் ஞானேஸ்வரி கனடாவுக்குச் சென்றிருந்தார். கனடாவில் வசித்து வந்த கணவர் கடந்த பத்து வருடங்களுக்கு முன்னர் இறந்து போயிருந்தார்.

இந்நிலையில் சந்தேக நபரான கனகசபை யோகநாதன் போலிக் கையெழுத்திட்டு அக் காணியைத் தனது பெயரில் மாற்றி உரிமையாக்கிக் கொண்டதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


நேற்று இவ்வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதவான் மா.கணேசராசா சந்தேக நபரை 40 ஆயிரம் ரூபாவுக்கான இரண்டு ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 12ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

சந்தேக நபரின் வாக்குமூலத்தைப் பதிவு செய்யுமாறும், முறைப்பாட்டாளரின் கையொப்பத்தை பெற்றுக்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு நீதிவான் கட்டளையிட்டார். (எஸ், 137)

## தினமுரசின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்



**8 ஆவது அகவையில்**




**பெயர் : கு.ஜெயராமன்,**
**முகவரி: 236/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

சாதி, மத, இன, மொழி முரண்பாடுகளுக்கு அப்பாற்பட்ட தேசியக் கண்ணோட்டமும், ஒற்றுமை மனப்பான்மையும்தான் நம் நாட்டை வளமிக்கதாக உருவாக்க வழி வகுக்கும். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## அற்ப சந்தோஷங்களில் முடியும் அரசியல்!

இங்கிலாந்து மகாராணி பதவியேற்று 60 ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டிய வைர விழாக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருக்கிறார் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ. இலங்கையில் நல்லிணக்கத்துக்கும் அமைதிவாழ்வுக்குமாக அவாவுகின்ற இரு இனங்களும் லண்டன் வீதிகளிலும் தங்கள் நோக்கத்திற்கு மாறாகக் கொடி பிடித்திருக்கின்றன.

மகிந்தவுக்கு எதிராகவும் ஆதரவாகவும் ஆர்ப்பாட்டங்களை நடத்துவதில் சகோதரத்துவ ஒற்றுமையை வெளிக்காட்டியுள்ளன. லண்டனில் சிங்களவர்களை விடத் தமிழர்கள் பெரும்பான்மை என்பதால் புலம்பெயர் தமிழர்கள் விரும்பும் புலிக் கொடிகளே அதிகம் தெரிந்தன. ஒருவேளை மகிந்த திரும்பிய பின் இலங்கையில் பெரும்பான்மைக் கொடிகள் சிங்கமாக உயர்ந்து புலிக் கொடிகளுக்குப் பதில் சொல்லலாம்.

இருதரப்பிலும் இந்தப் போட்டியைப் பிரதானப்படுத்தி மக்களை மகிழ்விக்கும் ஊடகங்கள், இந்தக் கொடிகளின் எண்ணிக்கையையே "கிரிக்கெட் ஸ்கோர்" போல அறிவித்து வெற்றியை நிரூபிப்பதில் எக்காளமிடுகின்றன. லண்டன் வீதிகளில் இலங்கை ஜனாதிபதி திணறுவதாக மகிழ்ச்சி வெளியிடுகின்றன இங்குள்ள தமிழ்ப் பத்திரிகைகள்.

இந்த மகிழ்ச்சிதானா மக்களுக்கு வேண்டியது? இதன் மூலமா நாம் தீர்வுக்குச் சென்றுவிடலாம் என்று இன்னும் நம்புகிறோம்? இந்தப் பகையுணர்ச்சியை வற்றிப்போக விடாமல் கிளறிக் கிளறிக் கொந்தளிக்க விடுவதன் மூலம் சிங்கள ஆட்சியாளர்களைப் பணிய வைத்து ஒதுக்கிவிட்டு நாம் தனித்து வாழ்ந்து விடலாம் என்ற மாயையிலேயே மக்களை மகிழ்ச்சிப்படுத்தி வருவதா?

பழிவாங்கும் உணர்ச்சிகளையும், பகைவெறுப்பு ஆவேசத்தையும் தூண்டிவிடும் விதமாகவே இந்த ஊடகங்கள் எழுதிவருகின்றன. இத்தனை பேரவலம் நிகழ்ந்து மக்கள் நொந்து கிடக்கையில், முன்பிருந்த ஆதாரங்களும் கூட இல்லாமல், கொஞ்சங் கூட பொறுப்பற்று மக்களை அழிவுக்குத் தூண்டும் வார்த்தைகளையும் அற்ப சந்தோஷங்களையும் விநியோகித்துக் கொண்டிருக்க எப்படி முடிகிறது என்று திகைப்பாக இருக்கிறது.

வெறுப்பை ஒருபோதும் வெறுப்பினால் சாந்தப்படுத்த முடியாது. பகையை பகையினால் வெல்வது சாத்தியமில்லை என்பதெல்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே மனிதகுலம் அறிந்துவிட்டதுதான் என்றாலும், இன்னமும் ஊகங்களையும் உணர்ச்சி வேகங்களையும் கொட்டி அழிவதிலேயே முனைப்பாயிருக்கிறோம் நாம்.

எங்களுக்குப் பிரச்சினைகள் உண்டு. அவற்றிலிருந்து புத்தி சாலித்தனமாக மீள வேண்டிய தேவை உண்டு. இதையெல்லாம் யாரும் மறுப்பதற்கில்லை. ஆனால் நமது தீர்வுக்காக நாம் வன்முறை எதிர்ப்பாவேச வழிகளை நாடி, பலமும் அடைந்து கொண்டிருக்கிறோம் என்ற மாயையை ஊட்டிக் கொண்டிருப்பது எவ்வளவு தவறு?

மீண்டும் மீண்டும் பழைய மிரட்டல் வழியையே கிட்டவோ தூரவோ இலக்காகக் காட்டி அரசியல் செய்துகொண்டிருப்பவர்கள் மக்களை முழு முட்டாள்களாயடித்துக் குளிர்காய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தவிர வேறொன்றுமில்லை. மக்களுக்கான வாழ்வைத் தேடித்தர வேறெந்த வழியையும் காண முடியாத இவர்கள் வன்முறையையும், பகைவெறுப்பை எரியவிடுவதையும் தவிர மற்றதெல்லாம் பணிந்து போதலே என்று சொல்லி மக்களை ஏமாற்றுகிறார்கள்.

ஒவ்வொருவருக்குமோ அல்லது ஒவ்வொரு குழுவுக்குமோ தனித்தனி உண்மை இருக்கும்போது, அந்த இருதரப்பும் வாழ்வதற்குரிய நியாயம் வன்முறையால் எப்படி உருவாகும்? ஒரு உண்மையை அழித்து மறு தரப்பை நிலைநாட்டுதல் எப்படி நாகரிகமடைந்த மனிதகுலத்தின் ஏற்பாடாக இருக்க முடியும்? வன்முறை ஆவேசங்களின் பலவீனத்தையும், மனிதவிரோத பிற்போக்குத் தன்மையையும் நாம் ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளாமல் நம் வாழ்வுக்கு வழிகாண முடியாது.

- ஆசிரியர்

# வெற்றிகரமாக நிறைவடைந்த ஜனாதிபதியின் பிரிட்டன் விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரித்தானிய விஜயம் வெற்றிகரமாக அமைந்துள்ளது என வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தில் பிழையான தகவல்களை வெளியிடும் தரப்பினருக்கு ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயம் சிறந்த பதிலடியாக அமைந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தொடர்பான சரியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தார்.

பிரித்தானியாவின் பல உயரதிகாரிகளை ஜனாதிபதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

நாட்டின் நிலைமைகள் குறித்து பிரித்தானிய அதிகாரிகள், ஜனாதிபதியிடம் திருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயம் நடைமுறைச் சாத்தியமான வெற்றியளித்துள்ளது.

பிரித்தானிய மகாராணி எலிசபெத்தை ஜனாதிபதி மூன்று தடவைகள் சந்தித்தார்.

பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பேச்சுவார்த்தை நடத்தினார். பிரித்தானிய எதிர்க்கட்சித் தலைவர் எட் மில்லிபாண்ட்டையும் ஜனாதிபதி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்த சந்திப்புக்களின் போது பிரித்தானிய மக்களிடையே இலங்கை தொடர்பான நன்மதிப்பை மேம்படுத்த ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

குறிப்பாக சில தரப்பினர் இலங்கை தொடர்பில் பிழையான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும், இந்தப் பிரசாரங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிறந்த பதிலை வழங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத மின்சாரத்தால் 22 இலட்சம் ரூபா வருமானம்

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்டவிரோதமாக மின்சாரத்தை பயன்படுத்தியவர்களிடமிருந்து 22 இலட்சத்து 26 ஆயிரம் ரூபாவுக்கும் மேற்பட்ட தொகை அபராதமாக அறவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மின்சாரத்தை பயன்படுத்துவோரை கைது செயவதற்கான நடவடிக்கைகள் மாவட்டங்கள் தோறும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

இதன் ஒரு கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தில் கடநத மாதம் 19 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின்போது சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பயனபடுத்திய 94 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 14 பேர் மின் மானிகளில் மாற்றங்களை செய்திருந்ததாகவும் ஏனைய 80 பேரும் கொக்கிகளை பயன்படுத்தி சட்டவிரோதமாக மின்சாரத்தை பெற்றிருந்ததாகவும் சபை மேலும் தெரிவித்துள்ளது.

### வட மாகாண மட்ட கணிதப் போட்டி முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி...)

தமிழ் மொழி மூலம் மேற்பிரிவு - தரம் - 9

ரி.அபிஷேகா, என்.டிலக் ஈஸ்வரன், எஸ்.சுபனிலா.

தரம் - 10

ஜி.கஜானன், சுபாகரன் (யாழ. இந்துக் கல்லூரி), எஸ்.கார்த்திகா (வேம்படி மகளிர் கல்லூரி).

கணித நாடகப் போட்டி (கீழ்ப் பிரிவு)

புதுக்குளம் மகா வித்தி.

கணித நாடகப் போட்டி (மேற்பிரிவு)

மன்னார் - சின்னப்பண்டிவிரிச் சான்குளம் மகா வித்தியாலயம்.

## அனுமதியற்ற பேருந்து சேவை; 60 உரிமையாளர்கள் மீது வழக்கு

அனுமதிப்பத்திரம் இல்லாமல் கொழும்பிலிருந்து வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 60 பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய தேசிய போக்குவரத்து ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் 10 நாட்களுக்குள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் குறித்த பேருந்துகள் சுற்றி வளைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு, பேலியகொடை, பாலத்துறை மற்றும் முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படதாகவும் புதக்கடை மற்றும் மஹர நீதிமன்றங்களில் பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சேவையில் ஈடுபடுத்தபட்ட 46 பேருந்துகளும் மட்டக்களப்பிற்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 7 பேருந்துகளும் திருகோணமலைக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட 3 பேருந்துகளும் கல்முனை மற்றும் கொக்கட்டிச்சோலை ஆகிய பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட தலா இரு பேருந்துகளும் இவ்வாறு சுற்றி வளைக்கப்பட்டுள்ளன.

மாகாண பயணிகள் போக்குவரத்து சேவைக்கான அனுமதப்பத்திரத்தை பெற்றுக்கொள்ளாமல் சட்டவிரோதமாக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படுவதால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பெருந்தொகை பணத்தை இழக்க நேரிடுவதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அத்தோடு உரிய கட்டணத்தை செலுத்தி அனுமதிப் பத்திரம் பெற்றுள்ள பேருந்து உரிமையாளர்களுக்கு இதனால் அநீதி இழைக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் தூரப் பிரதேச சேவையில் ஈடுபடுத்தப்படும் பேருந்துகளில் பயணப்போரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் ஆணைகுழு தெரிவிக்கிறது.

இதேவேளை நாட்டின் மேலும் சில பகுதிகளில் அனுமதிப்பத்திரம் இல்லாமல் சேவையில் ஈடுபடுததப்பட்ட 44 பேருந்துகளின் உரிமையாளர்களுக்கு எதிராகவும வழக்குத்தாக்கல் செய்யபபட்டுளளது.

## மானிப்பாய் வீதிகளுக்கு வேண்டும் மின்விளக்கு

யாழ்ப்பாணம் - மானிப்பாய் வீதியிலும் அதன் சிறிய பாதைகளான ஜின்னா வீதி, நாவலர் வீதி, மாவடி வீதி, பிரப்பங்குளம் வீதி போன்ற வீதிகளல் நெடு நாடகளாக வீதி மின்விளக்குகள் இன்றி இருளில் மூழ்கிக் காணபபடுகின்றன.

இதனால் இரவுவேளைகளிலும் அதிகாலை வேளையிலும் பிரயாண நிமித்தமும், தொழில் நிமித்தமும் வீதியில் செல்வோர் பயப்பீதியுடன் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

குறிபபாக அதிகாலை வேளையில் திருடர்களின் தொல்லையை பிரயாணிகள் அனுபவிப்பதாகவும், இரவு வேளைகளில் திருடர்கள் தமது கைவரி சையைக் காண்பிப்பதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதிகளுக்கு வீதி மின்விளக்குகளைப் பொருத்த சமபந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (105)

## யாழ். பள்ளிவாசல்களில் ஜும்மா பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் பகுதியில் வாராந்த ஜும்மா பிரசங்கமும் தொழுகையும் நேற்று இரு பள்ளிவாசல்களில் நடைபெற்றன.

பெரிய பள்ளிவாசல்களிலும், புதிய மொஹிதீன் பள்ளியிலும் நடைபெற்றபோது உலமாக்களின் சிறந்த சமூக சீர் திருத்தங்கள் பற்றிய உபதேசம் இடம்பெற்றன.

எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மஸ்ஜித் முகம்மதியாவிலும், மானிப்பாய் வீதி முஹிதீன் பள்ளியிலும் இடம்பெறும்.

தற்போது மீள்குடியேறியுள்ள மக்களினது தொழில், கல்வி போன்றவற்றிற்காக வந்துள்ளவர்களின் தொகை அதிகரிப்பினால் இரண்டு பள்ளியில் ஜும்மா நடைபெறும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. கடந்த 1990 ஆம் ஆண்டுக்கு முன்னரும் இரு பள்ளிகளில் ஜும்மா நடைபெற்று வந்தன. அதே நடைமுறையை பின்பற்றியே தற்போதும் நடைபெறுவதாக பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (105)

# பச்சிலைப்பள்ளி - இத்தாவிலில் மக்கள் மீள்குடியேற்றம்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியான இத்தாவில் கிராமத்தில் 12 வருடங்களின் பின் தற்போது மீள்குடியேற்றம் இடம் பெற்று வருகிறது.

இதன் முதற்கட்டமாக முருகன் கோவில் வீதிக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள பகுதிகளில் மீள்குடியேற்றம் அண்மையில் இடம்பெற்றுளளது.

இப்பகுதியில் 2000 மாம் ஆண்டும் 2006 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் கடும் மோதல்கள் இடம்பெற்றதால் வீடுகள் வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் என அனைத்துக் கட்டடங்களும் தரைமட்டமாகக் காட்சியளிக்கின்றன.

கிணறுகள் சில மூடப்பட்டும் இடிந்த நிலையிலும் காணப்படுகின்றன. குடியிருப்புக்களை மூடிப் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதால் இப்பகுதி முன்பு ஆள்நடமாட்டம் அற்ற பகுதியாகவே காட்சியளித்தது.


தற்போது மக்கள் இரவு பகலாக அங்கு தங்கி நின்று காணிகளை துப்புரவு செய்து வருகின்றனர். கிணறுகளைத் துப்புரவு செய்வதற்குப் பிரதேச சபையினரால் நீர் இறைக்கும் இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சமூக தொண்டு நிறுவனங்கள் மக்கள் மத்தியில் கண்ணிவெடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

பிரதான வீதியால் செல்லும் போக்குவரத்துப் பேருந்துகள் இவ்விடத்தில் தரித்து நின்று செல்வதற்கு தரிப்பிடக் குறியீடுகளோ அல்லது தரிப்பிட நிலையங்களோ இல்லாததால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், எனவே மக்களின் நன்மை கருதி தரிப்பிடக் குறியீடுகளை இடுவதுடன் தரிப்பிடக் கட்டடங்களை அமைத்து உதவுமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் மிகுதி கிராமங்களிலும் மிதிவெடியகற்றும் பணிகளை துரிதப்படுத்தி தம்மையும் விரைவாக மீள்குடியேற்றம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அயற்கிராம மக்கள் உரிய தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (11)

## ஏற்றுந்தன் திருக்கொடியை



**எழிலான வண்ணைத் திருநகரினிலே**
**எழுந்தருளும் வீரமாகாளியே ஏற்றுந்தன் - திருக்கொடியை**
**பொழிலான இம்மவானத்தில் ஆரோகணித்து**
**போற்றும் அடியார் துயர் தீர்க்க ஏற்றுந்தன் - திருக்கொடியை**
**தமிழ் மன்னர் அரசாண்ட திருநகரில்**
**தாமதமில்லாத தீர்வருள ஏற்றுந்தன் - திருக்கொடியை**
**அமிழ்தான தமிழாலே உன் அடி தொழுகின்றோம்**
**அன்னையே வீரமாகாளியே ஏற்றுந்தன் - திருக்கொடியை**

இன்று சனிக்கிழமை வண்ணை
வீரமாகாளியம்பாள் கொடியேற்றம்.

மதுரகவி காரை. எம்.பி.அருளானந்தம்

## காலாவதியான பொருட்களை விற்ற 23 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு

(யாழ்ப்பாணம்)




பாவனையாளர் அதிகார சபையினால் 23 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ் மாவட்ட அதிகாரி ந.சிவசீலன் தெரிவித்தார். பருத்தித்துறைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை மேற்கொண்டதற்கு அமைவாகவே குறித்த 23 வர்த்தகர்களுக்கு எதிராக பாவனையாளர் அதிகார சபையினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இவ்வர்த்தகர்களுக்கு எதிரான வழக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 28 ஆம் திகதி தாக்கல் செய்யப்படவுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி தெரிவித்தார். (எஸ்)

## கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் உரியவர்களிடம் கையளிப்பு

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் 54.05 சதுர மீற்றர் பிரதேசம் மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தால் வெடி பொருட்கள் அகற்றப்பட்டு அந்தந்த பிரதேச செயலர்களிடம் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பெரியகுளம் பகுதியிலும் கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவில் பொன்நகர், உருத்திரபுரம் வடக்கு, புதுக்குடியிருப்பு, பெரியபரந்தன், ஆகிய பகுதிகளிலும் பூநகரி பிரதேச செயலர் பிரிவில் ஜெயபுரம் வடக்கு, வன்னேரிக்குளம், பல்லவராயன்கட்டு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 54.050 சதுர மீற்றர் பகுதிகளே வெடி பொருள் அகற்றப்பட்டு அந்தந்தப் பகுதி பிரதே செயலரிடம் அதற்கான சான்றிதழ் கையளிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை, விவசாயநிலங்கள், பொதுமக்களது வாழ்விடங்களை உள்ளடக்கிய இந்தப் பகுதிகளிலிருந்து 1733 மனித எதிர்ப்பு மிதிவெடிகளும், 2114 வெடிக்காத வெடி பொருட்களும் மீட்கப்பட்டிருப்பதாக யாழ்.கிளிநொச்சி மாவட்டங்களின் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இப்பகுதிகளில் டாஸ், கலோரஸ்ட் மற்றும் டெனிஸ் மனிதநேய கண்ணிவெடியகற்றும் நிறுவனங்கள் வெடி பொருட்களை அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## செயலமர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையான வகுப்புக்களுக்கு கர்நாடக சங்கீதம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் 4 மணிவரை நடைபெறவுள்ளது.

புலோலி மெ.மி.த.க பாடசாலையிலுள்ள ஆசிரியவள நிலையத்தில் நடைபெறும் இச்செயலமர்வில், குறித்த பாடத திற்குரிய ஆசிரியரை தவறாது கலந்து கொள்ளச் செய்யுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (109)

## மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடுவோருக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு யாழ் மாவட்ட மட்பாண்ட கைத்தொழிலை மேம்படுத்தும் நோக்கில் இத்தொழிலில் ஈடுபடுவோருக்கு பொருத்தமான பயிற்சி மற்றும் உதவிச்சேவைகள் போன்றவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த வகையில் தற்போது மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபடுவோருடனான கலந்துரையாடல் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ கே.என். டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப 10.00 மணிக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் இத்தொழிலில் ஈடுபடுவோர் மற்றும் இத்துறையுடன் தொடர்பான பங்காளர்களாகக் கலந்து கொள்ளுமாறும், இது தொடர்பாக மேலதிக விபரங்கள் தேவைப்படுமிடத்து தேசிய வீடமைப்பு கட்டடத்தில் அமைந்துள்ள கைத தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ள முடியுமெனவும் (தொலைபேசி இல. 021222 2421) பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்துள்ளார்.

## வடமராட்சி வலய மட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வலய ஆரம்பப் பிரிவு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற சித்திரப் போட்டியில் வலய மட்ட போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

அவ் விபரங்கள் வருமாறு,

தரம் -1

ச.தட்சா (நெல்லியடி மெ.மி.த.க பாடசாலை), ரூ.ரூபிணி (மேலைப் புலோலி, சைவப்பிரகாச வித்தி), ரோ.தர்மிகா (யாழ். அல்வாய் சின்னத்தம்பி வித்தி).

தரம் -2

இ.இசைவிழி (செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை), சி.சாருஜா (யாழ். துன்னாலை வடக்கு மெ.மி.த.க.பாடசாலை), தே.தேனுஜா (சித்தி விநாயகர் வித்தி).

தரம் -3

கு.வினுஜா (தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயம்), நி.தலக்சன் (உடுப்பிட்டி அ.மி.கல்லூரி), கு.பிரணவன் (யாழ் அல்வாய் சின்னத்தம்பி வித்தி).

தரம் -4

யோ.ஜனோசன் (தேவரையாளி இந்துக் கல்லூரி), சு.வனஜா (யாழ்.தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), யோ.பிரியங்கா (மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தி).

தரம் -5

வே.யூட்திவ்வியராஜ் (கட்டைவேலி மெ.மி.த.க.பாடசாலை), ஜே.சர்மினி (யாழ். வடஇந்து ஆரம்ப பாடசாலை), த.அபிராமி (யாழ்.மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தி). (109)

## கிளிநொச்சி விவசாய திணைக்களத்தால் எள்ளு செய்கையை ஊக்குவிக்கத் திட்டம்





(கிளிநொச்சி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தின் எள்ளுச்செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு GTZ நிறுவன நிதி அனுசரனையுடன் கிளிநொச்சி விவசாயத் திணைக்களத்தினால் (விரிவாக்கம்) நடைமுறைப்படுத்தப்பட்ட எள்ளுச்செய்கைக்கான அறுவடை அண்மையில் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் பெரியகுளம் கிராமத்தில் விவசாய போதனாசிரியர் திருமதி கேமா கமலதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில், எள்ளிற்கான பெறுமதி சேர் நடவடிக்கைகளை ஊகதுவிப்பதற்கும் நல்லெண்ணை உற்பத்தியை ஊககுவிப்பதற்கான கைத்தொழிலை விரிவுபடுத்தவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனத் தெிவித்தார்.

மேலும், மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராஜா கருத்துரை வழங்குகையில், எளளுச்செய்கையின் முக்கியத்துவம் மற்றும் சிறந்த விளைச்சலைப் பெறுவதற்கான தொழிநுட்பங்களையும் எடுத்துரைத்தார். காலபோகத்தல் எதுவித நீர்ப்பாசனமுமின்றி எள்ளின் சராசரி விளைவாக ஏக்கருக்கு 200 Kg வரை பெறப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வடமாகாண விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த உதவி விவசாயப்பணிப்பாளர், GTZ திட்ட அலுவலர், கிராம உத்தியோகத்தர், கமக்கார அமைப்புகள், விவசாயிகள் மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (69)

- வாக்காளர் இடாப்பில் -

# 25 வயதிற்குட்பட்ட பதிவு செய்யாத பெயர்களை பதியுமாறு அறிவுறுத்து

யாழ்.மாவட்டத்தில் 25 வயதிற்குட்பட்டவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் பதியப்படாமல் தவறவிடப்பட்டிருப்பின் அதனைப் பதிவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ. குகநாதன் அறிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக தெரிவிக்கையில; குறித்த வயதிற குட்பட்டவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படாமல் இருப்பின் உரிமை கோரிய விண்ணப்பப் படிவத்தினைப் பூரணப்படுத்தி தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

பதிவு செய்யப்படும் நபரின் பெயர் ஒரே குடும்பத்தில் சேர்க்கப்படலாம். அல்லது வேறு குடும்ப்த்தில் சேர்க்கப்படுவதனால் கிராமசேவையாளர் பதிவை மேற்கொள்ளவில்லையெனின் அதற்குரிய தகுந்த காரணத்தை சமர்ப்பித்து அடையாளம் தெரிவிக்கப்படுமிடத்து உரிமை கோரிக்கை விண்ணப்பபடிவத்தினை அனுப்ப வேண்டும்.

எனவே பொதுமக்கள் தங்கள் குடும்பத்தில் குறித்த வயதிக்குட்பட்டவர்களின் பெயா பதியப்படாமல் இருப்பின் பதிவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எஸ்)



மணியத்தோட்டம் மீள்குடியமர்ந்த மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள வீதிகளுக்கான மின் விநியோகத்தை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கையாக எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி.பி நல்லூர் பிரதேச அமைப்பாளருமான ரவீந்திரதாஸன் மற்றும் மின்சார சபை உத்தி யோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் மின்கம்பங்கள் பறிக்கப் படுவதைக் காணலாம்.

# பாடசாலை தரமுயர்வு

(பருத்தித்துறை)

வடமராட்சி வலயத்தில் உள்ள யாழ்.தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய தரம் I - C வகைப் பாடசாலையாக தர்முயர்த்தப்பட்டுள்ளது.

க.பொ.த. உயர்தர கலைப்பிரிவு வகுப்புக்களை ஆரம்பிக்க வடமாகாண கல்வித்திணைக்களத்தின் கட்டமைப்பு குழுவினால் பரிந்துரை செய்தமைக்கமைய கல்வியமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அனுமதி வழங்கியுள்ளார். (109)

# கிளிநொச்சி விவசாய பிரிவினால் வீட்டுத் தோட்டப் போட்டிக்கு விண்ணப்பம்

(கிளிநொச்சி)

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் 2012 ஆம ஆண்டுக்கான வீட்டுத்தோட்டப் போட்டிகள் இவ் வருடம் ஆவணி மாதத்தில் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வீட்டுத்தோட்டப் போட்டிகள் கிராம வீட்டுத் தோட்டம், பாடசாலைத்தோட்டம், மாணவர் வீட்டுத் தோட்டம், அலுவலகத்தோட்டம், அலுவலர் வீட்டுத் தோட்டம் எனும் 05 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு நடாத்தப்படும்.

ஒவ்வொரு வகையான வீட்டுத்தோட்டங்களிற்கும் போட்டியாளர்கள் விவசாய போதனாசிரியர் பிரிவு ரீதியில் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு, முதலிடத்தை வகிக்கும் போட்டியாளர்கள் மாவட்ட மட்டப்போட்டியில் பங்கு கொள்ள முடியும். ஒவ்வொரு வகையிலும் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம், முன்றாம் இடங்களைப் பெற்றுக்கொள்ளும் வெற்றியாளர்களுக்கு பெறுமதியான பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் போட்டியாளர்கள், அலுவலகங்கள், பாடசாலைகள் தங்கள் பகுதிக்கான விவசாயப்போதனாசிரியரிடமோ அல்லது கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் (விரி) அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ( 0212285726 அல்லது 0772148755 ) மூலமாகவோ தொடர்பு கொண்டு எதிர்வரும் யூலை 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வெற்றியாளர் தெரிவின் போது திட்டமிடப்பட்ட பயிர்ச்செய்கை, மண்பாதுகாப்பு முறைகள்; சேதனப் பசளைப்பாவனை, இயற்கை முறை பீடைக்கட்டுப்பாடு, போசாக்கு உண்வு உற்பத்தி, மிகை உற்பத்திகளைப் பாதுகாபதற்கான செயற்பாடுகள், ஒருங்கிணைந்த பயிர் விலங்கு வேளாண்மை போன்ற பல விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (69)

# கைத்தொலைபேசி பாவித்த இருவருக்கு விளக்கமறியல்

(திருநெல்வேலி)

யாழ்.சிறைச்சாலைக்குள் கைத்தொலைபேசியில் கதைத்த இரண்டு விளக்கமறியல் கைதிகளுக்கு யாழ்.நீதவான் மா.கணேசராசாவினால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 24ஆம் திகதியும் யாழ்.சிறைச்சாலைக்குள் இக்கைதிகள் கைத்தொலைபேசியில் வெளியாருடன் உரையாடியதாக சிறைச்சாலை அதிகாரியினால் யாழ்.நீதவானிடம் அறிவிக்கப்பட்டிருந்தது.

யாழ்.சிறைச்சாலைக்குள் சென்ற நீதவான் சிறைச்சாலையில் உள்ளக விசாரணையை நடத்தினார். விசாரணை முடிவில ஒருவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதுடன். மற்றொருவருக்கு இரண்டு வார சாதாரண சிறைத்தண்டனையை அனுபவிக்குமாறு உத்தரவிட்டார். (137)


# நிர்வாகிகள் தெரிவு

(பூநகரி)

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 7 ஆம் திகதி பூநகரி பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச உதவித் திட்டமிடப் பணிப்பாளர் வி. சொக்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் புதிய நிர்வாகத் தெரிவில், தலைவராக பூநகரி பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார், துணைத்தலைவராக சொக்கநாதன், செயலாளராக கலாசார உத்தியோகத்தர் திருமதி ரஜனி நரேந்திரா, உதவி செயலாளராக க.யோகராசா, பொருளாராக கு.குகேந்திரன் ஆகியோரும், செயற்குழு உறுபபினர்களாக 10 பேரும் தெரிவு செய்யப்பட்டனர். 'புகுந்துணர்' சஞ்சிகைக்கான ஆசிரியர் குழுவில் கு.சிவலிங்கம், பொன்.தில்லைநாதன், இ.குபேந்திரன், என்.சுபேந்திரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (112)

# பரமர் சங்கமம்



யாழ் - காரைநகர் பகுதியில் வலுவிழந்த தமிழ்ச் சிறுமியை அப்பகுதிக்கு பழைய இரும்புக் கொள்வனவில் ஈடுபடச் சென்ற தென்.பகுதி முஸ்லிம்கள் இருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்த முயன்றனர்.

இவ்விசயம் ஊடகங்கள் மூலம் வெளிவந்ததைத் தொடர்ந்து யாழ்.முஸ்லிம் பகுதியைச் சேர்ந்த முற்போக்குச் சிந்தனையாளர் சிலர் சேர்ந்து அது விடயமாகவும், அதனில் ஈடுபட்டவர்கள் சம்பந்தமாகவும் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தனர்.

அந்த அறிக்கையில், பாலியல் சம்பவத்துடன் தொடர்புடைய இரு முஸ்லிம்களுக்கும் மிகவும் உச்சக் கட்டத் தண்டனை வழங்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டிருப்பதைப் படிக்க முடிந்தது.

இது வரையில் அவ்வாறான நடுநிலை சிந்தனையுடன் தமது சமூகத்தைச் சேர்ந்த இளைஞர் செய்து விட்ட இழிகரச் செயலுக்கு ஒரு சமூகம் முன்வந்து பொறுப்புக் கூற முனைந்திராத செயலைச் செய்ததனாலேயே அதனை முற்போக்குக் காரியமெனக் குறிப்பிட்டேன்.

இது போன்று வெவ்வேறு சமூக மட்டத்தினரும் துணிந்து முன்வந்து இழிகரச் செயல்களைச் செய்யும் குழுவினரைச் சமூகத்திலிருந்துகளை நீக்கி வந்தால் எதிர்காலம் பல்வகைச் சமூகங்களும் சேர்ந்து வாழும் சூழலில் ஆரோக்கியமான சமுதாயத்தை வென்றெடுக்க முடியுமல்லவா?

தொண்ணூறுகளில் புலிகள் வட பகுதி முஸ்லிம்களை 150 ரூபா பணம் மற்றும் 'சொப்பிங் பாக்' அடங்கிய பாவனைப் பொருட்களுடன் வெளியேற்றிய காட்டு மிராண்டிச் செயலதால் இரு சமூகங்களுக்கும் இடையே பாரிய விரிசல் ஏற்பட்டிருந்தது.

இரண்டாயிரம் ஆண்டுக்குப் பிற்பாடு அந்நிலைமை சிறுகச் சிறுக மாறி இப்பொழுதெல்லாம் பழைய அந்நியோன்னியம் இரு சமூக மக்கள் மத்தியிலும் முளை விட்டுக் கொண்டிருக்கையில், திரும்பவும் விளைவிக்கும் செயற்பாடுகள் மறைமுகமாக நடந்து வருவதைப் பார்த்தால் எதிர்காலம் சூனியமாகவே தெரிகிறது.

அதாவது மாகியப் பிட்டியைச் சேர்ந்த தமிழ்ச் சிறுவன் ஒருவன் முஸ்லிம்களால் கடத்தப்பட்டு கிழக்கு மாகாணம் காத்தான்குடிக்குக் கொண்டு செல்லப்பட்டு கொத்தடிமையாக வைக்கப்பட்டிருந்து முஸ்லிமாகவும் மாற்றப்பட்டிருக்கும் தகவல்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கடத்தப்பட்ட பாடசாலை மாணவனான ரஜீராம் திரும்பவும் யாழ்ப்பாணக் கடையொன்றுக்குப் பணியாளராகக கொண்டு வரப்பட்டதுதான் விந்தையான விடயம்.

அதனாலேயே இதுவரை மறைமுகமாக இருந்த காரியம் வெளிச்சத்துக்கு வந்தது. பாலியல் செயற்பாடும், சிறுவனது கடத்தலும் மீண்டும் இரு சமூகங்களுக்கும் இடையில் நம்பகத்தன்மையைத் தோற்கடித்துள்ளது.

இவையெல்லாம் புலிகளின் செயற்பாட்டிற்கு பழி தீர்க்கும் செயற்பாடாகவே சந்தேகிக்க வேண்டி வருவதைத் தவிர்க்க முடியாமல் இருக்குதெல்லே சொல்லுங்க பாப்பம்...

# முரசின் இன்றைய பலன்

(09.06.2012 - சனிக்கிழமை)

நந்தன வருஷம் வைகாசி மாதம் 27 ஆம் திகதி. பஞ்சமி பிற்பகல் 9.06 வரை.
நட்சத்திரம் திருவோணம் காலை 6.55 வரை. சித்தயோகம்.
இராகுகாலம் 08.52 - 10.22 வரை. சுபநேரம் 2.52 - 4.22 வரை.
எமகண்டம் 1.22 - 5.52 வரை. குளிகைகாலம் 5.52 - 7.22 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | கவலை அதிகரிப்பு, உடல்நலனில்கவனம், நிதானத்துடன் செயற்படு, பிரார்த்தனை அவசியம். |
| ரிஷபம் | கவலைகள் அதிகரிப்பு, கடன் பட நேரிடும், சகோதரரால் நன்மை, உறவுகள் பலம் பெறும். |
| மிதுனம் | கவனம் அவசியம், எதிர்பாராத பணவரவு, மதம் மாறி திருமணம், பிரிந்தவர் ஒன்று கூடுவார். |
| கடகம் | மனச்சஞ்சலம், புத்திரரால் மகிழ்ச்சி, திருமணப் பிரஸ்தம், திருப்திகரமான குடும்ப உறவு. |
| சிம்மம் | பயண வெற்றி, எதிர்ப்புகள் மறையும், அதிகாரிகள் பாராட்டு, பொன் பொருள் சேரும். |
| கன்னி | வெற்றிகரமான நாள், வங்கிக்கடன்கள் கிடைக்கலாம், புத்திர பாக்கியம் கிட்டும். |
| துலாம் | புகழ்ச்சி, குறைவற்ற பணப்புழக்கம், ஆடம்பர வாழ்க்கை, ஆசைகள் நிறைவேறும். |
| விருச்சிகம் | நண்பர்கள் உதவி, சண்டை சச்சரவு அகலும், கல்வியில் மந்த நிலை, தொழிலில் இலாபம். |
| தனுசு | பெருமை, உறவினர் நண்பர் அனுகூலம், குடும்பத்தில் ஒற்றுமை, சீரான உடல் நிலை. |
| மகரம் | சௌக்கிய வாழ்வு, அதிகாரிகளுடன் பக்குவமாக நடக்கவும், கல்வியில் முன்னிலை. |
| கும்பம் | சுபதினம், எதிர்பாராத நற்செய்தி, பணிச்சுமை அதிகரிக்கும், மறுமண வாய்ப்புக்கு இடமுண்டு. |
| மீனம் | இலாப தினம், தொழில் நிமித்தம் வெளிநாடு, சுப காரியங்கள், எதிர்பாராத வெற்றி. |

## மழை விளையாடியது

(லண்டன்)

இங்கிலாந்து - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டம் இடம்பெறவிருந்த போதிலும் கடும் மழை காரணமாக முதல் நாள் ஆட்டம் முழுவதும் கைவிடப்பட்டது. நேற்றைய தினத்தில் நாணயச்சுழற்சியும் இடம்பெற்றிருக்கவில்லை.

இங்கிலாந்தின் எட்ஜ்பஸ்டனில் இலங்கை நேரப்படி மாலை 3.30 இற்கு முதல்நாள் ஆட்டம் ஆரம்பிக்கப்படவிருந்த போதிலும், காலையிலிருந்து தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக போட்டியை ஆரம்பிக்க முடியாது போனதோடு இங்கிலாந்து நேரப்படி 3.30 இற்குப் போட்டி கைவிடப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

## லசித் உத்தியோகபூர்வ தூதுவர்

(டுபாய்)

இலங்கையில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐ.சி.சி.யின் ருவென்ரி -20 உலகக்கிண்ண சுற்றுப்போட்டிக்கான உத்தியோகபூர்வ தூதுவராக வேகப் பந்துவீச்சாளர் லசித் மலிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) இன்று அறிவித்துள்ளது.

ஐ.சி.சியின் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் இத்தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

29 வயதான லசித் மலிங்க, இலங்கை அணியின் முக்கிய பந்துவீச்சாளர் ஆவார். குறிப்பாக ஒருநாள் மற்றும் ருவென்ரி-20 போட்டிகளில் இவர் அணியின் மிக முக்கிய வீரராக விளங்குகிறார். ஐ.பி.எல். போட்டிகளில் மும்பை இண்டியன்ஸ் அணிக்காகவும் அவர் விளையாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஐ.சி.சி. ருவென்ரி-20 உலகக்கிண்ண சுற்றுப் போட்டி இலங்கையில் நடைபெறவுள்ளமை இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.



மும்பையில் நேற்று நடைபெற்ற ரியாலிட்டி ஷோவில் பங்குகொண்ட முன்னாள் இலங்கை அணித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய நடனமாடுவதைக் காணலாம்.



## ஒப்பந்தம் முடிவு நடுவர் ஓய்வு

(துபாய்)

சர்வதேச கிரிக்கெட் சபையின் சிறந்த நடுவர்கள் குழுவில் இடம் பெற்று இருந்த மேற்கிந்தியத்தீவின் டொமினிகாவை சேர்ந்த பில்லி டாக்ட்ரோவ்வின் ஒப்பந்தம் இந்த மாதத்துடன் முடிவடைகிறது. இந்த நிலையில் நடுவர் பதவியில் இருந்து ஓய்வு பெறுவதாக பில்லி டாக்ட்ரோவ் அறிவித்துள்ளார். இலங்கை - பாகிஸ்தான் அணிகள் இடையிலான ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டியில் பணியாற்றுவதில் இருந்து அவர் விலகி உள்ளார். அவரது குடும்ப உறுப்பினர் மறைவை தொடர்ந்து பில்லி நாடு திரும்பி உள்ளார்.

56 வயதான பில்லி டாக்ட்ரோவ் 38 டெஸ்ட், 112 ஒருநாள் மற்றும் 17 ருவென்ரி-20 போட்டிகளில் நடுவராக பணியாற்றியுள்ளார். 1998ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கிரிக்கெட் நடுவர் பணியை தொடங்கினார். அதற்கு முன்பு 1995 மற்றும் 1996ஆம் ஆண்டுகளில் பில்லி சர்வதேச கால்பந்து சம்மேளன நடுவராகவும் பணியாற்றி இருக்கிறார். உலகக் கோப்பை கால்பந்து தகுதி சுற்று போட்டிகளிலும் அவர் நடுவராக இருந்துள்ளார்.

## முட்டாள்தனமான செயல்




(சிட்னி)

ஒலிம்பிக் நீச்சல் வீரர்கள் துப்பாக்கியுடன் போஸ் கொடுத்திருப்பது முட்டாள் தனமான செயல் என அவுஸ்ரேலிய ஒலிம்பிக் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அவுஸ்ரேலியாவின் நீச்சல் வீரர்கள் நிக் டிஆர்கி, கென்ரிக் மங்க். லண்டன் ஒலிம்பிக் போட்டிக்காக அமெரிக்காவில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இடையில், அங்குள்ள துப்பாக்கி விற்கும் கடைக்குச் சென்ற இவர்கள், நவீன ரக துப்பாக்கிகளுடன் போஸ் கொடுத்தனர். இந்த படத்தை பேஸ்புக் மற்றும் டுவிட்டர் இணையதளத்தில் வெளியிட்டது, பெரும் சர்ச்சையை கிளப்பியுள்ளது.

உடனடியாக இப்படத்தை நீக்குமாறு உத்தரவிட்டுள்ள அவுஸ்ரேலிய நீச்சல் அமைப்பு, (எஸ்.ஏ.) இதுகுறித்து விசாரித்து வருகிறது. எஸ்.ஏ. தரும் அறிக்கையின் படி, இவர்கள் மீது அவுஸ்ரேலிய ஒலிம்பிக் கமிட்டி (ஏ.ஓ.சி.) நடவடிக்கை எடுக்கவுள்ளது அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## அழைப்பு விடுக்கப்படும்

(லாகூர்)

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையால் நடாத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடரில் பங்குபற்றுவதற்கு இந்திய வீரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. ருவென்ரி - 20 தொடராக அமையவுள்ள இத்தொடரிலேயே இந்திய வீரர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவர் ஷாகா அஷ்ரப், இந்திய வீரர்கள் பங்குபற்ற விருப்பபடுகிறார்களோ இல்லையோ, அவ்வீரர்களுக்கான அழைப்பை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை வழங்கும் என அவர் தெரிவித்தார். தன்னைப் பொறுத்தவரை இந்தியா - பாகிஸ்தான் ஆகிய நாடு களுக்கிடையிலான கிரிக்கெட் உறவுகளை மேம்படுத்த வேண்டும் எனத் தெரிவித்த அவர், அதற்காகத் தன்னாலான முயற்சிகளைத் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

## வெர்னான் தெரிவு

(டர்பன்)

2011,12 சீசனுக்கான சிறந்த தென்னாபிரிக்க வீரராக வேகப்பந்து வீச்சாளர் வெர்னான் பிலேண்டர் (26) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு டெஸ்ட் போட்டியில் அறிமுகமான அவர், 7 டெஸ்ட் போட்டிகளில் 51 விக்கெட் (சராசரியாக 14.15 ஓட்டங்களுக்கு 1 விக்கெட்) வீழ்த்தியுள்ளார். ஒரு இனிங்சில் 5 விக்கெட் வீழ்த்தும் சாதனையை 6 முறையும், ஒரு போட்டியில் 10 விக்கெட் வீழ்த்தும் சாதனையை 2 முறையும் நிகழ்த்தியுள்ளார். டெஸ்ட் போட்டிகளில் சிறந்த வீரர் விருதும் பிலெண்டருக்கு கிடைத்துள்ளது. ஒருநாள் போட்டிகளில் சிறந்த வீரராக டிவில்லியர்ஸ், ருவென்ரி -20இல் ரிச்சர்ட் லெவி, சிறந்த புதுமுகம் மெர்ச்சன்ட் டி லாங்கே ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த விருது வென்றது மகிழ்ச்சி. தொடர்ந்தும் சிறப்பான செயற்பாட்டை வெளிப்படுத்தி அணியின் வெற்றிக்கு துணைபுரிவேன் என்று வெர்னான் தெரிவித்தார்.

## நடால் 50ஆவது வெற்றி

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் 50ஆவது வெற்றியைப் பதிவு செய்தார் ஸ்பெயினின் ரபேல் நடால். பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் காலிறுதிச்சுற்றில் 7-6(4), 6-2, 6-3 என்ற நேர் செட்களில் சகநாட்டு வீரரான நிகோலஸ் அல்மேக்ரோவை வீழ்த்தியதன் மூலம் அவர் இந்தச் சாதனையை எட்டினார். பிரெஞ்சு ஓபன் போட்டியில் இதுவரை ஓர் ஆட்டத்தில் மட்டுமே நடால் தோல்வி கண்டுள்ளார். 2009-ம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியின் 4-வது சுற்றில் ஸ்விட்சர்லாந்தின் சோடர்லிங்கிடம் தோல்வி கண்டார் நடால். இந்த பிரெஞ்சு ஓபனில் இதுவரை 5 ஆட்டங்களில் விளையாடியுள்ள நடால், ஒரு செட்டைக்கூட இழக்கவில்லை. அனைத்து ஆட்டங்களிலும் நேர் செட்களிலேயே வெற்றி கண்டுள்ளார். பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் அதிக சாம்பியன் பட்டம் வென்றவர்கள் வரிசையில் ஜார்ன் போக், நடால் ஆகியோர் முதலிடத்தில் உள்ளனர். இருவரும் தலா 6 பட்டங்களை வென்றுள்ளனர். இந்த முறை நடால் பட்டம் வெல்லும் பட்சத்தில் பிரெஞ்சு ஓபன் வரலாற்றில் 7 முறை பட்டம் வென்ற முதல் வீரர் என்ற பெருமையைப் பெறுவதோடு, அதிக கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர்கள் வரிசையிலும் 4ஆவது இடத்தைப் பிடிப்பார்.

## பாகிஸ்தான் வெற்றி

(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான முதலாவது சர்வதேச ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் 6 விக்கெட்டுகளால் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள்ளது.

மழையினால் போட்டி அடிக்கடி தடைப்பட்ட நிலையில், டக்வத் லூவிஸ் அடிப்படையில் 42 ஓவர்களுக்கு போட்டி மட்டுப்படுத்தப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களின் மோசமான துடுப்பாட்டத்தால் மிகக் குறைவான ஓட்டங்களையே பெற்றுக் கொண்டது.

இதன் பிரகாரம் 42 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்களை இலங்கையணி பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு 42 ஓவர்களில் 135 என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 34.1 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 135 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை பாகிஸ்தான் கடந்தது.

இந்தப் போட்டியில் போட்டியின் சிறப்பாட்டக்காரராக பாகிஸ்தானின் உமர் குல் தெரிவானார்.

## கலப்பு இரட்டையரில் பூபதி - சானியா ஜோடி சம்பியன்

### ஷரபோவா, சாரா ஒற்றையர் இறுதியில் இன்று பலப்பரீட்சை

(பாரிஸ்)

பிறெஞ் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மகேஷ் பூபதி - சானியா மிர்சா ஜோடி இறுதிச்சுற்றில் 7-6 (3), 6-3 என்ற நேர் செட்களில் போலந்தின் கிளா-டியா, -மெக்ஸிகோவின் சான்டியாகோ ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.

பிரான்ஸ் தலைநகர் பாரிசில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ் ஓப்பன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று முன்தினம் நடந்த கலப்பு இரட்டையர் இறுதிச் சுற்றுப் போட்டியில் பூபதி-சானியா ஜோடி, கிளாடியா ஜான்ஸ் இக்னேசிக் (போலந்து), சான்டியாகோ கொன் சாலசை(மெக்சிகோ) ஆகியோரை எதிர்கொண்டது.

இதனையடுத்து, டை-பிரேக்கர் வரை சென்ற முதல் செட்டை 7-6 என வென்றனர். இரண்டாவது செட்டிலும் ஆதிக்கம் செலுத்திய இவர்கள், மிக எளிதாக வெற்றியை வசப்படுத்தினர். இறுதியில் பூபதி-சானியா ஜோடி 7-6(7-3), 6-1 என்ற நேர் செட்களில் வெற்றி பெற்று, சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இது பூபதிக்கு 12வது கிராண்ட்ஸ்லாம் பட்டம். சானியாவுக்கு சீனியர் பிரிவில் 2ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். முன்னதாக பூபதியுடன் சேர்ந்து 2009ஆம் ஆண்டில் அவுஸ்ரேலிய ஓப்பன் கலப்பு இரட்டையரில் பட்டம் வென்றார். பூபதி தனது பிறந்த நாள் அன்று சம்பியன் பட்டத்தை வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பெண்கள் ஒற்றையர் பிரிவில் இறுதி ஆட்டத்தில் ரஷ்ய வீராங்கனை ஷரபோவா, இத்தாலி வீராங்கனை சாரா எர்ரானி ஆகியோர் மோதுகிறார்கள்.

இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு முதலாவது அரை இறுதியில் உலகின் 21ஆம் நிலை வீராங்கனை சாரா எர்ரானி (இத்தாலி), 6ஆம் நிலை வீராங்கனை சமந்தா ஸ்டோ சுரை (அவுஸ்ரேலியா) எதிர் கொண்டார்.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் சாரா எர்ரானி 7-5, 1-6, 6-3 என்ற செட் கணக்கில் சமந்தா ஸ்டோசுருக்கு அதிர்ச்சி அளித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். கிராண்ட்ஸ்லாம் போட்டியில் சாரா எர்ரானி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்று இருப்பது இதுவே முதல்முறையாகும்.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் உல-கின் 2ஆம் நிலை வீராங்கனை மரியா ஷரபோவா (ரஷ்யா) 6-3, 6-3 என்ற நேர்செட்டில் 4ஆம் நிலை வீராங்கனை பெட்ரா கிவிடோவாவை (செக்குடியரசு) தோற்கடித்து இறுதிப்போட்டிக்கு முன்னேறினார். இறுதிப்போட்டியில் ஷரவோபா-சாரா எர்ரானி பலப்பரீட்சை நடத்துகிறார்கள்.






# இறம்மைக்குளம், சென். அன்ரனிஸ் மாகாண உடற்பயிற்சியில் முதலிடம்

(வவுனியா)

வடமாகாண உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் தீகவ வலயத்தைச் சேர்ந்த ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ் கல்லூரியும், பெண்கள் பிரி வில் வவுனியா தெற்கு வலயத்தைச் சேர்ந்த இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியும் முத லிடத்தைப் பிடித்துள்ளன.

இப்போட்டி கடந்த 6ஆம் திகதி வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

மகளிர் பிரிவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தை சேர்ந்த இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், இரண்டாமிடத்தினை வலிகாமம் வலயத்தை சேர்ந்த மானிப்பாய் மகளிர் கல்லூரியும் மூன்றாமிடத்தினை வடமராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த வட இந்து மகளிர் கல்லூரியும் சுவீகரித்துக் கொண்டது.

ஆண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் தீவக கல்வி வலயத்தை சேர்ந்த சென். அன்ரனிஸ் கல்லூரி முதலாமிடத்தினையும் வலிகாமம் கல்வி வலயத்தை சேர்ந்த புனித கென்றியரசர் கல்லூரி இரண்டாமிடத்தினையும் வவுனியா தெற்கு கல்வி வலயத்தைச் சேர்ந்த திருஞானசம பந்தர் வித்தியாலயம் மூன்றாமிடத்தினையும் பெற்றுக் கொண்டது. (160, 93)

# வெற்றிபெற்றது நல்லூர்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் நல்லூர் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அணி வெற்றி பெற்றது.

சுன்னாகம் நியுஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இப்போட்டியில் நல்லூர் பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பெண்கள் அணியும் பருத்தித்துறை பிரதேச தேசிய இளைஞர் சேவைகள் மன்ற பெண்கள் அணியும் மோதின. இதில் நல்லூர் பிரதேச செயலக அணி வெற்றிபெற்று சம்பியனாகியது.

# ஜே.பி.எல்.இன் இன்றைய ஆட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

ஜே.பி.எல். ருவென்ரி - 20 கிரிக்கெட் தொடரின் இன்றைய தினம் இரண்டு ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

ஜே.பி.எல். ருவென்ரி -20 கிரிக்கெட் தொடர் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை தினங்களில் நடைபெற்று வருகின்றது.

இன்றைய தினம் காலை இடம்பெறவுள்ள முதல் போட்டியில் யாழ். சென்றல் அணியை எதிர்த்து ஜொனியன்ஸ் அணியும், பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் பற்றீசியன்ஸ் அணியை எதிர்த்து மானிப்பாய் பரிஷ் அணி மோதவுள்ளன.

எட்டு அணிகள் பங்குகொள்ளும் இப்போட்டித் தொடர 'ஏ', 'பி' என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் ஒவ்வொரு குழுவிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணி அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும்.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி)

## 15ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் இன்று ஆரம்பம்

# வடமாகாண வீரர்கள் வெற்றிபெற ஆளுநர் சந்திரசிறி வாழ்த்து



(பத்திரமுல்ல)

இன்றைய தினம் ஆரம்பமாகவுள்ள 15ஆவது ஆசிய கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மூன்று வீரர்கள் பங்குபற்றுகின்றமை வடக்கு மாகாணத்திற்கு மகிழ்ச்சி ஊட்டும் விடயம். இவர்கள் வடமாகாணத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் போட்டியில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி பதக்கம் வெல்ல வாழ்த்துக்கள் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி தெரிவித்தார்.

15வது ஆசிய கனிஷ்ட தடகள விளையாட்டுப் போட்டி இன்று முதல் 12ஆம் திகதி வரை கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இம்முறை வடமாகாணத்திலிருந்து மூவர் போட்டிகளில் பங்குபற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் யாழ் அருணோதயா கல்லூரியிலிருந்து அருந்தவம் பவித்ரா (கோல் ஊன்றிப் பாய்தல்), பாலசுப்பிரமணியம் லவணன் (கோல் ஊன்றிப் பாய்தல்) ஆகிய இருவரும் மற்றும் யாழ் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையைச் சேர்ந்த இரத்தின சிங்கம் விமலேந்திரா (குண்டு போடுதல்) ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

இம்மூவரும் வடமாகாண விளையாட்டுதுறைப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை மூலமாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கடந்த 7ஆம் திகதி பத்தரமுல்லையிலுள்ள ஆளுநர் உப அலுவலகத்தில் வைத்து சந்தித்தபோது அவர்களுக்கு ஆளுநர் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டதுடன் நினைவுப் பரிசும் வழங்கினார்.

# வடபகுதி மாணவர்களுக்கு உயிர்ப் பாதுகாப்பு அங்கிகள்

உயிர்ப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதற்கான பணிகளுக்கென, யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிரதேசங்களிலிருந்து தம்புள்ளை பிரதேசத்திற்கு தம்புள்ளை நீர் உயிர் பாதுகாப்புச் சங்கத்தின் அழைப்பின் பேரில் வருகை தந்த உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வுகள் கடந்த மூன்றாம் திகதி இப்பங்கட்டுவ நீர்த்தேக்க முன்றலில் இடம்பெறறது.

காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் கடல் மற்றும் நீச்சல் தடாகங்களில் உயிர்ப்பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகளைப் பெற்ற வடபகுதி மாணவர்களுக்கும் அவர்களது பயிற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கும் உயிர்ப் பாதுகாப்பு அங்கிகளை வழங்கினார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலிருந்து- 09 மாணவரும், காரைநகர் தியாகராஜ வித்தியாலயம், வவுனியா சாந்தபுரம் சரஸவதி மகாவித்தியாலயம், வவுனியா அல்- இக்பால் மகா வித்தியாலயம் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம் ஆகியவற்றிலிருந்து முறையே 05, 05, 02, 01 ஆக மொத்தம் 22 மாணவர்களும், 9 பயிற்றுனர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இவர்கள் ஏனைய உறுப்பினரகளுடன் இப்பங்கட்டுவெவ, கண்டலம, மற்றும் ரன்தெனிய நீர்த்தேக்கப் பிரதேசங்களில் உயிர்ப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவிருப்பதாக, ரங்கிரி தம்புள்ளை நீர் விளையாட்டு மற்றும் உயிர்ப்பாதுகாப்பு சங்கத்தின் தலைவரும், தம்புள்ளை, மாநகர சபை உறுப்பினருமான, அனுர பிரியரத்ன தெரிவித்தார்.

கலாநிதி. தயான் ஜயதிலக கட்டுரையிலிருந்து



**தமிழர் சார்ந்த பிரிவினைவாதத்தை உள்ளடக்கிய கோட்பாடு, வலிமைமிக்க சாதகமான சீர்திருத்தங்களை கொண்டிருக்க வேண்டியது அவசியம். எங்கள் நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஏற்ற ஒருங்கிணைப்பு (உட்கிரகித்தல் அல்ல) கொள்கையை நோக்கமாக கொண்டதும் பன்மைத்துவம், சம உரிமை, பாகுபாடு அற்ற நிலை, பன்முக கலாசாரம் மற்றும் தகுதி முறை போன்ற மாற்றங்கள் அதன் இயல்பிலும் மற்றும் நடத்தையிலும் வரத்தக்கதான தீவிர மாற்றம் கட்டாயம் தேவை.**

# பிரபாகரனின் (கருத்து மாறாது சொற்கள் மட்டும் மாறிய) பொழிப்புரை

இந்திய கல்வியாளர்களிடையே இலங்கை அறிவியல் பற்றிய மிகப் பழமையான அனுபவமுள்ளவரான காலஞ்சென்ற பேராசிரியர் ஊர்மிளா பாட்னிஸ் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர், அவர் எழுதிய கடைசிப் புத்தகமான "இனம் மற்றும் தேசம் - தெற்காசியாவில் கட்டியெழுப்புதல்" எனும் நூலில், இலங்கையின் தமிழ் துணை - தேசியவாதம் அந்தப் பிரதேசத்தில் தனித்தன்மை வாய்ந்தது தடன், அதுதனியாக ஒரு சுயாட்சிப் பிரிவினைவாத தொடர்பகத்தை காட்சிப்படுத்துகிறது என்று வெகு நுட்பமான ஒரு முடிவுக்கு வந்திருந்தார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் 14வது தேசிய மாநாட்டில் ஆர். சம்பந்தன் ஆற்றிய உரையின் பிரதான கரு, வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஒத்த கருத்துள்ள பாதைக்கு சமீபமாக, குறிப்பிடத்தக்க விதத்தில் எதிரொலித்திருப்பதைக் கண்டு எனக்குள் அதிர்ச்சியும் திகிலும் உண்டானது. இதோ ஒரு உதாரணம்:

"உலகமானது நீதியின் அச்சில் சுற்றிவருவது இல்லை. கொடுமைக்கு உள்ளாகும் சமூகங்களின் சுதந்திர போராட்டம், நீதியின் அளவுகோல்களில் அளக்கப்படுவதில்லை. ஜனநாயகம், மற்றும் மனித உரிமைகளை போதிக்கும் உலக வல்லரசுகள் நீதியின் மறுவடிவமாக திகழ்வதில்லை. உலகமெங்கும் இருக்கும் அரசாங்கங்களும் மற்றும் சர்வதேச நிறுவனங்களும் எங்கள் மீது கருணை காட்டவேண்டும், மற்றும் தங்கள் நலன்களை தியாகம் செய்து எங்கள் உரிமைகள் எங்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும், என நாங்கள் எதிர்பார்க்கவில்லை". இது, மே, 2012இல் இலங்கை தமிழரசுக் கட்சியின் 14வது தேசிய மாநாட்டில் திரு.ஆர்.சம்பந்தன் ஆற்றிய உரை.

இப்போது சீமான்களே, சீமாட்டிகளே, இதோ திரு.வி.பிரபாகரனின் உரை:

"உலகமானது மனு நீதியின் அச்சில் சுழல்வதில்லை என்பதை நாங்கள் நன்கு அறிவோம். இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு நாடும் தன் சொந்த நலனை கருத்திற்கொண்டே முன்னோக்கிஅடியெடுத்து வைக்கிறது. மக்களின் உரிமைகளோ அல்லது நீதியின் தார்மீகச் சட்டங்களோ தற்கால உலகிற்கு ஒரு பொருட்டல்ல மாறாக பொருளாதார மற்றும் வர்த்தக நலன்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. நாடுகளுக்கு இடையேயான சர்வதேச உறவுகள் மற்றும் இராஜதந்திர தொடர்புகள் என்பன இத்தகைய நலன்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன். ஆகவே எங்கள் விடயத்தில் சர்வதேச சமூகத்திடமிருந்து தார்மீக நியாயத்திற்கான உடனடி அங்கீகாரம் கிடைக்கும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது". இது நவம்பர் 1993 மாவீரர் தின உரையில் குறிப்பிடப்பட்டது.

திரு.ஆர்.சம்பந்தன் வடபகுதி தமிழ் சமூகத்தின் மிகவும் பிரபலமான உள்நாட்டு தலைவர். பிராந்திய துணை நிலப்பகுதிக்கு சில மைல்கள் தொலைவிலுள்ள சர்வதேச சமூகத்தின் ஆதரவை எட்டுவதற்கான அவரது கட்சியின் அர்ப்பணிப்பு அறிவுறுத்துவது, ஆயுதப் போராட்டத்தின் மூலம் அடைய முடியாத அதே உயர்ந்த அபிலாசைகளுக்கு ஒத்ததாகவே உள்ளன. அவர் வலியுறுத்துவது - உறுதிப்படுத்துவது என்று சிலர் சொல்வார்கள் - சர்வதேச சமூகம் அதன் தற்போதைய நிலைப்பாட்டினூடாக, குறிப்பிட்ட இலக்கை அணுகுவதற்கான இடைவெளியை திறந்து விடலாம் என்பதனையே.

"சர்வதேச சமூகத்தின் தற்போதைய நடவடிக்கைகள், ஆயுதப்படைகள் மூலமாக எங்களால் அடைய முடியாமற் போன உயர்ந்த இலட்சியங்களை அணுகுவதற்கான ஒரு வாய்ப்பை, உயிர்ச்சேதமின்றி எமக்குத் தரலாம்." (மே 2012ல், மட்டக்களப்பில் நடந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் 14வது தேசிய மாநாட்டில் ஆர்.சம்பந்தன் ஆற்றிய உரை, கொழும்பு ரெலிகிராப்பில் இடம்பெற்றது)





அந்த உயர்ந்த இலட்சியம் தமிழீழம் தான் என்று சுலபமாகச் சொல்லி விடலாம். 500 வருடங்களுக்கு முன்பு காலனித்துவ ஆக்கிரமிப்புக்கு முன்னர் தமிழ் மக்கள் அனுபவித்ததாக சொல்லப்படும் இறையாண்மையின் அளவை திரும்பவும் வழங்கும்படி அவர் அழைப்பு விடுத்துள்ளார். இது சுதந்திரமான ஒரு அரசியல் இருப்பினைக் குறிப்பிடுகிறது.

".....கிட்டத்தட்ட 500 வருடங்களுக்கு முன்னர் தமிழ் மக்கள் தங்களது சொந்த அரசாங்கங்களை ஏற்படுத்தி தம்மை தாமே ஆட்சி செய்தார்கள். எமது கட்சியின் சின்னம் குறிப்பிடுவது வரலாற்றின் ஒரு காலகட்டத்தை, அந்தக் காலத்தில் எங்கள் மக்கள் தங்கள் சொந்த இறையாண்மையுள்ள தமிழ் அரசாங்கங்களை கொண்டிருந்தார்கள்.... எங்கள் அடிப்படை இலக்கு, எமது சமூகத்தின் வரலாற்று வாழ்விடமும் மற்றும் சொந்த இறையாண்மையுள்ள எமது சமூகத்தின் சொந்த வீட்டை திரும்ப பெறுவதுதான். எமது கட்சியின் சின்னமாகிய வீடு இந்த அசைக்கமுடியாத நோக்கத்தைதான் குறிப்பிடுகிறது...."

உலகத்தை 500 வருடங்களுக்கு குறையாத காலத்துக்கு முன்பிருந்த நிலைக்கு மறு ஒழுங்கு செய்வதாக இருந்தால், ஒவ்வொரு சிறுபான்மையினத்தையும் சேர்ந்த சுமார் ஒரு மில்லியன் மக்கள், அல்லது நாட்டின் சனத்தொகையின் ஒரு சிறிய பின்னத்தின் அளவிலான பிரஜைகள் இந்த உரிமையை கோரி, அதன் செயற்பாட்டை நாடுவார்கள். இதனால் உலகமானது, அராஜகம் குழப்பம் மற்றும் இரத்தம் சிந்தும் நிலமைக்குள்அமிழ்ந்து விடும். இந்த திட்டத்தை ஊக்கப்படுத்த முடியாது.

திரு. சம்பந்தனின் வெளிப்படையான தந்திரோபாயமான அறிவிப்பு சிங்கள பேரினவாதிகளினால் விமர்சனம் மற்றும் கேலிச் சித்திரங்களுக்கு இலக்காகி ஒரு சிங்களவரால் எழுதப்படும்போது "ஒரேமாதிரியான இன வெறி" என்று மொழி மாற்றப்பட்டிருக்கும் (என்னால் கூட).

"சில விடயங்களை பொறுத்தவரை எமது நிலைப்பாட்டில் மென்மை காட்டுவதும் விட்டுக்கொடுத்துப் போவதும், நாம் சர்வதேச சமூகத்தை தனிமைப்படுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்தும் இராஜதந்திர மூலோ பாயங்கள். அவை நாங்கள் எங்கள் அடிப்படை இலக்கினை விட்டுக் கொடுத்துவிட்டோம் என்பதற்கான அடையாளங்கள் அல்ல, வேறு வார்த்தைகளில் சொல்வதானால் - நாங்கள் சர்வதேச சமூகத்துக்கு உணர்த்த வேண்டியது, ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் உள்ள எமது உரிமைகளை எங்களால் உணர இயலாத நிலையில் உள்ளோம்என்று.... கையிலுள்ள பிரச்சினை ஒரே மாதிரியானது என்றாலும் நிலவும் சூழ்நிலை வித்தியாசமானது. போராட்டம் ஒரே மாதிரியானதுதான் ஆனால் அதை அணுகுவதற்கு நாங்கள் பயன்படுத்தும் செயற்பாடு வித்தியாசமானது. விளையாட்டு வீரர்கள் அதே ஆட்கள் தான், ஆனால் கூட்டணி வித்தியாசமானது. அதுதான் தமிழ்மக்களின் இயல்பு. நாங்கள் இன்னமும் அதே நோக்கத்தையே கொண்டிருப்பினும் நாம் பயன்படுத்தும் முறை வித்தியாசமானது"

தமிழ் பிரிவினைவாத உந்துதலை உள்ளடக்கிய கொள்கைகளை எப்படி ஒருவர் பிரயோகிக்க முடியும்? ஒரு கட்சி வெளிப்படையாகவே தீர்வுக்கு 13வது திருத்தம் போதுமானதல்ல என நிராகரிப்பது மட்டுமல்லாமல் ஐக்கியமான நாட்டை ஒரு கட்டமைப்பாக ஏற்றுக்கொள்வதையும் நிராகரிக்கிறது, அத்தோடு ஐக்கியமானஇலங்கைக்குள் ஒரு தீர்வு சாத்தியமாகாது என்றும்நம்புகிறது. அத்தகைய கட்சிக்கு மாகாண அதிகாரங்களை ஒரு தேர்தல் மூலமாக மாற்றிக்கொடுப்பதுமிகவும்ஆபத்தானது.

உலக சமுதாயம் அந்தக் காரணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக அது மூலோபாயங்களை பயன்படுத்துகிறது. சுருங்கக் கூறினால், தமிழர்களுக்கு ஏற்ற ஒரு தீர்வு ஐக்கியமான இலங்கைக்கு வெளியேதான் சாத்தியமாகும் என உலக சமூகத்தை இணங்க வைக்கலாம் என அது நம்புகிறது - அதாவது சுதந்திரமான ஒரு தனிநாடு.

இப்படியான அந்தக் கட்சி மாகாணசபையின் அதிகாரங்களை கையேற்றால், சந்தேகமின்றி அது ஆரம்பத்தில் இருந்ததைவிட இன்னும் அதிக அளவில் சிக்கல்களை தள்ளுவதற்கு தூண்டப்படும், வெளியார் அங்கீகாரத்தை பெறும் ஒரு தளமாக சபையை பயன்படுத்துவதால் பதட்டமான சூழ்நிலையும் மற்றும் மோதல்களும் உருவாகும், சந்தேகமின்றி சில கோணங்களிலும் சில அளவுகளிலும் அது வெளியார் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும். வெளியார் படைகளின் ஒரு இறங்கு தளமாக இந்தச் சபை மாறிவிடலாம்.

சாகச செயல்புரியும் ஒரு மாகாண நிருவாகத்தை கொழும்பு கலைக்குமானால், சில வெளிச் சக்திகள் (துணை பிராந்தியத்திலுள்ள ஒத்த இனத்தவர்களின் சட்டப் பேரவைகள்) கலைக்கப்பட்ட மாகாண அலகின் எல்லைகளை ஒரு தனி நாடாக அல்லது நாடு கடந்த நிருவாகமாக அங்கீகரிக்கலாம். இப்படித்தான் சோவியத் ரஷ்ய குடியரசிலிருந்து யுகோஸ்லாவியா பிளவுபட்டது.

இதேபோல மற்றும் மறுதலையாக, பாராளுமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் முக்கியமாக பிரதான தமிழ் கட்சி உட்பட அனைத்தும் ஒரு பகுதியாக ஒரு ஒப்பந்தம் மூலம் அதை இடமாற்றினாலன்றி சுயாட்சிக்காக தற்போதுள்ள அரசியலமைப்பு பிரிவுகளை ஒழித்துக்கட்டும் தீவிரத்துக்கு செல்வதும் விவேக மற்றது.

இங்கு நாம் நம்பிக்கையுடன் பேசுவது பாராளுமன்ற தெரிவுக்குழுவின் நடவடிக்கை மூலம் பெறப் போகும் வெற்றிகரமான விளைவுகளுக்காகவே. அது நடக்காவிட்டால், நிலமையை தக்கவைத்து கொள்வதும், மற்றும் டிட்டோவின் அரசியலமைப்பு கொசோவோக்கு வழங்கியிருந்த சுயாட்சி அந்தஸ்தை, மில்சோவிக் அரசியலமைப்பு திருத்தம் மூலமாக மாற்றுவதற்கு பதட்டத்துடன் மேற்கொண்ட மாபெரும் தவறு போன்றவற்றை தவிர்ப்பதும் இன்றிமையாதது ஆகும்.

சேர்பியாவின் கம்யுனிச புரட்சிகர தேசியவாதியான மார்'ல் ஜோசப் புறோஸ் டிட்டோ பெரும்பான்மை சேர்பியர்களின் வரலாற்று உரிமைகளை விட்டுக் கொடுத்தார். சேர்பியாவுக்குள்ளேயே ஒரு தனி மாகாண அமைப்பாக கொசோவாவின்சுயாட்சி அந்தஸ்தினை மறுதலையாக தள்ளிவிட்டதன் மூலம், சில வருடங்களின் பின்னர் அவர்கள் தங்கள்நாட்டையே இழந்தார்கள், வெளியிலிருந்து ஆதரவு நல்கிய பிரிவினைவாதிகள் மற்றும் இராணுவத் தலையீடுகள் காரணமாக யுகோஸ்லாவியா நாடு வலுக்கட்டாயமாக சுருங்கி தனியாக செர்பியாவாக மட்டும் மாறியது.

தமிழர் சார்ந்த பிரிவினைவாதத்தை உள்ளடக்கிய கோட்பாடு, வலிமைமிக்க சாதகமான சீர்திருத்தங்களை கொண்டிருக்க வேண்டியது அவசியம். எங்கள் நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஏற்ற ஒருங்கிணைப்பு (உட்கிரகித்தல் அல்ல) கொள்கையை நோக்கமாக கொண்டதும் பன்மைத்துவம், சம உரிமை, பாகுபாடு அற்ற நிலை, பன்முக கலாச்சாரம் மற்றும் தகுதி முறை போன்ற மாற்றங்கள் அதன் இயல்பிலும் மற்றும் நடத்தையிலும் வரத்தக்கதான தீவிர மாற்றம் கட்டாயம் தேவை. தெளிவூட்டும் சுய நலன்கள் அறிவூட்டும் மறுசீரமைப்புக்கு கட்டளையிடும்.

# 60 ஆண்டுகள் பொறுத்திருந்தவர்களுக்கு 6 மாதங்கள் இணைந்து செயற்பட முடியாதா?

## – கூட்டமைப்பினரிடம் ராஜித சேனாரத்ன கேள்வி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல தீர்வு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் அரசாங்கத்தினால் பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணைந்து செயற்பட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் தயக்கம் காட்டிவருகின்றது என்பது குறித்து எங்களுக்கு புரியவில்லை என மீன்பிடி மற்றும் நீரியல்வள அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக 60 வருடகாலம் பொறுத்திருந்த இவர்களால் 6 மாதங்கள் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து செயற்பட முடியாதா? எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பது குறித்த நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் எதிர்கால நிலைமைகள் குறித்து தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றை உருவாக்குவது தொடர்பில் பிரேரிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் இணைந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அரசாங்கத்தின் சார்பில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் இன்னும் அதில் இணைந்துகொள்ளாமல் உள்ளன.

இதனால் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் செயற்பாடுகளை ஆரம்பிக்க முடியாத நிலைமைகளே உள்ளன. நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணைந்து செயற்படுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏன் இன்னும் தயக்கம் காட்டி வருகின்றது.அதாவது நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக ஆறு மாதங்களில் தீர்வு தொடர்பான இணக்கப்பாடு எட்டப்பட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு ஆறு மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எவ்விதமான தயக்கமும் இன்றி தெரிவுக்குழுவில் இணைந்து கொள்ளமுடியும்.



ஒருவேளை ஆறு மாத காலததில் தீர்வு வராவிடின் அரசாங்கததுக்கே சாதகமற்ற நிலைமை ஏற்படும். அத்துடன் அந்த நேரத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பு தனது நியாயத்தை விளக்கலாம். இதனைப் புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவுக்குழுவில் இணைந்துகொள்ள முன்வர வேண்டும் என்றார்.

## பேராதனை பகிடிவதை குறித்து 20 பேரிடம் இரகசிய விசாரணை

(கொழும்பு)

பகிடிவதைச் சம்பவங்கள் குறித்து பேராதனை பல்கலைக்கழக மாணவர், மாணவிகள் இருபது பேரிடம் இரகசிய பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பகிடிவதை பேராதனை பல்கலைக் கழக வளவில் இடம்பெற்றுள்ளதாகவும் அதன் காணொளிக் காட்சிகள் சி.ஐ.டி மற்றும் ஊடகங்களுக்குச் சென்றது எப்படி? என்பது குறித்து மாணவர்கள் கலக்கத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தக் காணொளி பிரசித்தமானதால் பெற்றோர்களும் இது குறித்து தன்னிடம கேள்வி எழுப்புவதாக உயர்கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சிரேஷ்ட மாணவர்களின் பகிடிவதைக்கு உள்ளான புதிய மாணவர், மாணவிகள் சிலர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடம் வாக்குமூலம் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அங்கொடையில் பன்றிக் காய்ச்சல்; ஒருவர் மரணம், இருவர் மருத்துவமனையில்

(அங்கொடை)

பன்றிக் காய்ச்சல் என பரவலாக அறியப்படும் எச்1என்1ஐ ஒத்த வைரஸ் தாக்குதல் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் அங்கொடையில் அமைந்துள்ள உள ஆரோக்கிய நிறுவகத்தில் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் கூறினார். மேற்படி உயிரிழந்தவர் குறித்த வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில், மூச்சடைப்பின் காரணமாக உயிரிழந்துள்ளார் என்றும் சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

உள ஆரோக்கிய நிறுவகத்தைச் சேர்ந்த ஊழியர்கள் மூவர், சுவாசப் பிரச்சினையால் அவதிப் பட்டதாகவும், இதைத் தொடர்ந்து மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் அரசாங்க நோய் பரம்பலியல் அலகு என்பவை சோதனைகளை நடத்தின.

இதனையடுத்து, அமெரிக்கா, கனடா, ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் ஆயிரக்கணக் கானோரைத் தாக்கிய பன்றிக்காய்ச்சலுக்கு காரணமான எச்1 என்1 2009 வைரஸை ஒத்த வைரஸ் கிருமியே மேற்படி பிரச்சினைக்குக் காரணமென சோதனைகளை அடுத்து தெரியப் படுத்தியுள்ளன.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் அரசாங்க நோய்ப் பரம்பலியல் அலகு என்பன இந்த வைரஸை பிரித்தெடுத்துள்ளன. இந்த வைரஸ் தாக்குதல் பற்றி, சுகாதார அமைச்சு ஏனைய வைத்தியசாலைகளுக்கு எச்சிரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறான நோய் பரவும் பட்சத்தில் தேவையான மருந்துகளை வைத்தியசாலைகளுக்கு வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என அமைச்சின் பேச்சாளரான வன்னி நாயக்கா கூறினார்.

## சடலமாக மீட்கப்பட்டவரின் உடலில் நச்சுப் பதார்த்தம்

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட தமிழ் குடும்பஸ்தரின் உடலில் நச்சுப் பதார்த்தம் கலந்திருந்தமையே மரணத்திற்கான காரணமெனத் தெரியவந்துள்ளது.


இந்த நிலையில், அது எவ்வகையான நச்சுப் பதார்த்தமென கண்டறிவதற்கு உடல் பாகம் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுபப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை - காஸி வீதியைச் சேர்ந்த 43 வயதுடைய சண்முகராஜா மனோகரன் என்பவரின உடல் பாகமே இவ்வாறு அரச இரசாயன பகுப்பாயவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் திருகோணமலை துறைமுக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கடற்கரைப் பகுதியில் வைத்து குறித்த ஆணின் சடலம் மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்ட சடலமானது பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது உடலில் நச்சுப் பதார்த்தம் சேர்ந்தமை கண்டறியப்பட்டுள்ளது. நச்சுப் பதார்த்தம் உடலில் சேர்ந்தமையே மரணத்திற்கான காரணமென கண்டறியப்பட்ட போதும், எவ்வகையான நச்சுப்பதார்த்தம் உடலில் கலந்துள்ளதென்பது கண்டறியப்படவில்லை. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸாரினால் மேற கொள்ளப்பட்டு வருகின்றது.

## பெரிய மரத்தில் அம்மன் சிலை

(மலையகம்)



சாமிமழை பெரிய சூரியகந்த தோட்டத்தில் பாதை அருகாமையில் காணப்படும் பெரிய மரம் ஒன்றில் அம்மன் சிலை ஒன்று தென்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இச்சம்பவமானது கடந்த முன்று நாட்களாக தென்படுவதாக அப்பிரதேசத்தை சேர்ந்த மக்கள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தை பாடசாலை சிறுவன் ஒருவன் இனங்காண்டு ஊர் மக்களிடம் தெரிவித்துள்ளான்.

இந்த அம்மன் சிலையை வெளிதோட்டங்களைச் சேர்ந்த மக்களும் பார்வையிடுவதோடு விசேட பூஜைகளையும் செய்து வருகின்றனர்.

## வேலை நிறுத்தத்தை கைவிட்டால் குறைகள் ஆராயப்படும்

(கொழும்பு)

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது வேலை நிறுத்தத்தை கைவிட்டு விட்டு, வேலைக்கு திரும்ப வேண்டும் எனவும் அதன்பின் அவர்களின் குறைகள் ஆராயப்படுமெனவும் உயர்க்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் உறுதியளித்த வண்ணம் தமது சம்பளத்தை 11 சதவீதத்தால் அதிகரிக்கும் வரை, தங்களது வேலை நிறுத்தப் போராட்டம் தொடருமென தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கருத்து தெரிவித்துள்ள அமைச்சர், தயவு செய்து வேலைக்கு வாருங்கள். இந்தப் பிரச்சினைகளை முற்றும்முழுதாக தீர்க்க முடியாது. ஆயினும் உங்கள் குறைகள் கவனிக்கப் படுவதற்கான எமது ஆதரவை வழங்குவோம் என கூறினார்.

ஏனைய அங்கத்தவர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி அழுத்தம் கொடுத்த சங்க அங்கத்தவர்கள் தண்டிக்கப்படுவர் அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

சம்பளத்தை மீளாய்வு செய்வது மிகவும் சிக்கலான விடயம். இவர்களது சம்பளம் வேறு நிறுவனங்களில் உள்ள அரசாங்க ஊழியர்களின் சமபளத்துடன் ஓரளவு சமமாக இருத்தல் வேண்டும.

மேலும் 200க்கும் மேற்பட்ட பதவிகளில் உள்ளோர், கல்வி சாரா ஊழியர்கள் என்ற வகையில் உள்ளனர். எனவே, பல்வேறு விடயங்களை நாம் கவனிக்க வேண்டியிருக்கும் என அமைச்சர் கூறினார்.

இதேவேளை, சம்பள மீளாய்வு தொடர்பில் ஒரு புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்த விடயம் எமது கைகளில் இல்லை. இவர்களது கோரிக்கைகளை நாம் சம்பள ஆணைக்குழு மற்றும் திறைசேரியிடம் முன்வைப்போம் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் டாக்டர் பிரியந்த பிரேமகுமார கூறினார்.

## நாடாளுமன்றில் வாசிக்கப்பட்ட "ரூபா" வின் மரண அறிவித்தல்

(கொழும்பு)

ரூபா மரணமடைந்து விட்டதாக தனக்கு கிடைத்த மரண அறிவித்தல் ஒன்றை வாசித்துக் காண்பித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மரணச் சடங்கு மத்திய வங்கியில் இடம்பெறும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

ரூபாவின் பெறுமதி குறைக்கப்பட்டமையினால் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது. மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். பொருளாதார நிபுணர்கள் இருக்க வேண்டிய இடங்களில் எல்லாம் பிசாசுகளே இருக்கின்றன.

இலங்கையில் வாழ்ந்த ரூ பியல் (ரூபா) மரணமடைந்துவிட்டது. தொடர்பில் எனக்கு மரண அறிவித்தல் கிடைத்துள்ளது. இலங்கை தாயின் மகனும், ஏழ்மையின் கணவனும், மக்களின் சகோதரனும் வறுமையின் மைத்துனருமான ரூபா பலவந்தமாக தாழ்த்தப்பட்டு விழுங்கி சாகடிக்கப்பட்டுள்ளார். அன்னாரது இறுதி மரணச் சடங்கு மத்திய வங்கியின் வளாகத்தில் விரைவில் நடைபெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் கப்ராலின் செயற்பாட்டினால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு 18 மாதங்களுக்கு பின்னர் ஆயிரம் கார்களுடன் கப்பல் ஒன்று வருகை தந்துள்ளமை குறித்து மனமகிழ்ச்சி அடைகின்றோம் என்றார்.

# இலங்கையில் நிலையான சமாதானத்திற்கான அமெரிக்காவின் நகர்வுகள்?

போர்க்குற்றங்களுக்கு பொறுப்புக் கூறவும் இன நல்லிணக்கத்துக்கு வழிசமைக்கவும் என கூறிக் கொண்டு இலங்கை மீது அமெரிக்கா மேற்கொண்டுவரும் நகர்வுகள் உள்நாட்டில் சாதகமான நிலைமைக்கு வழியேற்படுத்திக் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியாக அமெரிக்காவுடன் அமைச்சர் பீரிஸ் முன்வைத்த பரிந்துரைகளை பகிரங்கப்படுத்துவதில் இலங்கை விட்டுள்ள அதே தவறை பதிலுக்கு அமெரிக்காவும் இழைத்திருப்பதாகவே கருத வேண்டியுள்ளது.

உண்மையில் தன்னிடம் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளில் சாத்திய மானவற்றையாவது நடைமுறைப்படுத்த வேண்டும் என அமெரிக்கா விரும்பியிருந்ததால் சமர்ப்பித்த பிரேரணைகளின் சாதக பாதகங்கள் பற்றி அமெரிக்கா வெளிப்படையாக தனது கருத்தை வெளியிட்டிருக்க வேண்டும்.

குறைந்தபட்சம், அனைத்து அரசியல் கட்சித் தரப்புக்களினதும் ஆலோசனைகளுக்காக இந்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்க இலங்கையை அமெரிக்கா வலியுறுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் இலங்கை அரசை மேலும் சங்கடத்திற்குள் வீழ்த்தி தனக்கு எதிராக இலங்கை அரசைத் திருப்பி விடுவதன் மூலம் அரசுத் தலைவர்கள் மட்டத்தில் நல்லிணக்கத்தை நோக்கி இருக்கும் குறைந்த பட்ச ஆர்வங்களையும் கூட இல்லாமற் செய்து விடுவதிலேயே அமெரிக்கா குறியாக இருப்பதாகத் தெரிகிறது.

அவசியமான இம் முயற்சிகளை அப்படியே கிடப்பில் போட்டுவிட்டு உண்மைகளைக் கண்டறியும் குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமெனவும் அதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டுமெனவும் அமெரிக்கா வற்புறுத்திக் கொண்டிருப்பது இலங்கை அரசை தன்னுடன் முரண்பட வைப்பதற்கு அமெரிக்கா மேற்கொள்ளும் ஒரு முயற்சியாகும்.

அமெரிக்காவின் இத்தகைய நகர்வுகள் பிந்தியதாக இலங்கையின் கட்சித் தலைவர்கள் மற்றும் மதத் தலைவர்கள் மட்டத்தில் இனத்துவ நிலைப்பட்டு புதிய சர்ச்சைகளை கையிலெடுப்பதற்கு வழிசமைத்திருக்கின்றன என்றே எண்ணத் தோன்றுகின்றது..




இவ்வாறான இனத்துவ நிலைப்பட்ட கருத்துக்கள் வெளிவருவது அமெரிக்காவுக்கு உள்ளூர விருப்பமான செயற்பாடுகளாக இருக்கலாம் என்பது வேறுவிடயம்.

பிந்தியதாக் அரசு நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் நல்லிணக்கம் குறித்து எதுவுமேயில்லை எனவும் அதன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் இன நல்லிணக்கத்துக்கான பரிந்துரைகளை செயற்படுத்த சிலர் கோருவது வேடிக்கையான விடயம் என்றும் அமைச்சர் சிறிபால டி சில்வா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த ஒப்புக் கொண்டு அதற்கான திட்டத்தையும் அமெரிக்காவிடம் சமர்ப்பித்திருக்கும் நிலையில் அமைச்சர் கூறியிருக்கும் இக் கருத்து இலங்கை அரசு மேற்கொள்ளும் நல்லிணக்கத்துக்கான தனது முயற்சிகளை தானே மறுதலிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதைக் காட்டுவதாகும்.

பிந்தியதாக, வடக்கு கிழக்கு மக்களை மட்டுமன்றி தென்னிலங்கை மக்களதும் மனங்களைப் பாதிக்கும் வகையில் இரு பௌத்த தேரர்கள் எதிரும் புதிருமான கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர், வடக்கு கிழக்கு தமிழர்களினதா அன்றி சிங்களவர்களினதா என்ற சர்ச்சைக்கு தீர்வு காண அரசு தவறிவிட்டதாக தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் தம்பர அமல தேரர் வெளியிட்ட கருத்துக்கு பதிலாக வடக்கு கிழக்கு தமிழர்களின் தாயகம் என்று கூறுவதற்கு எவ்வித சான்றோ ஆதாரங்களோ கிடையாது என எல்லாவெல மேதானந்த தேரர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மதத் தலைவர்களின் இக் கருத்துக்குப் பதிலடியாக இலங்கையில் வந்தேறு குடிகள் சிங்களவரே என்பதை ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயாராக இருப்பதாக கலாநிதி விக்கிரமபாகு கருணாநாயக்க கருத்து வெளியிட்டிருப்பதுடன், இதற்கான பகிரங்க விவாதத்துக்கும் தான் தயாரென அவர் அறிவித்திருக்கிறார்.

மூன்று தசாப்த காலப் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு, இலங்கை அனைத்து இன மக்களுக்குமான ஒரே தேசம் என்ற நிலைக்குச் செல்கையில், இது குறித்து சர்ச்சைகளை கிளப்புவது இனத்துவ நிலைப்பட்ட சிந்தனைகளை மக்கள் மத்தியில் மீண்டும் கிளறுவதற்கே வழிவகுக்கும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**– சாலையூரான்.**

போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க செயற்படுவதாகக் கூறிக் கொண்டு உள்நாட்டில் அமைதியற்ற சூழலை உருவாக்குவதன் மூலம் தமது ஆக்கிரமிப்பு நோக்கங்களை அடைய முயலும் வெளிச் சக்திகளுக்கு எமது தலைவர்கள் வெளியிடும் கருத்துக்கள் வாய்ப்பாக அமைந்து விடாது பார்த்துக் கொள்வதும் மிக அவசிமான ஒரு செயற்பாடாகும்.

# எண்ணங்கள், கேள்விகள்...

**- மைத்ரேயன்.**

நம் உடலில் மனித உயிரணுக்களைப் போல பத்து மடங்கு அதிகமாக நுண்ணுயிரிகள் இருக்கின்றனவாம். "நான்" என்று அசால்டாக நடக்கிறோம், கருத்து சொல்கிறோம், பிறரைக் கொல்ல முடிவு செய்கிறோம், பெரும் ஆறுகளைத் தடுத்து பிரும்மாண்டமான அணைகளைக் கட்டி, ஏராளமான உயிரினங்களின் வாழ்வுப் பாதையை நம் இச்சைப்படி மாற்றி அமைக்கிறோம். காடுகளை அழித்து, ஆற்றுப்படுகைகளை மணல் வாரி, இயற்கையோடு போருக்குப் போகிறோம். இலட்சக் கணக்கான மனிதர்களைத் திடீரென்று நகரத்திலிருந்து காடுகளுக்குத் துரத்துகிறோம். அந்த நான் யார்? இந்த நான் என்பது உண்மையில் 10 சதவீதமே உள்ள மனித உயிரணுக்களின் தொகுப்பா, இந்த 90 சதவீதமுள்ள நுண்ணுயிர்களின் தொகுப்பா?



★★★★ ★★ ★★ ★★ ★★★★

சில நேரம் தவறுகள், பல அறிவியல் ஆய்வுகளை முன்னெடுத்துப் போக உதவுகின்றன என்று வாதம் முன்வைக்கப்படுகிறது. குவாண்டம் தகவல் கோட்பாடு என்று இன்று சொல்லப்படும் ஒரு துறை தொடங்கக் காரணம் 80களில் ஒரு இயற்பியலாளர், ஒளியின் வேகத்தை விடக் கூடுதலான வேகம் கொண்ட தந்தி முறையைக் கண்டு பிடித்ததாகச் சொன்னதுதான். மிகவுமே நுணுகி நோக்கிய பின்னரே அதில் என்ன தவறு என்று தெரிந்ததாம். அந்தத் தவறைக் கண்டுபிடிக்கப் பயன்படுத்திய அணுகுமுறைகளில் இருந்து கிட்டிய முன் தாவல், மேற்படி க்வாண்டம் தகவல் கோட்பாடு. இதனால் தவறுகளே அறிவியலை முன்னெடுக்கின்றன என்று சொல்வதாக நினைக்கத் தேவை இல்லை. ஒரு நபரின் தவறுகளில் இருந்து ஒரு கூட்டம் சிந்தனையாளர்களுக்குப் புதுத் திறப்புகள் கிட்டலாம் இல்லையா?

★★★★ ★★ ★★ ★★ ★★★★

தவறுகளை இல்லாதவை போல வரலாற்றைத் திருத்தி அழித்து விடுவது அறிவீனம். அவற்றைத் திரும்பப் பார்க்கும் வகையில் ஆவணப் படுத்துவது அவசியம். கடந்தவற்றை குரோதத்தோடு பார்ப்பதை விட, அவற்றிலிருந்து சரியான விடைகளை எப்படி உருவுவது என்று பார்ப்பதே அறிவுள்ள செயலாகும். தவறுகளே செய்ய மாட்டாதவர் என்று எம்மனிதரையும் உருவகித்துப் பீடமேற்றுவது, நமக்கு நாமே செய்து கொள்ளும் சிதைப்பு. புனிதர்களால் மனித இனம் முன்னேறுவதில்லை, அவர்கள் மனிதருக்கு சுமக்க முடியாத, சுமக்கத் தேவை இல்லாத ஒரு சுமையாகி விடுகிறார்கள். இன்னும் சொன்னால் அறிவியலில் புனிதர் என்று யாரும் இல்லாததாலேயே அது நிரந்தர வாலிபத்தோடு இருக்கிறது, உயிர்த் துடிப்போடு செயல்படும் ஊக்கம் அதற்கு இயல்பு போல அமைந்து விடுகிறது.

★★★★ ★★ ★★ ★★ ★★★★

"மக்ஸ்வீனிஸ்" பத்திரிகையின் சமீபத்திய இதழ் பார்த்து பிரமிப்பு. அதன் வடிவமைப்பில் தொடங்கி அச்செழுத்து, காகிதம், உள்ளே உள்ள பல கதைகள், கட்டுரைகள் எங்கு துவங்குவது அதன் புகழ் பாட? இரண்டு நாட்களாயின அந்த இதழைப் படித்து முடிக்க. சாப்பிடுகையில், காலைக்கடனுக்கு அமர்கையில், கண்ணாடிக் கதவு வழியே மாலைச் சூரியன் சாயும்போது வெயிலுக்காக அமரும்போது, என்று பல துண்டு துணுக்கு நிமிடங்களில் அதைப் படித்து முடித்தேன். இரவு கடைசிக் கதையைப் படிக்கையில் உறக்கம் வந்து அமிழ்த்தியது. முடித்து விட்டு நினைவிழந்தேன். படிக்க இத்தனை அருமையாக உள்ள பத்திரிகையைக் கூட தொடர்ந்து இருந்து வாசிக்க முடியாமல் ஒரு வாழ்க்கை. இளைஞனாக இருக்கையில் ஒரு நாவலை எடுத்தால் இரண்டு நாட்கள் அசையாமல் ஒரே அறையில் இருந்து வாசிக்க முடிந்திருக்கிறது. (காட்ச் 22, டின் ட்ரம், த க்ளாஸ் பீட் கேம், செம்பருத்தி) வாழ்வில் முன்னேற்றம் இருக்கிறதா என்று கேட்டால், இந்தக் கோணத்தில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டி இருக்கும். ஒரு முன்னேற்றம் - இங்கு (அமெரிக்காவில்) மின்சாரம் வெட்டப்படுவது சில வருடங்களில் ஓரிரு முறை, இரண்டு மூன்று நிமிடம் நடந்திருக்கலாம். அது முக்கியமான முன்னேற்றமா? ஆம் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் ஒரு புத்தகத்தைக் கூட இருந்து படிக்க முடியாதது? நிச்சயம் முன்னேற்றமில்லை.

## பெட்ரோல் செலவின்றி 4,000 மைல்!

**கடந்த ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி ஜப்பானை சுனாமி தாக்கியதை யாரும் மறந்திருக்க முடியாது. சுனாமி தாக்கியபோது பல கட்டடங்கள், வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன. அப்போது அடித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்று 4,000 மைல் கடலில் பயணித்து கனடாவை அடைந்துள்ளது. இந்த மோட்டார் சைக்கிளின் புகைப்படம் மற்றும் வண்டி பதிவு எண்ணை வைத்து ஜப்பானில் அதன் உரிமையாளர் கண்டுபிடிக்கப்பட்டார்.**

# கிழக்குத் தெரு

நாங்கள் கிழக்குத் தெருவிலிருந்தபோது
கிழக்கு எங்கேயிருந்தது என்று கேட்டான்
தம்பி
அப்போது அது வேடிக்கையாக இருந்தது
எங்களுக்கு

இப்போது எங்கள் தெருவுக்கு கிழக்கே
இன்னொரு தெரு வந்திருக்கிறது
எது கிழக்குத் தெரு என்று தெரியவில்லை
எல்லோருக்கும்
இந்தச் சுற்றும்
உலகில்.

பிறகு நாங்கள் மேற்குத்
தெருவில்
இருந்தோம் என்று
சொன்னார்கள்

ஆனால்
அப்போதும் இப்போதும்
நாங்கள் ஒரே
தெருவில்தான்
இருக்கிறோம்



**- கருணாகரன்.**

# வேர் அறுதலின் வலி

**- கவிஞர் ஜன்ஸி கபூர்.**

**(விமர்சனம்)**

இலக்கியங்கள் காலத்தை வென்றும், நின்றும் பேசப்படக் கூடியவை. அவை வாழ்வியல் அனுபவங்களுடன் ஒன்றித்து நிற்கும் போதே மேற்கூறிய யதார்த்தம் மெய்ப்படுகின்றது. வேர் அறுதலின் வலியும் இக் கட்டுக்கோப்புக்குள் தன்னைத் தொட்டு நிற்கின்றது.

"வேர் அறுதலின் வலி" இது தாயகத்தின் இருப்பை வலுக்கட்டாயமாகப் பறித்தெடுத்த ஓர் சமூகத்தின் வலி! 1990 ஒக்டோபர் 30 ஆம் திகதி 2 மணி நேரத்தில் தம் பாரம்பரிய பூமியிலிருந்து விடுதலைப்புலிகளால் பலாத்காரமாக விரட்டியடிக்கப்பட்டு இன்னும் அகதி வாழ்விலிருந்து மீளமுடியாத சோகத்தில் புரண்டு கொண்டிருக்கும் எம் சமூகத்தின் கண்ணீர்..... அவலம்!

யாழ் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு வீணாக கழிந்து விட்ட 21 ஆண்டின் நிறைவாக நடத்திய கவிதைப் போட்டிக்காக குவிக்கப்பட்ட மன உணர்வுகளின் சங்கமிப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 55 கவிதைகள் "வேர் அறுதலின் வலி" யுடன் சங்கமித்துக் கிடக்கின்றது.

யாழின் மகுடங்களாக உயர்ந்து கிடப்பவை பனை மரங்களே. அந்தப் பின்னணியை புலப்படுத்தும் பனைமரங்களுடன் கூடிய முகப்பட்டை. அழகான தலைப்பு! உள்ளே இருக்கக்கூடிய கனதியான கவிதைகளை நம் எதிர்பார்ப்பில் வீழ்த்தக்கூடியதாக இக் கவித்தொகுப்பு காணப்படுகின்றது.

ஈழத்தில் வாழும் முஸ்லிம்களின் வாழ்விலும், வரலாற்றிலும் அதிக அக்கறையுள்ளவர் கவிஞர் வ.ஐ.ச.ஜெயபாலன். அவர்களின் முன்னுரையோடு இக் கவித்தொகுப்பு பயணிக்க ஆரம்பிக்கின்றது. ஜெயபாலன் அவர்களின் முன்னுரையில் "இம் மக்களின் துன்பத்திற்கான பிராயச்சித்தம் மேற்கொள்ளப்பட வேண்டுமென்ற" ஆதங்கம் இழையோடிக் கிடக்கின்றது.

"பாதிக்கப்பட்ட மக்களின் உணர்வுகளை வெளியிட சிறந்த சாதனம் கவிதைகளாகும்" என ஆசிரியரும் எழுத்தாளருமான எம்.எஸ்.ஏ.ரஹீம் ஆசிரியர் அவர்கள் தனது ஆசிச் செய்தியினூடாக இக் கவிப்பயணத்தின் நகர்வுக்கு கையசைக்கின்றார்.




இரு தசாப்தங்கள் உதிர்ந்தாலும் கூட மறக்கப்பட முடியாத ஞாபகங்களும், வலி தரும் ரணங்களும் அன்றைய ஞாபகப் பொழுதுகளின் ஈரம் இன்னும் உலர்த்தப்படாத தன்மையை சகல கவிதைகளும் தொட்டு நிற்கின்றன.

ஒருவரின் மனவெளிப்பாடுகள் எவ்வித திருத்தமின்றி அவர் குரலாகவே ஒலிப்பது இங்கே சிறப்பு. ஏனெனில் செம்மைப்படுத்தலுக்காக அரிதாரம் பூசும் போது அவர் அனுபவித்த அனுபவங்கள் தம் எடையைக் குறைக்கின்றன. ஒருவர் தன் அனுபவங்களை தான் மாத்திரமே உணரலாம் அனுபவிக்கலாம்.

சில கவிஞர்கள் தம் தலைப்புக்களை சுருக்கமாக, அழகாக வைத்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகின்றது. பத்திற்குமேற்பட்ட கவித்தலைப்புக்கள் சற்று நீளமாகக் காணப்பட்டன.

இருந்தும் அவற்றின் கவியடக்கம் தன் கனதியைக் குறைக்கவில்லை... ஒவ்வொரு கவிதைகளின் ஏற்ற இறக்கங்களுக்கேற்ப எழுத்துக்களின் வடிவம் மாற்றப்பட்டிருப்பது கூட சிறப்பே!

"கண்ணீர் கரையும்" எனும் கவிப்பக்கத்தின் ஈர்ப்பில் விழி இன்னும் மொய்த்துக் கிடக்கின்றது அந்த விழியின் சித்திரத்தில் ஈர்க்கப்பட்டு! கண்ணீரின் ஏக்கத்துடன் தொடங்கப்பட்ட இக் கவிப்பயணம் கடைசியில் "வசந்த காலம் வருமோ, வாழ்வின் நிலை மாறுமோ" எனும் கவியோடு முற்றுப் பெறுகின்றது.

வசந்தத்திற்கான ஏக்கம் ஒவ்வொரு மனங்களின் எதிர்பார்ப்பாக ஊடுருவிக் கிடப்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஐம்பத்தைந்து பேரின் எண்ண வார்ப்புக்கள் இவை.

கவித் தொகுப்பட்டையின் பின்புறம் கவிஞர் அல்லாமா இக்பால் சிரிக்கின்றார். அவர் புன்னகைச் சிந்தலின் ஓர் துளியிது,,,, "நித்திய வாழ்க்கை நீ வாழ விரும்பின் உன் இறந்த காலத்தை நிகழ்காலத்திலிருந்தும் எதிர்காலத்திலிருந்தும் துண்டித்து விடாதே"

ஆம் கடந்த காலங்களில் நாம் பெற்ற கசப்பான அனுபவங்களிலிருந்து, மீண்டும் நமக்கான வசந்தத்தைத் தேடிப் பயணிப்பதற்கான பாதையை நம்பிக்கையோடு வகுப்போம் எனும் எதிர்வுகூறலாய் அது அமைந்துள்ளது.

போனது போகட்டும் இனி நாம் பயணிக்கவுள்ள நற்பாதையில் இறைவனின் துணையுடன் வசந்தங்கள் வந்தமரட்டும். அல்லல் வாழ்விலிருந்து துகிலுரிக்கப்பட்டு எம் மனங்களின் அமைதி நிறைக்கட்டும்!!

தனித்து, துணிந்தியங்கி யாழ் முஸ்லிம்களின் இருட்டடிக்கப்பட்ட வாழ்வை உலகின் கண்முன் நிறுத்திக் கொண்டிருக்கும் அன்ஸிரின் இம் முயற்சிக்கு பாராட்டுக்கள்.

# சினிமாவில் இந்தியா முதலிடம்

உலகிலேயே சினிமா தயாரிப்பில் எண்ணிக்கையளவில் முதலிடம் வகிப்பது இந்தியாதான். இந்தியாவில் கடந்த 2007 ஆம் ஆண்டு 1,132 திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. அதே வருடம் அமெரிக்காவில் 520 உம் ஜப்பானில் 418 உம் சீனாவில் 400 உம் தயாராயின.




சினிமா தயாரிப்பில் இந்தியா ஏன் முதலிடம் பெறுகிறது? இந்தியாவில் சினிமா என்பது தவிர்க்க முடியாத பொழுது போக்கு. அதுதான் காரணம். மற்ற நாடுகளை விட இந்தியாவில் டிக்கெட் விலை யும் குறைவு. இந்தியாவில் குறைந்தபட்ச டிக்கெட் விலையாக ரூபா 22 உள்ளது. இதுவே அமெரிக்காவில் 2.2 டொலராகவும், சீனாவில் 11.7 டொலராகவும் உள்ளது.

இந்தியாவில் சினிமா மூலம் மட்டும் வருடத்திற்கு 950 கோடி வருவாய் கிடைக்கிறது. இந்தியாவைத் தொடர்ந்து அமெரிக்காவும் ஜப்பானும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியாவில் நிறைய மொழிகள் இருக்கின்றன. அந்த மொழிகள் அனைத்திலும் படங்கள் தயாரிக்கப்படுவதால் அதன் எண்ணிக்கையும் வருவாயும் கூடுகிறது.

## சினிமா பற்றிய சில தகவல்கள்

வசந்த மாளிகை படம் வெளியான சமயத்தில் உடனடியாக பார்வையாளர்கள் சற்று டல்தான். அதில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இறப்பதாகக் கதை அமைத்திருக்கிறார்கள். அவசர அவசரமாக முடிவை மாற்றி "இன்னும் கொஞ்சம் லேட்டா வந்திருந்தால் செத்திருப்பார்" என்று டாக்டர் சொல்வதாக எடுத்து சிவாஜியை பிழைக்க வைத்தார்கள். படம் சூப்பர் ஹிட் ஆனது. தமிழகத்தில் வெள்ளிவிழா கண்ட இப்படம், இலங்கையிலும் மாபெரும் வெற்றி கண்டது.

ஒரு படத்தின் முடிவு அந்தப் படத்தை தொடர்ந்து ஓட வைத்துக் கொண்டே இருக்கிறது என்றால் நம்ப முடிகிறதா? அமெரிக்காவில் உள்ள தியேட்டர் ஒன்றில் 1975 இல் இருந்து ஓடிக் கொண்டிருக்கிறது "ரொக்கி" என்ற பேய்ப்படம். மனிதனை பேய்கள் எவ்வாறு எல்லாம் கொடுமைப்படுத்துகின்றன என்பதுதான் கதை. உறைய வைக்கும் க்ளைமாக்ஸ். இப்போதும் நிற்காமல் ஒரே தியேட்டரில் ஓடிக் கொண்டிருக்கிறது, அந்தப்படம்.

இந்தியாவிலும் அப்படி ஒரு படம் உண்டு. ஷாருக்கான், கஜோல் நடித்த "தில்வாலே துல்ஹனியா லே ஜாயேங்கே" படம் 1995 ஆம் வருடம் ஒக்டோபர் 20ஆம் திகதி ரிலீஸ் ஆனது. பிரிந்து போன ஷாருக்கும், கஜோலும் ரயில்வே ஸ்டேஷனில் இணைகிற கிளைமாக்ஸ், இரசிகர்களைக் கலங்கி அழ வைத்தது. அன்று ரிலீஸ் ஆன இந்தப்படம் இன்று வரை மும்பையில் உள்ள மராட்டா மந்திர் என்ற தியேட்டரில் ஒரு காட்சியாக ஓடிக் கொண்டே இருக்கிறது.

இந்தக் கனவுத் தொழிற்சாலையின் வசீகரம் இன்றைக்கும் குறையாமல் இருப்பதுதான் ஆச்சர்யம்.


# எண்ணிக்கை

குழந்தை கேட்டது,
'எனக்கு எப்படி ஐந்து வயது?'

'நீ பிறந்து ஐந்து வருடங்கள்
ஆகின்றன'.

விரல்களை விரித்து எண்ணியது.
பின், விரல்களை மடித்து மூடியது.
மீண்டும்,
வெயிலில் நின்று
எறும்புகள் கோடாக
நகர்வதை பார்க்கத்
தொடங்கியது.

ஒரே எறும்பு,
ஒரே கணத்தில்,
எல்லா இடத்திலும்
நடந்துகொண்டிருப்பதுபோல
இருந்தது.



**- ச. அனுக்ரஹா.**

# திருமணம் பலவிதம்!

- இந்தியாவில் பெல்லாரி மாவட்டத்தில் உள்ள குறும்பர் என்ற இனத்தில் நடக்கும் திருமணத்தில் மணப் பெண்ணுக்குப் புரோகிதர்தான் தாலி கட்டுவார்.

- ஜேர்மனியில் திருமணநாளுக்கு முதல் நாள், மணமகன் வீட்டு வாசலில் மண் பானையைப் போட்டு உடைக்கிறார்கள்.

- இந்து திருமணத்தில் அக்னியை வணங்குதல், வாக்கு தானம், கன்னிகா தானம், சப்தபதி, திருமணத்தின் முக்கிய அம்சமான தாலி கட்டுதல், அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல் போன்ற சடங்குகள் உள்ளன. திருமணத்திற்காக உண்டாக்கப்படும் புனித அக்னியை மணமக்கள் வலம் வந்து ஏழு அடி எடுத்து வைப்பது போன்ற சடங்குகளைச் செய்தால் மட்டுமே திருமணம் செல்லுபடியாகும்.




- மாங்கல்யக் கயிறு ஒன்பது இழைகளை உடையது. இந்த ஒன்பது இழைகளும் பற்றி காயத்ரி மந்திரம் குறிப்பிடுகிறது. அவை, வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல், மேன்மை, ஆற்றல், தூய்மை, தெய்வீக நோக்கம், உத்தம குணங்கள், விவேகம், தன்னடக்கம், தொண்டு ஆகியவற்றை பிரதிபலிக்கின்றது.

- நைஜீரியாவில் அந்நாட்டு தேசிய கீதம் ஒருவருக்குத் தெரியவில்லையென்றால், அவர் பிரம்மச்சாரியாகவோ கன்னியாகவோ இருந்துவிட வேண்டியதுதான். திருமணப் பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தைப் பதிவு செய்யும் முன்பாக தம்பதிகள் இருவரும் தேசிய கீதத்தைக் கட்டாயம் பாடவேண்டும்.

- ஜப்பான் நாட்டில் ஒருசில இடங்களில் கல்யாணச் சடங்குகளில் ஒன்று, மணப் பெண்ணின் புருவங்களை நீக்கிவிடுவது ஆகும். அப்பொழுதுதான் அப்பெண்ணை மணமானவள் என்று ஒப்புக் கொள்வார்கள்.

- பசிபிக் கடலில் உள்ள அரு தீவுகளில் வாழும் அர.்.புராஸ் என்னும் இனத்தவரில் கல்யாணம் நடக்கும்போது மணப்பெண்ணின் கண்களை ஒரு துணியால் கட்டிவிட்டுத்தான் மணமகன் அவள் கழுத்தில் தாலியைக் கட்டுவான். மணப் பெண்ணின் கண்களைக் கட்டும் துணி, மணமகனால் கொடுக்கப்படுவது வழக்கம்.

# உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் பொறுப்பு உணர்ந்து செயற்படுவதில்லை



(கொழும்பு)

கிராம உள்ளூராட்சிகளின் முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம் என்பதைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் உள்ளூராட்சித் தலைவர்களுக்கு அதிகாரங்களை வழங்கியுள்ளது. நிர்வாகத்தில் இருநத நடைமுறைச் சிக்கல்களை விலக்கி உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் சுயமாகச் செயற்பட அனுமதித்துள்ளது.

ஆனால் அவர்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவதில்லை. இதன் காரணமாக பல ச்பைகளின் அபிவிருத்திப் பணிகள் முடங்கிப் போயுள்ளன என ஈ.பி.டி.பி வடமராட்சி அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேசசபையின் எதிர்க்கட்சித் தலைவரான ஐயாத்துரை சிறிரங்கேஸவரன் தெரிவித்தார்.

கடந்த 31 ஆம் திகதி முற்பகல் 10.00 மணியளவில் பருத்தித்துறை பிரதேசசபையின் மாதாந்தக் கூட்டம், சபையின் தவிசாளர் பூ.சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்றது. சபையின் தவிசாளர் தலைமை உரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து, எதிர்க்கட்சித் தலைவர் தனது பதிலுரையிலேயே இவ்வாறு தெரவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சி வளர்ச்சிப் பணிகளுக்காக மத்திய அரசாங கத்தினால் தேவையான நிதி ஒதுக்கீடு அவ்வப்போது அளிக்கப்பட்டு வருகிறது. உள்ளூராட்சி சபைகளுக்கு பல்வேறு அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டதன் நோக்கம் மக்கள் உள்ளூராட்சியின் சேவைகள் மூலம் நேரடியாக பயனடையவேண்டும் என்பதற்காகவே ஆகும். மத்திய அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு நெல்சிப் என்றிப் வடக்கின் வசந்தம், கிறாண்ட் போன்ற திட்டங்களின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்கின்றது. அந்த நிதி முழுமையாக மக்களை சென்றடைய வேண்டும் என்பதிலும் உறுதியாக உள்ளது. ஆனால் பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உபஅலுவலக நிர்வாகத்திற்கு உட்பட்ட பிரதேசத்தில் மத்திய அரசாங்கம் வழங்கிய நிதிகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு அபிவிருத்திப் பணிகள் முறையாக செயற்படுத்தாமல் கைவிடப்பட்ட நிலை காணப்படுகிறது.

குறிப்பாக மருதங்கேணி வாரிவட்டன் வீதி முதலாம் பகுதி வேலையும் முழுமையாக செயற்படுத்தப்படவில்லை. அம்பன் கொட்டோடை வீதி பாதியில் கைவிடப்பட்ட நிலையில் உள்ளது. உடுத்துறை சுனாமி குடியிருப்பு வீதிகள் என பல்வேறு வீதிகள் நிதி இருந்தும் புனரமைக்கப்படாமல் கைவிடப்பட்டுள்ளன.

இதற்கு மேலாக வத்திராயன் கிராமத்தின் வீதிகள் எதுவும் புனரமைக்கப்படாமலும், ஆகக்குறைந்தது ஊரி வீதிகள கூட புனரமைக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. திக்கம் மாணாண்டிச் சந்தையிலுள்ள ஆழ்துளை கிணறு இன்னமும் திருத்தப்படாமல் குடிநீர் இல்லாத சூழல் காணப்படுகிறது. பல சபைக் கூட்டங்களில் சுட்டிக்காட்டப்பட்டும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

அல்வாய் மாவிலங்கையடி - அல்வாய் பழைய வேதக்கோவிலடிக்குச் செல்லும் சேமக்காலை வீதியை நேரடியாகச் சென்று பார்வையிட வேண்டும் எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டும், அது பார்வையிடப்படவில்லை. இவ்வாறு அலட்சியமான செயற்பாடுகளே காணப்படுகின்றன.

மருதங்கேணிப் பிரதேசம் மீள்குடியேற்றப் பிரதேசம் என்பதால் மக்கள் போதிய மருத்துவ வசதியினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கோடு ஆயுர்வேத வைத்தியசாலையை ஒரு நாளாவது மருதங்கேணியில் நடாத்துமாறு இச்சபையில் கோரியிருந்தேன். ஆனால் இன்றுவரை ஒவ்வொரு காரணங்கள் சொல்லப்பட்டு அப்பகுதி மக்களுக்கான ஆயுர்வேத மருந்துகள் பெறுவதற்கான வழிவகை செய்து கொடுக்கப்படவில்லை.

சபைக்குரிய ஒழுங்கைகளை அகலப்படுத்தி புனரமைக்க தீர்மானங்கள் சபைகளில் நிறைவேற்றப்படுகின்றன. ஆனால் எதுவும் நடைமுறையில் இல்லை. இதனை ஆளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சபைத் தலைவர்கள் பொறுப்புக்களை உணர்ந்து செயற்படுவதில்லை எனத் தெரிவித்தார்.

## இலங்கை - சீனா இராணுவ ஒத்துழைப்பு

(கொழும்பு)

இலங்கை மற்றும் சீனாவுக்கிடையில் இராணுவ ஒத்துழைப்பினை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் விடயம் தொடர்பில் இலங்கை யின் இரா்ணுவத் தளபதி ஜயத் ஜயசூரிய வுக்கும் சீனாவின் பாதுகாப்பு அமைச்சருக் கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின் போது பேசப்பட்டுள்ளது.

இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் முக்கியமான சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்கள் தொடர்பாக பல் வேறு பொதுவான கருத்துப் பிரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

## இலங்கையில் மூவின மக்களும் ஒன்றாக இயங்கும் காலம்



(கொழும்பு)

தமிழ் சிங்கள, முஸலிம் மக்கள் ஒன்றாக சேர்ந்து இயங்கக் கூடிய காலம் ஏற்பட்டுள்ளதாகவும் அப்படி இயங்காவிட்டால் நாடு மீண்டும் இரண்டாகப் பிளவுபடக்கூடிய அபாயம் காணப்படுவதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப் போராட்டத்தால் வெல்ல முடியாத ஈழத்தை அரசியல் பலத்தால் வெல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டுக்கு சேவை செய்ய பிக்குகளின் பலம் அவசியம் எனவும் இதன் போது அத்துரலிய ரத்தின தேரர் மேலும தெரிவித்துள்ளார்.

## தீர்ப்பை ஏற்கத் தவறினால் சபையிலிருந்து வெளியேற்றுவேன்

### சஜித்திற்கு சபாநாயகர் எச்சரிக்கை



(கொழும்பு)

தான் அளித்த தீர்ப்பை ஏற்றுக்கொள்ளத் தவறினால், சபையிலிருந்து வெளியேற்றுவேன் என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸவை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரித்தார்.

காட்டு யானைகளின் எண்ணிக்கை தொடர்பாக சஜித் பிரேமதாஸ கேள்வியொன்றை எழுப்பிய பின் சபாநாயகர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

சஜித் பிரேமதாஸ அக்கேள்வியை எழுப்பியவுடன், ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய ஐ.ம.சு.கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.அஸ்வர், இதேபோன்ற கேள்வியொன்றை ஒரு மாதத்திற்கு முன்னரும் சஜித் பிரேமதாஸ எழுப்பியதாக சுட்டிக்காட்டினார்.

நிலையில் கட்டளையின்படி, ஒரே மாதிரியான இரு கேள்விகளை இரு சந்தர்ப்பங்களில் கேட்கமுடியாது என சபாநாயகர் சமல் ராஜபக்ஷ கூறினார்.

இவ்விடயம் குறித்த தனது தீர்ப்பை இரு கேள்விகளையும் ஆராய்ந்தபின் அளிக்கவுள்ளதாகவும் அதுவரை அக் கேள்வியை கேட்க சஜித் பிரேமதாஸவுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் சபாநாயகர் கூறினார்.

அவ்வேளையில் சபாநாயகரின் மறுபையும் மீறி, சஜித் பிரேமதாஸ சில கருத்துகளை கூறமுற்பட்டார்.

அப்போது. உங்களை நான் வெளியே அனுப்புவேன். உங்களுக்காக தனியான விதிகளை கொண்டிருக்க முடியாது என சபாநாயகர் கூறினார். எனினும், சிறிது நேரத்தின்பின், கேள்வி கேட்பதற்கு பிரேமதாஸவுக்கு சபாநாயகர் அனுமதித்தார்.

## யானை தாக்கி 75 பேர் மரணம்; மனிதன் தாக்கி 176 யானைகள் பலி

(கொழும்பு)

மனிதர்களுக்கும் யானைகளுக்கும் இடையிலான மோதல் தொடர்ந்துவரும் நிலையில் 2011 ஆம் ஆண்டில் 176 யானைகள் மனிதர்களால் கொல்லப்பட்டுள்ளன. யானைகளின் தாக்குதல்களால் 75 பேர் கொல்லப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2011 ஆம் ஆண்டு உயிரிழந்த யானைகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு 227 யானைகள் உயிரிழந்திருந்த அதேசமயம், 2011 ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை 176 ஆகக் குறைவடைந்துள்ளது.

யானைகளின் தாக்குதல்களால் 2010 ஆம் ஆண்டு 81 பேர் உயிரிழந்தபோதும் 2011 ஆம் ஆண்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை சற்றுக் குறைவடைந்து 75 ஆகப் பதிவாகியுள்ளது. 2005 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 1330 யானைகள் கொல்லப்பட்டுள்ளன.

இந்தக் காலப்பகுதியில் வடமேல் மாகாணத்திலேயே அதிகமான யானைகள் கொல்லப்பட்டுள்ளன. இப்பகுதியில் மாத்திரம் 426 யானைகள் கொல்லப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்தது. இதற்கு அடுத்தபடியாக மகாவலி பகுதியில் 382 யானைகளும், கிழக்கு மாகாணத்தில் 161 யானைகளும் கொல்லப்பட்டுள்ளன.

யானைகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான மோதலில் உயிரிழப்புக்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் பரந்துபட்டளவில் எடுக்கப்பட்டிருப்பதாக வனஜீவராசிகள் திணைக்களத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் எஜ்.டி.ரத்நாயக்க தெரிவித்தார்.

வடமேல் மாகாணம் உட்பட யானைகளின் தாக்குதல்கள் அதிகம் இடம்பெறும் பகுதிகளில் மின்சாரப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றைக் கண்காணிப்பதற்கு பிராந்திய அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். இதுமாத்திரமன்றி யானைகளுக்காக நீர்த்தேக்கங்கள் மற்றும் அவற்றின் பசியைத் தீர்ப்பதற்காக புற்தரைகள் என்பன உருவாக்கப்பட்டு காடுகள் மற்றும் சரணாலயங்களிலிருந்து யானைகள் கிராமங்களுக்குள் செல்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

அதேநேரம் கிராமங்களுக்குள புகுந்து அட்டகாசம் செய்யும் யானைகளைப் பாதுகாப்பாகப் பிடித்து அவற்றுக்கெனத் தனியான இடங்களை அமைத்து அவற்றைப் பராமரிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ஹொரவப்பொத்தானை மற்றும் லுனுகம்வெகர ஆகிய இடங்களில் தனித்தனியான யானை பராமரிக்கும் இடங்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யானைகளைக் கொல்பவர்கள் மற்றும் அவற்றுக்குத் தீங்கு ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகச் சுட்டிக்காட்டிய ரத்னாயக்க, யானைத் தாக்குதல்களால் உயிரிழந்தவர்களுக்கு காப்புறுதிப் பணமாக ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படுவதுடன் காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாவும் சொதுக்களுக்கு ஏற்பட்ட செலவீனங்களுக்கு நட்டஈடாக 50 ஆயிரம் ரூபாவும் காப்புறுதித் திட்டத்தின் ஊடாக வழங்கப்படுகின்றன. யானைத் தாக்குதல் மற்றும் அவற்றிலிருந்து பாதுகாப்பது தொடர்பில் எல்லைக் கிராம மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் திட்டங்களையும் திணைக்களம் முன்னெடுத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.



கிளிநொச்சி மத்திய கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தனி அலகாகப் பிரிக்கப்பட்டு புதிய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. இதுவரை காலமும் கிளிநொச்சி மத்திய கல்லூரியுடன் ஆரம்பப் பிரிவும் இணைந்து செயற்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

(படம்: ஜெ.கலையகன்)

## வடபகுதி மாணவர்களுக்கு உயிர் பாதுகாப்பு அங்கிகள்

(கொழும்பு)

உயிர்ப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதற்கான பணிகளுக்கென யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா பிரதேசங்களிலிருந்து தம்புள்ளை பிரதேசத்திற்கு தம்புள்ளை நீர் உயிர் பாதுகாப்புச் சங்கத்தின் அழைப்பின் பேரில் சென்றுள்ள உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வுகள் கடந்த மூன்றாம் திகதி இப்பங்கட்டுவ நீர்த்தேக்க முன்றலில் இடம்பெற்றது.

காணி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் மற்றும் நீச்சல் தடாகங்களில் உயிர்ப் பாது காப்பு தொடர்பான பயிற்சிகளைப் பெற்ற வடபகுதி மாணவர்களுக்கும் அவர்களது பயிற்சியாளர்கள் மற்றும் ஆலோசகர்களுக்கும் உயிர்ப் பாதுகாப்பு அங்கிகளை வழங்கினார்.

Grade - 13

க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
G.C.E. (A/L) Examination model Paper

| 02 | T | II |
|---|---|---|

நேரம் :
2 மணித்தியாலம்

இரசாயனவியல் - II
Chemistry - II

கல்வி முரசு

ஆசிரியர் :
S.T.Janarththanan
(B.se)
(0777634345)

*இரசாயனவியல் - II தொடர்ச்சி.....*

(c) (i) (I) இரும்பு பிரித்தெடுப்பிற்கு ஊதுலை பயன்படுத்தப்படும். இரும்பு பிரித்தெடுப்பிற்கு பயன்படுத்தப்படக் கூடிய இரும்புக் கனிமங்கள் இரண்டினது சூத்திரங்களை எழுதுக.

(II) மேலே கூறப்பட்ட இரும்புக் கனிமங்களில் ஒன்றினைப் பயன் படுத்தி இரும்பு பிரித்தெடுக்கப்படும் போது ஊதுலையில் நடைபெறும் எல்லாத் தாக்கங்களையும் எழுதுவதுடன் வெப்ப நிலையையும் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

(ii) ஓசோன்படை அழிவுக்குக் காரணங்கள் இரண்டைத் தருவதுடன் இது எவ்வாறு நிகழ்கிறது என விளக்குக.

(15 புள்ளிகள்)

(iii) (I) நீரின் நிலையில் வன்மை, நிலையான வன்மை என்பவற்றிற் கான காரணங்கள் யாது?

(II) மேற்குறிப்பிட்ட இரு வன்மைகளையும் அகற்றுவதற்கு ஒவ்வொன்றிற்கும் இரு முறைகளைத் தருக.

(15 புள்ளிகள்)

(9)

(a) (i) அணுவெண் 17 ஐ உடைய மூலகம் L இன் இலத்திரன் நிலையமைப்பை $1s^2, 2s^2$.... எனும் வழமையான முறையில் எழுதுக.

(ii) L எடுக்கும் ஒட்சியேற்ற எண்கள் எல்லாவற்றையும் எழுதுவதுடன் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

(iii) (I) $L_2O_7$, $LO_2$ ஆகிய ஒட்சைட்டுக்களை L உருவாக்கும். இவ்விரு ஒட்சைட்டுக்களும் நீருடன் நடைபெறும் தாக்கத்திற்காக சமன்படுத்திய சமன்பாட்டை எழுதுக.

(II) மேற்படி தாக்கத்தில் பெறப்படும் விளைவுகளின் பெயர்களை எழுதுக.

(30 புள்ளிகள்)

(b) (i) கடல் நீரில் காணப்படும் கல்சியத்தைக் கொண்ட கனிவளத்தையும், அதைச் சூழவுள்ளவற்றையும் பயன்படுத்தி வெளிற்றும் தூள் உற்பத்தி தொடர்பாக உமது அறிவையும் கொண்டு இக்கைத்தொழில் தொடர்பான பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(I) கடல் நீரைப் பயன்படுத்தி இவ்வுற்பத்தியிற்கு பயன்படுத்தப்படும் ஆரம்ப மூலப்பொருட்களைக் கூறுக.

(II) மேலே (i) இல் குறிப்பிட்ட இம் மூலப்பொருட்கள் எவ்வாறு பெறப்படும் எனத் தெளிவாகக் குறிப்பிடுக.

(III) கல்சியத்தைக் கொண்ட கனிவளத்தைப் பெயரிடுக.

(IV) வெளிற்றும் தூள் உற்பத்தியிற்கு (iii) இல் கருதப்பட்ட கனிவளத்தை எவ்வாறு பயன்படுத்துவது என விளக்குக.

(V) இத் தொழிற்சாலை மூலம் சூழல் எவ்வாறு பாதிப்புறும் என்பதை சுருக்கமாக விளக்குக.

(VI) மேற்படி விளைவுகளின் பயன்கள் இரண்டினைக் கூறுக.

(30 புள்ளிகள்)

(iii) வீட்டுத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படும் வெளிற்றும் கரைசல்களில் காணப்படும் பிரதானமான செயற்பாட்டு கூறு $ClO^-$ ஆகும்.

$25cm^3$ குறிப்பிட்ட கரைசல் எடுக்கப்பட்டு காய்ச்சி வடித்த நீர் சேர்த்து $100\ cm^3$ இற்கு ஐதாக்கப்பட்டது. இக்கரைசலின் $25cm^3$ இற்கு $0.5\ moldm^{-3}$ KI கரைசலின் $10cm^3$ உம் 0.01 $moldm^{-3}$ $Na_2S_2O_3$ கரைசலினால் நியமிக்கப்பட்டது முடிவுப்புள்ளியில் அளவிவாசிப்பு $24.20\ cm^3$ ஆகக் காணப்பட்டது.

(I) மேற்படி தாக்கங்களிற்கான சமன்படுத்திய சமன்பாடுகளை எழுதுக.

(II) இந்நியமிப்பிற்குப் பயன்படுத்தக்கூடிய காட்டிகளை பெயரிடுக.

(III) வெளிற்றும் கரைசலில் காணப்படும் $ClO^-$ அயன்களின் செறிவைக் காண்க.

(30 புள்ளிகள்)

(c) (i) (I) Na, N, P, O, Cl ஆகியவற்றின் ஐதரைட்டுக்களின் இரசாயனச் சூத்திரங்களை எழுதுக.

(II) மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு ஐதரைட்டுக்களினதும் அமில, மூல இயல்புகளைக் கூறுக.

(III) மேற்படி ஐதரைட்டுக்கள் நீருடன் நடைபெறும் தாக்கத்திற்கான சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.

(20 புள்ளிகள்)

(ii) (I) கொதிநீராவிக் காய்ச்சி வடிப்புத் தத்துவங்களையும், கொதிநீராவிக் காய்ச்சி வடிப்பின் நன்மைகளையும் விளக்குக.

(II) நீரும், நீரில் கரையும் சேர்வை B யும் கொண்ட கலவை ஒன்று கொதிநீராவிக் காய்ச்சி வடிப்பிற்கு உட்படுத்தப்பட்டது. 1 atm வெளியமுக்கத்திலும் 372 K வெப்ப நிலையிலும் கலவை கொதிக்கச் செய்யப்பட்டது. வடிதிரவத்தில் திணிவு ரீதியில் ஒரு பகுதி B இற்கு ஐந்து பகுதி நீர் ஆகக் காணப்பட்டது. சேர்வை B இன் சார் அணுத்திணிவைக் காண்க. 372 K இல் நீரின் ஆவியமுக்கம் 733 mm Hg. (1 atm = 760 mm Hg, H=1, O =16)

(40 புள்ளிகள்)

(10)

(a) (i) சல்பரின் ஒட்சி அமிலங்கள் மூன்றின் கட்டமைப்புக்களை வரைக. இவ்வொட்சி அமிலங்களின் பெயரையும் இதில் S இன் ஒட்சியேற்ற எண்களையும் கூறுக.

(ii) S இற்கும் Cone $HNO_3$ அமிலத்திற்கு இடையே நடைபெறும் தாக்கத்திற்கான சமன்படுத்திய சமன்பாட்டை எழுதுக.

(iii) சல்பரின் கனிமங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக. இக்கனிமங்களின் ஒன்றினைப் பயன்படுத்தி நடைபெறும் கைத்தொழில் செயன்முறை ஒன்றைக் கூறுக. ஆரம்ப மூலப்பொருள் தாக்க நிபந்தனை, பயன்படுத்தப்படும் ஊக்கி என்பவற்றை கருதி மேற்படி கைத்தொழில் செயன்முறையை விளக்குக. இம்முறையில் நடைபெறும் தாக்கங்களிற்கான சமன்படுத்திய சமன்பாடுகளை எழுதுக.

(iv) மேலே பெறப்படும் விளைவின் இரண்டு பயன்களைக் குறிப்பிடுக.

(50 புள்ளிகள்)

(b) (i) $Na_2SO_4$, $Na_2SO_3$, $Na_2S_2O_3$, $Na_2S$ ஆகிய நான்கு கரைசல்கள் தனித்தனியே அடங்கிய நான்கு சீட்டை இல்லாத போத்தல்கள் உமக்கு வழங்கப்பட்டுள்ளது. பின்வரும் தாக்கு பொருட்களை மட்டும் பயன்படுத்தி எவ்வாறு மேலே நான்கு சேர்வைகளையும் வேறுபிரித்து அறியமுடியும் என விளக்குக.
தாக்கு பொருட்கள் :- அமில $KMnO_4$, ஐதான $HNO_3$

(30 புள்ளிகள்)

(ii) பின்வரும் செயற்பாடுகளில் தேவையான நிபந்தனைகளையும் எல்லாப் படிகளுக்கும் பொருத்தமான சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடுகளையும் எழுதுக.

(I) சோல்வே முறை மூலம் $Na_2CO_3$ (s) உற்பத்தி செய்தல்.

(II) $NH_3$ ஐயும், $O_2$ ஐயும், ஆரம்ப மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி $NaNO_2$ இன் கைத்தொழில் முறைத் தயாரிப்பு.

(30 புள்ளிகள்)

(c) $Cu_2S$ ஐயும், CuS ஐயும் மட்டும் கொண்ட திண்மக் கலவையொன்று, 20g திணிவைக் கொண்டது. இக்கலவை $0.75\ moldm^{-3}$ $KMnO_4$ கரைசலின் 400 ml உடன் தாக்கம் புரிந்து $SO_2$, $Cu^{2+}$, $Mn^{2+}$ என்பவற்றை உருவாக்கியது. கரைசலை வெப்பப்படுத்துவதன் மூலம் மீதி $SO_2$ அகற்றப்பட்டது. கரைசலில் மீதியாக விடப்பட்ட $MnO_4^-$ அயன்கள் தாக்கமுறுவதற்கு $1\ moldm^{-3}$ $Fe^{2+}$ கரைசலின் $350\ cm^3$ தேவைப்பட்டது. திண்மக் கலவையில் காணப்படும் $Cu_2S$ இனதும், CuS இனதும் மூல விகிதத்தைக் காண்க. (Cu = 63.5, S = 32)

(40 புள்ளிகள்)

Grade - 13

# க.பொ.த.(உயர்தர) மாதிரி வினாத்தாள்
## G.C.E. (A/L) Examination model Paper

02 | T | II

நேரம் : 2 மணித்தியாலம்

உயிரியல் - I
Biology - I

# கல்வி முரசு

ஆசிரியர் :
Ponniah Aravinthan
(B.se, M.ed, Dip.in.ed)

(01) உயிரங்கிகளில் காணப்படும் அத்தியாவசிய மூலகங்களுள் C, H, O, N ஆகியன பெருமளவில் காணப்படும் 6 மூலகங்களாகும். ஏனைய இரண்டு மூலகங்களும்,
1. கந்தகமும், கல்சியமும்
2. பொசுபரசு, கல்சியம்
3. கந்தகம், பொசுபரசு
4. இரும்பு, கந்தகம்
5. சோடியம், குளோரின்

(02) உயிரியல் மூலக்கூறுகள் தொடர்பாக சரியான கூற்று எது?
1. புவியில் பெருமளவில் காணப்படும் சேதனமூலக்கூறுகள் நியூக்கிளிக் அமிலங்களாகும்.
2. இயற்கையாகக் காணப்படும் 20 வகையான அமினோ அமிலங்களின் வேறுபட்ட சேர்க்கைகளின் மூலம் புரதங்கள் உருவாக்கப்படுகின்றன.
3. தாய்ப்பாலில் காணப்படும் இலக்ரோசு ஒரு ஒருசக்கரைட்டு ஆகும்.
4. பொசுபோலிப்பிட்டுகள் என்பவை எளிய இலிப்பிட்டுகளாகும்.
5. நியூக்கிளிக்கமிலங்கள் கோளவுருவான முப்பரிமாண அமைப்புகளாகும்.

(03) நொதியம் தொடர்பான தவறான கூற்றைத் தெரிவு செய்க.
1. நொதியங்கள் தாம் தாக்கத்திற்குப் பயன்படாமல் தாக்கவேகத்தை அதிகரிக்கின்றன.
2. தாக்க விளைபொருளின் இயல்பை அவை மாற்றுவதில்லை.
3. சில நொதியங்களின் வினைத்திறனான தொழிற்பாட்டுக்கு துணை நொதியம் எனப்படும் புரதமல்லாத கூறும் தேவைப்படுகின்றது.
4. நொதியங்கள் தமது தொழிற்பாடு தொடர்பாக தனித்துவமானவை.
5. தாக்கத்தின் பின் நொதியங்கள் மாற்றமடையாமல் காணப்படுவதால் புதிய கீழ்ப்படையுடன் சுயாதீனமாக தாக்கமடைகின்றன.

(04) புடைக்கல்விழையம், ஒட்டுக்கலவிழையம் ஆகியவற்றுக்குரிய பொதுவான இயல்பு பின்வருவனவற்றுள் எது?
1. துணைச்சுவரைக் கொண்ட உயிருள்ள கலங்கள்
2. முதலுரு இணைப்புக்கள், புன்வெற்றிடம் என்பவற்றைக் கொண்ட கலங்கள் ஆகும்.
3. சீராகத் தடிப்படையாத கலச்சுவரைக் கொண்ட பல்கோண அமைப்புடைய கலங்களாகும்.
4. எளிய குழிகளைக் கொண்டவை.
5. தெளிவான கலத்திடை வெளிகளைக் கொண்டவை.

(05) இயல்புகளின் ஒப்பீட்டில் பின்வருவனவற்றுள் சரியானது என கூறமுடியாத சோடி எது?

| | வைரசு | புரட்டிஸ்ரா |
|---|---|---|
| 1. | RNA அல்லது DNA மட்டும் காணப்படும் | RNA,DNA இரண்டும் காணப்படும் |
| 2. | உணவுச் சங்கிலியின் முதல் கொழுவியாக காணப்படும் | உணவுச்சங்கிலியின் முதல் கொழுவியாக காணப்படும் |
| 3. | இழையுருப்பிரிவு ஒரு போதும் நிகழாது | இழையுருப்பிரிவு நிகழும் |
| 4. | ஒடுக்கற்பிரிவு ஒரு போதும் நிகழாது | ஒடுக்கற்பிரிவு நிகழும் |
| 5. | அனுசேபத்தாக்கங்கள் இல்லை | அனுசேபத்தாக்கங்கள் உண்டு |

(06) பங்கசு தொடர்பாக பின்வருவனவற்றுள் சரியானது,
1. இனப்பெருக்கத்தின் போது மட்டும் சவுக்குமுளை கொண்ட கலங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.
2. இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தின் போது மட்டும் வித்திகள் தோற்றுவிக்கப்படுகின்றன.
3. சில பங்கசுக்களில் இலிங்க உறுப்புக்கள் தோற்றுவிக்கப்படுகின்றன.
4. வாழ்க்கை வட்டத்தில் சந்திப்பரிவிருத்தியைக் காட்டுகின்றன.
5. பெரும்பாலான பங்கசுக்களில் இரு கருக்கூட்டு நிலை ஆட்சியானது.

(07) பின்வருவனவற்றுள் தவறானது எது?
1. அந்தோபைற்றாக்கள் (Anthophyta) கருக்கட்டலுக்கு நீரில் தங்கியிருப்பதில்லை.
2. போகனேற்றத்தில் உருவத்தில் ஒத்தபுணரிகள் தோற்றுவிக்கப்படுகின்றன.
3. குளோரோபைற்றாக்களிலும், தாவரங்களிலும் குளோரபில் காணப்படுவது ஒரு பொதுவான இயல்பாகும்.
4. Cnidara க்களின் சந்ததிப்பரிவிருத்தியில் தோன்றும் இச்சந்ததிகளும் இருமடியானவை.
5. உண்மையான இழையமட்ட ஒழுங்கமைப்பைக் காட்டுவதும் தற்போசணை முறையைக் காட்டுவதுமான அங்கிகள் தாவர இராச்சியத்துள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(08) அங்கிகளின் கூர்ப்பு தொடர்பாக தவறானது எது?
1. ஆதியான சுவட்டு பற்றிரியாக்கள் 3.5 billion வருடங்களுக்கு முற்பட்டவை.
2. முதலாவது இயூகரியோட்டாவசுட்டுப்பதிவுகள் 1.5 billion வருடங்களுக்கு முன்பாக காணப்பட்டதாக கருதப்படுகின்றது.
3. காற்றுவாழ் ஒளித்தொகுப்பு பற்றிரியாக்களின் தோற்றத்தின் பின்பே ஒட்சிசனைக் கொண்ட வளிமண்டலம் நிலைப்படுத்தப்பட்டது.
4. இயூகரியோற்றாக்களின் தோற்றத்தின் பின்பே பிரதான இரும்புப் படுக்கைகள் தோன்றின.
5. புரோட்டிஸ்ராக்கள் பல்வகைமை அடைந்ததும் பிரதான முள்ளந் தண்டிலிகளின் தோற்றமும் 0.7 பில்லியன் வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்தவையாகும்.

(09) உயிர்ப்பல்வகைமை தொடர்பாக தவறானது எது?
1. பொதுவாக இனங்களின் கூர்ப்பு வீதமானது இன அழிவு வீதத்தை விட உயர்வானது.
2. ஒரு சூழற்தொகுதியின் தொழிற்பாட்டுக்கு அவசியமான இனங்கள் மூலாதார இனங்கள் (Key stone spp) எனப்படும்.
3. சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வை அல்லது தேசிய கலாசாரத்தை சுட்டிக்காட்டும் இனங்கள் வாழும் உயிர்ச்சுவடுகள் எனப்படும். (Relict species)
4. ஒரு சுற்றாடல் மாற்றம் பரம்பரை அலகு தேக்கங்கள் (genopool) குறைவாக உள்ள அரிய இனங்களின் அழிவுக்கு வழிவகுக்கும்.
5. உறைநிலையில் வைக்கப்பட்ட மூலவுருக்களில் உள்ள பிரதான பின்னடைவு யாதெனில் அவை கூர்ப்பு ரீதியாகவும் உறைந்து போவதாகும்.

(10) தாவரங்களில் நீர்த் தொடர்பு தொடர்பாக பின்வரும் எக்கூற்று தவறானது?
1. நீர் மூலக்கூறுகளின் இயக்கசக்தியை அதிகரிக்கும் காரணிகள் நீரழுத்தப் பெறுமானத்தில் நேர்விளைவை ஏற்படுத்தும்.
2. குவிவான முதலுருச் சுருங்கலானது கலத்தின் நீரழுத்தம் பூச்சியம் என்பதைக் காட்டுகிறது.
3. உப பிரகாரணக் கரைசலில் முதலுருச் சுருக்கிய கலமொன்று வைக்கப்படும் போது அகப்பிரகாரணம் நிகழும்.
4. கலச்சாறு அதிகளவு கரையங்களைக் கொண்டிருந்த போதும் அதன் நீரழுத்தம் பூச்சியத்தை அடையலாம்.
5. அமுக்க அதிகரிப்புடன் நீரழுத்தமும் அதிகரிக்கும்.

(11) தாரவ அசைவு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?
1. ஒளித்திருப்ப அசைவுகளில் அசைவின் திசையானது தூண்டலின் திசையிலிருந்து விலகியே காணப்படும்.
2. ஒளித்திருப்ப அசைவு தொடர்பான ஆய்வுகளின் முன்னோடி சார்ள்ஸ்டாவின் ஆவார்.
3. ஒளித்திருப்ப அசைவுகளில் ஒளிபடாத பக்கத்திலுள்ள கலங்களின் நீட்சியானது ஒட்சிசன்களால் தூண்டப்படுகிறது.
4. சில வேர்கள் எதிர் புவித்திருப்ப அசைவைக் காட்டுகின்றன.
5. காவற்கலங்களின் அசைவு முன்னிலை அசைவுக்கு ஒரு உதாரணமாகும்.

(12) சகல தற்போசணிகளும்,
1. சக்தி மூலமாக சூரிய ஒளியைப் பயன்படுத்துகின்றன.
2. சூரிய ஒளியை சக்தி மூலமாகவும், ஒட்சிசனை இலத்திரன் மூலமாகவும் பயன்படுத்துகின்றன.
3. காபன் மூலமாக காபனீரொட்சைட்டையும் சக்தி மூலமாக சூரிய ஒளியையும் அசேதனப் பதார்த்தங்களையும் பயன்படுத்துகின்றன.
4. காபன் மூலமாக காபனீரொட்சைட்டையும் சக்தி மூலமாக சூரிய ஒளியையும் பயன்படுத்துகின்றன.
5. சேதனப் பொருட்களை சக்தி மூலமாகவும், $CO_2$ வை காபன் மூலமாகவும் பயன்படுத்துகின்றனர்.

(13) சரியான கூற்றைத் தெரிவு செய்க.
1. ஆவியுயிர்ப்பும், கசிவும் உயிர்ப்பான செயன்முறைகள் ஆகும்.
2. ஏதாவது தாவரத்தில் வேரமுக்கமானது நீரின் மேல் நோக்கிய அசைவில் பிரதான பங்களிக்கின்றது.
3. சகல தாவரங்களிலும் பகல் வேளைகளில் இலைவாய்கள் திறக்கின்றன.
4. ஒளியின் தூண்டலால் காவற்கலங்களினுள் $K^+$ பாய்ச்சல் நடைபெறுகின்றது.
5. புன்வெற்றிட பாதையே தாவரமொன்றில் நீர் வேகமாக அசைந்து செல்லும் பாதையாகும்.

(தொடரும்)

# டெங்கு நோயிலிருந்து நம்மை பாதுகாத்துக்கொள்வது எப்படி?

## - யாழ். மாநகர பொதுச்சுகாதார பரிசோதகர்

(கிரு - சிகரம்)

யாழ்.மாநகரசபைக்குபட்ட பகுதியில் அதிகரித்துக் காணப்படும் டெங்கு நுளும்புகளை யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலம் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகரசபை பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் க.அ.ஜீவநாதன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தகவல் தருகையில்;

டெங்குக் காய்ச்சல் தோன்றுவதாக இருந்தால் காய்ச்சல் 104 டிகிரி பர்னையிட்டு வரை இருக்கும். இதனுடன் சோர்வு, உடல் வலி, அதிக தலைவலி, கண் வலி, தசைகள் மற்றும் மூட்டு வலி, வாந்தி, உடலில் அரிப்பு, எலும்பு உடைவது போன்று வலி போன்றன அறிகுறிகளாக காணப்படும். இந்த அறிகுறிகள் இல்லாமலும் ஒருவருக்கு டெங்குக் காய்ச்சல் தோன்றும்.

நுளம்பு கடித்து நோய்க் கிருமி மனித உடலுக்குள் சென்று, மூன்று நாட்கள் முதல் ஏழு நாட்களுக்குள் பல்கிப் பெருகி குறித்த இந்தக் கால கட்டத்துக்குப் பிறகும்கூட டெங்குக் காய்ச்சலுக்கான அறிகுறி வெளிப்படும் வாய்ப்பு உண்டு.

டெங்குக்காய்ச்சலை ஏழு நாள் காய்ச்சல் என்று கூறுவார்கள். நோய் பாதிப்பு ஏற்பட்டு ஏழு நாட்களில் சரியாகிவிடும். சிலருக்கு மட்டும் டெங்கு வைரஸ் மிக மோசமான பாதிப்பை ஏற்படுத்தலாம். டெங்கு வைரஸ் இரத்தத்தில் உள்ள இரத்தத் தட்டுகளில் காணப்படுகின்ற அணுக்களை அழித்துவிடும். இந்தத் தட்டு அணுக்கள்தான் இரத்தம் உறைவதற்கு மிக முக்கியமான காரணம். இரத்தத் தட்டுக்கள் எண்ணிக்கை குறையும்போது, அது நுரையீரல்,வயிறு போன்ற உறுப்புகளிலும் பல் ஈறு, சிறுநீர்ப் பாதையிலும் இரத்தக் கசிவை ஏற்படுத்தக்கூடும். உரிய வைத்திய சிகிச்சையை பெற்றுக் கொள்ளாவிட்டால் டெங்குக் காய்ச்சலால் உயிர் இழப்புகூட நேரிடலாம்.டெங்குக் காய்ச்சல் வராமல் தடுக்க தடுப்பு ஊசி, மருந்துகள் ஏதும் இது வரை கண்டுபிடிக்கப்படவில்லை. ஆனாலும் ஆரம்ப நிலையிலேயே இதனைக் கண்டறிந்து சிகிச்சை எடுப்பதன் மூலம் மட்டுமே உயிர் ஆபத்தை தடுக்க முடியும்.

டெங்குக் காய்ச்சல் ஒருவருக்கு ஏற்பட்டால் உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு சென்று டெங்கு ஐ.ஜி.எம். எலிசா, பி.சி.ஆர். ஆகிய இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு டெங்கு பாதிப்பு உள்ளதா என்பதைக் கண்டறியலாம்.பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டால் மருத்துவர்கள் கூறும் வழிமுறைகளைத் தவறாமல் பின்பற்ற வேண்டும். வீட்டிலேயே நன்றாக ஓய்வெடுக்கலாம். உடலில் நீர்ச் சத்து குறையும் என்பதால், அதிக அளவில் நீர்ச் சத்து உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். ஒருவேளை வாந்தி, வயிற்றுப்போக்கு ஏற்பட்டு நிலைமை மோசமாகத் தொடங்கினால், உடனடியாக வைத்தியசாலை



யில் அனுமதியாகி சிகிச்சையைப் பெற்றுக் கொள்ளலாம்.டெங்குக் காய்ச்சல் ஏழு நாட்களில் சரியாகி விடும். உடல் வலி,சோர்வு போன்ற இதன் பாதிப்புக்கள் இரண்டு வாரங்களில் சரியாகி விடும்

டெங்குக் காய்ச்சலைத் தவிர்க்கக் நுளம்பு ஒழிப்பு ஒன்றே வழி. டெங்கு நோயைப பரப்பும் 'ஏடிஸ் எஜிப்டி' நுளம்பு நன்னீரில் முட்டை இடும் என்பதால், டெங்கு நுளம்புகள் வளர வாய்ப்பு இல்லாதவாறு சுகாதாரமாகச் சுற்றுச் சூழலைப் பராமரிக்க வேண்டும்.

வீட்டுக்குள் நுளம்புகள் வரமுடியாதபடி ஜன்னல்களில் நுளம்பு வலை பொருத்தலாம்.

வாசலில் நீண்ட திரைச்சீலைகளைப் பயன்படுத்தலாம்.

நுளம்புத்திரி,ஸ்பிறே போன்றவையும் பயன்படுத்தலாம் .

வீட்டுச் சுவர்கள் மீது 'டி.டி.டி.' மருந்தைத் தெளித்தால் நுளம்புகள் ஒழியும்.

வீட்டைச் சுற்றியும், தெருவோரச் சாக்கடையிலும் 'டெல்டாமெத்திரின்' மருந்தைத் தெளித்தால் பலன் கொடுக்கும்.

மக்கள் நெருக்கடி கூடிய குடியிருப்புகளில், 1000 கன அடி இடத்திற்கு 4 அவுன்ஸ் 'கிரிசாலை'ப் புகையை செலுத்துவதன் மூலமும் நுளம்புகளை விரட்ட உதவும்.


டெங்குக் காய்ச்சலைத் தடுக்க சுற்றுப்புறச் சுத்தம் முக்கியம். வீட்டைச் சுற்றிலும் தண்ணீர் தேங்க விடக்கூடாது. ரயர்கள்,பொலித்தீன் பைகள், தகரப் பேணிகள், பிளாஸ்ரிக் பொருட்கள், இளநீர்க் கோம்பைகள் காணப்பட்டால் அவற்றை எரியுங்கள் அல்லது புதைத்து விடுங்கள் .சுகாதார ஊழியர்கள் வந்து சுத்தம் செய்யும் வரை காத்திருக்காமல், நீங்களே அகற்றுங்கள்.

கை, கால் முழுக்க மறைக்கும் பருத்தி ஆடைகளை போடலாம் அல்லது நுளம்பு எதிர்ப்பு கிறீம்களை பூசிக்கொள்ளலாம்

காய்ச்சல் வந்தால் உடனே செய்ய வேண்டியது குடிநீரைக் காய்ச்சி வடிகட்டிக் குடியுங்கள். பாடசாலைகளுக்கு செல்வதை தவிர்க்கவேண்டும். அஸ்பிரின் அல்லது அஸ்பிரின் கலந்த மருந்துக்களை பாவிக்கக்கூடாது. டெங்கு அறிகுறி தெரிந்தால், சிறிதும் தாமதம் இன்றி உடனடியாக வைத்தியரை அணுகி, இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளுங்கள்.

அண்மையில் நாடெங்கிலும் நடைபெற்ற தேசிய நுளம்புக்கட்டுப்பாட்டு வாரம் யாழ். மாநகரசபைப் பகுதியிலும் மேற்கொள்ளப்பட்டபோது 9,500 நிலையங்கள் பரீட்சிப்பதற்கு இனங்காணப்பட்டு அனேக நுளம்பு உற்பத்தி இடங்கள் அழிக்கப்பட்டதுடன், 5 பேருக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் மாநகரசபை பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் க.அ.ஜீவநாதன் குறிப்பிட்டார்.

## புனரமைக்கப்பட்டு வரும் அஞ்சுதன் குள வாய்க்கால்



(சிகரம்)

யாழ்.மாநகர சபைக்கு சொந்தமான அஞ்சுதன் குள வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் நெல்சிப் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த காலத்தில் தூர்ந்த நிலையில் காணப்பட்ட இந்த வாய்க்கால் புனரமைப்புப் பணிகள் மிகத் துரித கதியில் நடைபெற்று வருவதுடன், பாலத்தின் புனரமைப்புப் பணிக்களுக்கென தற்போதுவரை 2.257 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது .

இந்தப் புனரமைப்புப் பணிகளை யாழ்.மாநகர முதல்வரின் செயலாளர், பொறியியலாளர் ஆகியோர் கண்காணித்து வருகின்றனர்.

## மோட்டார் சைக்கிள் மோதி ஒருவர் படுகாயம்

(சிகரம்)

யாழ்ப்பாணம் - 6ஆம் குறுக்குத் தெருவில் நேற்றுமுன்தினம் மாலை 6.20 மணிக்கு தனியார் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புத்துறை நோக்கி சென்றுகொண்டிருந்த தனியார் பேருந்தும் குருநகர்ப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் வந்த மோட்டார் சைக்கிளுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த குமார் படுகாயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# மெய்தான் பாருங்கோ...



## பாதை தவறும் பயணங்கள்

சண்டை முடிஞ்சு 'சமாதானம்' வந்திட்டுதெண்டு ஒரு சாரார் ஒருபக்கத்தால சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்க, இன்னொரு பக்கத்தில சந்தி சிரிக்கிற சங்கதியெல்லாம் நடந்து கொண்டிருக்குது கண்டியளே!

"தமிழன் எண்டு சொல்லடா! தலைநிமிர்ந்து நில்லடா...!" எண்டு ஒரு காலத்தில தமிழ்ப்பண்பில ஊறி நிண்டு கொண்டு, வீறாப்பு பேசிய நாங்கள், இண்டைக்கு அங்கை ஒண்டு... இஞ்சை ஒண்டாக நடக்கிற சில தரங்கெட்ட செய்கை காரியங்களைப் பாக்கேக்கை தலை குனிஞ்சு நடக்க வேண்டிக்கிடக்குது பாருங்கோ!

நான் இப்ப இதில என்ன சொல்ல வாறன் எண்டால், இப்ப ரண்டு நாளைக்கு முன்னம் எங்கட ஆலடி வாசிகசாலைக்கு பேப்பர் பாப்பம் எண்டு போனன். அங்கை கிடந்த ஒரு பேப்பரில பிரசுரிச்சுக்கிடந்த செய்தியொண்டைப் பாத்தநேரம் தொடக்கம் இண்டுவரைக்கும் மனம் பெரிய அந்தரமாக் கிடக்குது எனக்கு.

அது என்ன பிரச்சினையெண்டால், முறையற்ற விதத்தில கர்ப்பம் தரிச்ச பொம்புளை யொருத்தி, ஊச்சனத்தின் முகத்தில முழிக்கப்பயந்து, சட்ட விரோதமாய் கருவைக் கலைக்கப் போய், அதால எக்கச்சக்கமாக இரத்தப்போக்கு ஏற்பட்டதால இறந்து போனாளெண்டு... அந்தப்பேப்பரில முன்பக்கம் செய்தி போட்டுக் கிடந்துது.

இந்தச் சீத்துவக் கேடான விசயம் வேறையெங்கும் நடக்கேல்லை. உந்தச் சுன்னாகப்பக்கம்தான் நடந்திருக்கெண்டு போட்டிருக்கு. ஒரு காலத்தில பழக்கவழக்கம்... பண்பாடு... மானம் மரியாதைகளில சிறிதளவும் பிசிறாது வாழ்ந்த யாழ்ப்பாண மண்... இண்டைக்கு?

இப்ப புதுப்புது சாமானுகள், கருவியள் எல்லாம் வரத் தொடங்கின பிற்பாடுதான், உந்தக் கருக்கலைப்பு வேலையளும் வலு கனகச்சிதமாய் நடக்குது பாருங்கோ!

அதாகப்பட்டது என்னவெண்டால், உந்த இண்டர்நெற், கமரா போன்... அது...இதெண்டு அறுபத்தெட்டு வகையான கருவியள், ஆபாச உணர்ச்சியளைத் தூண்டக்கூடியதுகள் வரத் தொடங்கின பிற்பாடுதான், தமிழ்சமூகத்தின்ர வாழ்வும், கலாசாரம் பண்பாடு பழக்க வழக்கமெல்லாம் தலைகறணமாப் போச்சுது எண்டு சொல்லவாறன். சரி! உந்தச்சாமானுகள் வந்தாலும், உதைக்குறிச்சு ஆரேனும் விழிப்பாக இருக்கினமே? அதுவுமில்லை.

சரி இது கிடக்கட்டும்! நான் இப்ப இன்னொரு பிரச்சினையைச் சொல்ல வாறன்.

சுன்னாகத்தில நடந்த சட்ட விரோத கருக்கலைப்பு விசயத்தில பாதிக்கப்பட்ட பொம்புளை செத்துப்போச்சுதாம். சரி செத்தவள் செத்துப்போனாள்... போய்த்துலையட்டும் எண்டு இந்தச் சமூகம் ஆத்திரத்தில தூற்றிப்போட்டுப் போனாலும், அவளை இந்தநிலைக்குக் கொண்டு வந்த சந்தர்ப்ப சூழ்நிலையள் இன்னொருபக்கம் இருக்குதல்லோ! அதையும் பாக்கவல்லோ வேணும்.

செத்தவளின்ர புருசன் ஊரில இல்லாததால, இதை ஒரு சாட்டாகவைச்சு வலை விரிக்கும் ஆணாதிக்க மேலாண்மையைக் குறிச்சு ஆராவது சிந்திக்கினமே? ஒரு பெண் ஒழுக்கத்திலயிருந்து தவறிவிட்டாள்... எண்டவுடன உக்கிரமடையிற இந்தச்சமூகம் அவளை இந்த நிலைக்கு ஆளாக்கி விட்டிட்டுப் போனவனைப்பற்றி அதிகம் பேசாமல் இருக்கிறதாலதான் நாளாந்தம் இப்படியான அரியண்ட சங்கதிகள் எங்களுக்கு நடுவில அரங்கேறிக் கொண்டிருக்குது பாருங்கோ!

பிரச்சினை சுன்னாகத்தில மட்டுமில்லை. முன்னமும் உப்பிடி உங்கினேக்கை நடந்திருக்குது. இப்பவும் நடக்குது. உதுக்கு ஒரு விழிப்புணர்வு இல்லையெண்டால் இனியும் எங்கையெண்டாலும் நடக்குமெண்டு சொல்லவாறன்.

உந்தப் பெண்விடுதலை அமைப்புகளெல்லாம் எங்கை போட்டினம்? மகளிர் தினம்... அன்னையர்தினம்... எண்டு வருசத்தில ஒரு நாளைக்கு கூட்டம்கூடி... றோட்டில கோஷம் போட்டு... மேடைப்பேச்சுப்பேசி... அடுத்தநாளைக்கு பேப்பரில தங்கட படமும் ;பேச்சும் வந்த பிற்பாடு... அதோடை எல்லாம் சரி! பிறகு அடுத்தவருசம்தான் எல்லாம் அவையளுக்கு ஞாபகத்துக்கு வரும்.

பாதை தவறிப்போற பயணங்களில எங்கடபொம்புளையளுக்கு உந்த பெண் விடுதலை அமைப்புகள் சரியான பாதையைக்காட்டி, ஒருத்தரையும் சந்திசிரிக்கவிடாமல் பாதுகாத்து வழி நடத்தமுனையலாம் தானே.

எங்கை இனியாவது, இப்பவாவது செய்ய வெளிக்கிடட்டும் பாப்பம்.

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# சிதம்பரத்தை உடனே பதவிநீக்க வேண்டும்; ஜெயலலிதாவும் கோரிக்கை



(புதுடில்லி)

தேர்தல் முறைகேடு வழக்கில் சிக்கியுள்ள மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் உடனே இராஜினாமா செய்ய வேண்டும் அல்லது அவரை பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலாளரும் தமிழக முதல்வருமான ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

2009ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் முறைகேடு மூலம் ப.சிதம்பரம் சிவகங்கை மக்களவைத் தொகுதியில் வென்றார் என்று அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ராஜகண்ணப்பன் வழக்குத் தொடர்ந்திருக்கிறார். இந்த வழக்கின் விசாரணையில் கூண்டில் ஏறி நின்று விசாரணை நடத்துவதில் இருந்து தமக்கு விலக்கு அளிக்கக் கோரி சிதம்பரம் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை இன்று தள்ளுபடி செய்தது.

இந்நிலையில் ப.சிதம்பரம் போன்றவர்கள் அமைச்சர் பதவியில் இருப்பதே ஜனநாயகத்துக்கு இழுக்கானது, அவமானகரமானது என்றும் அவர் உடனே இராஜினாமா செய்ய வேண்டும் இல்லையெனில் அவரை பிரதமர் பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார். ஜனநாயகத்தை சீர்குலைத்த ஒருவரை உள்துறை அமைச்சராக வைத்திருக்கக் கூடாது.. அதனால் ப.சிதம்பரம் உடனே இராஜினாமா செய்ய வேண்டும் என்று பாரதிய ஜனதா தலைவர் நிதின் கத்காரி வலியுறுத்தியுள்ளார். ,

இதேபோல் ப.சிதம்பரத்துக்கு கொஞ்சமாவது வெட்கம் இருந்தால் உடனே இராஜினாமா செய்ய வேண்டும் என்று ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கூறியுள்ளார். இதனிடையே பிரதமர் மன்மோகன்சிங், பிரணாப் முகர்ஜி ஆகியோரை தனித்தனியே ப.சிதம்பரம் நேரில் சந்தித்து தமது தரப்பு விளக்கத்தைத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

# பொலிஸ் திருடர்கள் பிடிபட்டனர்

(திருவனந்தபுரம்)

கேரள பொலிஸ் துறையில், குற்றச் செயல்களில் ஈடுபட்ட 13 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், 226 பேர் பணிநீக்கம் செய்யப்பட உள்ளனர். இவர்களைத் தவிர, 123 பேர் மீது துறை ரீதியான விசாரணை நடந்து வருகிறது என, கேரள முதல்வர் உம்மன் சாண்டி நேற்று முன்தினம் தெரிவித்தார். கேரள முதல்வர் உம்மன் சாண்டி நேற்று முன்தினம் நிருபர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து பேசும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும், கேரள பொலிஸ் துறையில் குற்றச் செயல்களில் (கிரிமினல்) ஈடுபட்டவர்களில், வழக்கு விசாரணையை சந்தித்து வரும் 533 பேர் அடங்கிய பட்டியலை, மாநில பொலிஸ் டி.ஜி.பி. உயர்நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார். அந்தப் பட்டியல் சரியல்ல. பட்டியலில் உள்ளவர்கள் எல்லாம் குற்றவாளிகள் அல்ல. சிறு குற்றங்களைச் செய்தவர்கள் கூட, அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். இது தொடர்பாக வெளியாகும் செய்திகள் தவறான கண்ணோட்டத்தை ஏற்படுத்திவிட்டன எனத் தெரிவித்தார்.



# இந்தியாவிலும் ஆசிரியர்களுக்கு ஆலோசனை

(புதுடில்லி)

ஆசிரியப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள், தங்கள் பணியில் சிறப்பாக செயல்படுவதற்கு, அறிவுத்திறன் மிகவும் அவசியம் என, மத்திய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் கபில் சிபல் தெரிவித்துள்ளார். டில்லியில் நடந்த கல்விக்கான மத்திய ஆலோசனை வாரிய கூட்டத்தில், மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். மேலும் அவர், ஆசிரியப் பணி என்பது மிகவும் மேன்மையான பணி. இந்த பணியில் ஈடுபடுவோர், சிறப்பாகச் செயலாற்ற வேண்டுமெனில், அறிவார்ந்த திறன் கொண்டவர்களாக அவர்கள் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். குழந்தைகளின் கல்வியைப் பற்றிப் பேச வேண்டிய சூழலில், ஆசிரியர்களின் கல்வித் திறன் பற்றிப் பேசுகிறோம். ஆசிரியர்களாக இருப்பவர்கள், தங்களுக்குரிய சிறப்பான கல்வித் திறனைப் பெறாத சூழல் காணப்படுகிறது. அதை மாற்றியாக வேண்டும். ஒளிமயமான இந்தியாவை உருவாக்குவதற்கு ஆசிரியப் பணி விவகாரத்தில் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய, மாநில அரசுகள் தவறிவிட்டன. தரமான கல்வியைக் கற்பிக்க, ஆசிரியப் பணியின் தரத்தை மேம்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.இவ்வாறு கபில் சிபல் தெரிவித்துள்ளார்.



# விவசாயிகளுக்கு கடன்அட்டை





(தேனி)

தமிழகத்தில் தேனி உட்பட நான்கு மாவட்ட விவசாயிகளுக்கு, "கிஷான் கடன் அட்டை" வழங்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. விவசாயிகள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட அனைத்து வங்கிகளிலும், பயிர்க்கடன் உட்பட பல்வேறு கடன்களை எளிதாக பெறும் வகையில், மத்திய அரசு "கிஷான் கடன் அட்டை" வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. முதற்கட்டமாக தேனி, கன்னியாகுமரி, அரியலூர், சேலம் மாவட்டங்கள் இத்திட்டத்திற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன. இம்மாவட்டங்களில் உள்ள 100 சதவீத விவசாயிகளும் பயனடையும் வகையில், அனைவருக்கும் இவ்வட்டை வழங்கப்படும். இதற்காக,விவசாயிகளின் பட்டியலை விவசாயத்துறை உதவியுடன், முன்னோடி வங்கி நிர்வாகம் தயாரித்து வருகிறது. இச்சேவை மற்ற மாவட்டங்களிலும் விரைவில் அறிமுகமாக உள்ளது.

# உறங்கும் போது வருவதல்ல கனவு உறங்க விடாமல் செய்வதுதான் கனவு

(நெய்வேலி)

வீடுகள் தோறும், சிறு நூலகம் இருக்க வேண்டும்: "டிவி" பார்ப்பதை தவிர்த்து, நல்ல புத்தகங்களை படிக்கும் போது, அறிவு வளர்ச்சி மேலோங்கும். குறைந்தபட்சம் பிள்ளைகள் கேட்கும் கேள்விகளுக்காவது, பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக, அவ்வப்போது புத்தகங்களை படித்த, கதிரேசன் என்ற எனது கார் ஓட்டுனர், பேராசிரியராகி விட்டார். எனவே நல்ல புத்தகங்களை படிக்க வேண்டும். தோல்விகளை தோல்வியடையச் செய்ய வேண்டும். தோல்வி இல்லாமல் வெற்றி இல்லை. உறங்கும் போது வருவதல்ல கனவு. உறங்க விடாமல் செய்வது தான் கனவு. இவ்வாறு, முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் பேசினார்.



நேற்றுமுன்தினம் கடலூர் மாவட்டம் நெய்வேலியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட கலாம், நெய்வேலியில் உள்ள என்எல்சி லிக்னைட் அரங்கில் தலைமை பண்பு என்ற தலைப்பில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். மேலும் தலைமை பண்பு என்பது படைப்பு திறன் மிக்கதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நிறுவனத் தின் தலைமைக்கும், நாட்டின் தலைமைக்கும் இது பொருந்தும். மேலும் நெய்வேலியில் 1.80 கோடி மரங்கள் இருப்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். இதன் மூலம் சுற்றுச்சூழல் பெரிதும் பராமரிக்கப்படுகிறது எனத் தெரிவித்தார்.

# நித்தியானந்தாவின் பத்திரிகையாளர் மாநாடு; பத்திரிகையாளர்கள் செல்லமாட்டார்கள்




நித்தியானந்தாவின் பிடதி ஆச்சிரமத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகை சந்திப்பின் போது நித்தியானந்தாவின் சீடர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் இடையில் தள்ளுமுள்ளு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆர்த்தி ராவ் என்கிற அமெரிக்க வாழ் இந்தியப் பெண், தனியார் கன்னட தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில், 2005 இலிருந்து, 2010 வரை நித்தியானந்தா தன்னை 40 முறை பாலியல் பலாத்காரத்துக்கு உட்படுத்தியதாக பரபரப்புப்புகார் கூறினார். இதனால் கர்நாடகாவின் பல்வேறு அமைப்புகளும், பல்வேறு இடங்களில் நித்தியானந்தாவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தினர்.

இந்நிலையில், தனது பிடதி ஆச்சிரமத்தில் செய்தியாளர் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார் நித்தியானந்தா. அப்போது, ஆர்த்திராவ் பேட்டி அளித்திருந்த தனியார் தொலைக் காட்சியை சேர்ந்த நிருபர், ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்ட ஆர்த்திராவின் புகாருக்கு பதில் தரும்படிக் கேட்டார். உடனே கோபம் கொண்ட நித்தியானந்தா பெண் சீடர் ஒருவரை ஏவிவிட்டு, அந்த நிருபரை வெளியேற்றச் சொன்னார். அந்த பெண் சீடர், செய்தியாளரை வெளியேற்றச் முயன்றதால் மற்ற செய்தியாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதனால் செய்தியாளர்களுக்கும், ஆச்சிரம சீடர்களுக்கும் இடையில் ஒரு பெரிய போராட்டம் சுமார் ஒருமணி நேரம் நடந்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதிருப்தி அடைந்த நிருபர்கள், நித்தியானந்தா இப்படித்தான் அடிக்கடி பத்திரிகையாளர் சந்திப்பு என்று அழைத்துவிட்டு பின் அவமானப்படுத்துவார் என்றும், இனி நித்தியின் ஆசிரமத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு என்றால் தாங்கள் புறக்கணிக்கப் போவதாகவும் கூறியுள்ளார்கள்.



# மியன்மாருக்கு எதிரான தடைகள் நீக்கம்



மியன்மாருக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள நிதி மற்றும் பயணத் தடைகளை நீக்கவுள்ளதாக அவுஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது. அவுஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சரின் மியன்மார் விஜயத்தை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மியன்மீாருக்கு அதிகளவில் உதவி வழங்கும் நாடுகளுள் அவுஸ்ரேலியா முக்கிய இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதம் மியன்மாருக்கு எதிரான ஒரு சில தடைகளை அவுஸ்ரேலியா நீக்கியிருந்தது. ஜனநாயக வழிக்கு மியன்மார் திரும்பி வரும் நிலையில் சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் தடைகளை தளர்த்திவருகின்றன. மியன்மாரில் இராணுவ ஆட்சி நிலவியபோது அந்த நாட்டுக்கு எதிராக கடுமையான தடைகள் விதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.



வெளிநாடுகளில் குழந்தைகள் பெரியவர்கள் யாரும் நீரில் விளையாடுவதற்கென விளையாட்டுத் திடல்கள் அமைக்கப்படுவது வழக்கம். அவ்வாறான தென் கொரிய தலைநகர் சியோலில் உள்ள ஒரு நீர் விளையாட்டுத்திடலில் கோடை வெப்பத்தைத் தணிக்க நீரில் ஆட்டம் போடும் குழந்தைகள்

## இஸ்ரேலிய பிரதமரின் திட்டத்துக்கு அமெரிக்கா கண்டனம்


மேற்குக் கரையில் சட்டவிரோதமாக அமைக்கப்படும் குடியேற்றத் திட்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளை பலஸ்தீனம் கைவிட்டிருந்தது. இந்த நிலையில் மேலும் புதிதாக 300 குடியேற்றங்களை அமைக்குமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெட்டன்யாகு உத்தரவிட்டுள்ளார்.

மேற்குக்கரையில் புதிதாக குடியேற்றங்களை அமைக்கும் இஸ்ரேல் பிரதமரின் திட்டத்துக்கு அமெரிக்கா கண்டனம் வெளியிட்டுள்ளது. இந்தக் குடியேற்றத் திட்டங்களால் பலஸ்தீனத்துக்கும் இஸ் ரேலுக்கும் இடையிலான பிரச்சினைகள் மேலும் தீவிரமடையும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது. இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்கு சமாதான ரீதியில் தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அமெரிக்கா தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றது.

# சிரியாவில் சமாதானம் சந்தேகமே

வன்முறைகளை கைவிட்டு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சிரிய அரசாங்கம் மேற்கொள்ளும் என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு பேரவையில் நடாத்தப்பட்ட கூட்டத்தில் உரையாற்றிய பான் கீ மூன் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சிரியாவில் தொடரும் வன்முறைகள் சிவில் யுத்தத்துக்கு வழி வகுக்கும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனினும் முன்னாள் செயலாளர் நாயகம் கொபி அனானின் சமாதானத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்ள முடியும் என பான் கீ மூன் தெரிவித்துள்ளார். மனித உரிமைகள் மிக மோசமாக மீறப்பட்டுவருவதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று ஐ.நா செயலாளர் நாயகம் கூறியுள்ளார்.



# கனேடியக் கடற்படையின் ஆளற்ற வேவுப்படகு

றோயல் கனேடியக் கடற்படை ஆளற்ற வேவுபடகுகளைக் களத்திலிறக்குவதற்கான பரீட்சார்த்தங்களைச் செய்துவருவதாக பாதுகாப்பமைச்சர் பீற்றர் மக்கே தெரிவித்தார். ஆளற்ற மேற்பரப்புக் கலங்கள் ஆளற்ற வான்வேவு விமானங்களிற்கு இணையானதாகவும் தொலைக்கட்டுப்பாட்டில் இயங்குபவையாகவும் இருக்கும். ஒபாமா அரசின் அண்மைய தாக்குதல்களில் அல்கொய்தா தீவிரவாதிகளை ஒழிப்பதற்கான முதன்மை ஆயுதமாக இந்த ஆளில்லா வேவுவிமானங்களே இருந்து வருகின்றன.

வேவுப்படகிற்கான தொழில்நுட்பமானது வேவு விமானத்தின் அடிப்படை உருவாக்கத்திலேயே காணப்படுவதாக மக்கே குறிப்பிட்டார். அத்திலாந்திக் கனடா ஒப்பசுனிற்றீஸ் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வின் ஒரு பகுதியாக, அவர் தனது சொந்த மாநிலமான நோவா ஸ்கொட்டியாவில் ஆய்வைத் தொடர்வதற்காக றோல்ஸ் றொய்ஸ் நிறுவனத்திற்கு 3 மில்லியன் டொலர்களை வழங்கியுள்ளார்.

இது கடலால் சூழப்பட்டுள்ள கனடாவிற்குப் பாதுகாப்பு வழங்குமென்றும் கடல் அபாயங்களைத் தொலைவில் நிறுத்துமென்றும் தெரிவித்தார். வெகுவிரைவில் இப்படகிற்குத் தன்னியக்கமாகவே மீள் எரிபொருள் நிரப்பும் தொழிநுட்பமும் செலுத்துகையைத் திரும்பப்பெறும் பணிகளிற்கான தொழிநுட்பமும் பொருத்தப்படும்.




கடற்படை ஏற்கனவே கடற்படையின் விரைவேகக் கப்பல்களிலிருந்து பறக்கும் தொலைக் கட்டுப்பாட்டு ஆளில்லா வேவுவிமானங்களையும் பரிசோதித்துவருகின்றது. கடந்த பல வருடங்களாகவே கனேடியக் கடற்படையினால் நீரடி றோபோக்கள் கண்ணிவெடிகள் அகற்றப்படுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## தற்கொலைத் தாக்குதல் நடத்த விளம்பரம் மூலம் ஆட்கள் சேர்க்கும் அல்கொய்தா



அமெரிக்கா, இஸ்ரேல், பிரான்ஸ் நாடுகளுக்கு எதிராக தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்த பயிற்சி அளிக்கப்படும் என்று அல்கொய்தா தீவிரவாதிகள் இணையத்தில் விளம்பரம் வெளியிட்டுள்ளனர். அரபு நாடுகளை சேர்ந்த அல்டா, ஷிமுக் அல் இஸ்லாம், ஹோனின் போன்ற இணையத்தளங்களில் இந்த விளம்பரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அதில், இஸ்லாமியத்துக்கு எதிராக செயற்படும் இந்த எதிரிகள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்த வேண்டும். அந்த நோக்கத்துக்காகவே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட 3 நாடுகளுக்கு எதிராக தற்கொலைப் படைத் தாக்குதல் நடத்த விரும்புபவர்கள் மின்னஞ்சல் மூலம் விண்ணப்பிக்கலாம். அதில், தங்கள் அனுபவத்தை குறிப்பிட வேண்டும். மேலும் 3 நாடுகளில் எந்த இலக்கைத் தாக்க விரும்புகிறீர்கள் என்று தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.



கடந்த ஆண்டு ஜப்பானில் நில நடுக்கம் ஏற்பட்டது. நில நடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு உண்டான சுனாமியால், அடித்துச் செல்லப்பட்ட ஜப்பானின் துறைமுகக் கட்டுமானம் (Dodge) ஒன்று,சமீபத்தில் அமெரிக்கக் கடலோரம் ஒதுங்கியது. சுனாமியில் ஜப்பானின் மிசாலா துறைமுகக் கட்டுமானம் அடித்துச் செல்லப்பட்டது. அப்படி அடித்துச் செல்லப்பட்ட கட்டுமானமே தற்போது, அமெரிக்காவின் ஒயேசான் கடற்கரையோரம் கரை ஒதுங்கியுள்ளது. இது சுமார் 8050 கி.மீ தூரம் கடல் பரப்பை கடந்து இவ்வாறு அமெரிக்க கரைக்கு சென்றுள்ளது.

இந்த துறைமுக கட்டுமானம், ஜப்பானின் சுனாமியால் அடித்து வரப்பட்டது என்று தகவல் அறிந்தபின் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து அந்த கட்டுமானத்தை பார்க்கச் செல்கின்றனர். அந்த கட்டுமானம் அருகில் நின்று, ஆர்வமுடன் புகைப் படங்களும் எடுத்து கொள்கின்றனர்.

## பெருவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

பெரு நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க நில ஆய்வு வல்லுநர்கள் தெரிவித்தனர்.

பெருவிலிருந்து 99.7 கி.மீ தொலைவில் நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. இது ரிக்டர் அளவுகோலில் 6 ஆக பதிவானதாகவும், சேதங்கள் குறித்து விபரங்கள் தெரியவரவில்லை எனவும் தெரிவித்துள்ளது.

## கஸகஸ்தானில் சக வீரர்களைக் கொன்ற எல்லைக்காவல் படைச்சிப்பாய்

கஸகஸ்தானில் சீன எல்லைக்கு அருகிலுள்ள காவலரணில் தனது சக எல்லைக் காவல் படையினர் 14 பேரைத் தான் கொலை செய்ததை அக்காவல் நிலையத்தில் உயிர் தப்பிய ஒரேயொரு எல்லைக்காவல் வீரர் தெரிவித்துள்ளார். தியென் ஷான் மலைத் தொடரிலுள்ள இக்காவல் நிலையத்தில் 14 எல்லைக்காவல் படையினரின் சடலங்கள் கருகிய நிலையில்கடந்தவாரம் கண்டு பிடிக்கப்பட்டன. அந்நிலையத்தில் பணியாற்றிய மற்றொரு வீரர் காணாமல் போயிருந்தார்.

கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்ட இந்நபர், தனது சகாக்களைத் தானே கொலை செய்ததாக ஒப்புக்கொண்டுள்ளார். விளாடிஸ்லாவ் சேலாக் எனும் இந்நபர் மோசமாக உளவியல் பாதிப்புக்கு உள்ளாகி காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. எனினும், இது தொடர்பாக கஸகஸ்தான் எல்லை காவல்படை பேச்சாளர் ஒருவரிடம் கேட்டபோது அவர் இத்தகவலை உறுதிப்படுத்தவோ நிராகரிக்கவோ மறுத்துவிட்டார். மேற்படி சம்பவமானது பயங்கரவாத நடவடிக்கை என கஸகஸ்தான் ஜனாதிபதி நூர்சுல்தான் நஸார்பயேவ் முன்னர் விமர்சித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும், வெளியிலிருந்து தாக்குதல்கள் எதுவும் நடத்தப் படவில்லை. அப்பகுதிக்கு வெளியிலிருந்து எவரும் வரவில்லை என தற்போது சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள கஸகஸ்தான் ஜனாதிபதி நூர்சுல்தான் கூறியுள்ளார்.

சிறுகதை

# தற்கொலைப் போராளி

– நடேசன்

(நேற்றைய தொடர்ச்சி)

இயக்கத்தின் கட்டளைப்படி ஆங்கிலம் படிப்பதற்கு ஒரு ரியூட்டரியில் சேர்ந்து விட்டு தெகிவளையில் ஒரு தமிழ் வீட்டில் இருந்தேன். அவர்களுடன் பழகுவது சந்தோசத்தைக்கொடுததாலும் என்னால் அவர்களுக்கு எதிர்காலத்தில் உருவாகவிருக்கும் பிரச்சினைகளை நினைத்து வருந்தினேன்.

கொழும்பில் பழைய நண்பர்களைச சந்தித்து அவர்களுடன் விருந்துகளுக்கு போக முடிந்தது. அவர்கள் மனம் விட்டு தங்கள் காதல் அனுபவங்களையும் கனவுகளையும் என்னுடன் பகிர்ந்தார்கள். தம் காதலிகளை எனக்கு அறிமுகப்படுத்தி கடற்கரை கிளப் எனப் பல இடங்களுக்கும் அழைததுச் சென்ற போது நானும் ஏன் சிசிலியாவுடன் இப்படி இருக்கக் கூடாது என நினைக்கத் தோன்றும். நாட்டை விட்டு இயக்கத்தை விட்டு ஓடிவிடுவோமா எனத் தோன்றும். சிசிலியாவுக்கு கூறி விட்டு வந்த வார்த்தைகள் அவளது முத்தம் போல் ஈரமாக மனதில் நனைத்தபடி இருந்தது. எல்லாவற்றிற்கும் மேல் தலைவர் மீது எடுத்த உறுதி மொழி எனது தலையில் தொங்கும் வாளாக இருந்தது.

நான் பட்ட துன்பத்துக்கு முடிவாக இயக்கத்தில் இருந்து ஒப்பரேசனுக்கு தயாராகும்படி செய்தி வந்தது. கொழும்பில் அரசாங்கம் பாலம் ஒன்று திறக்கவிருப்பதால் அங்கு வரும் முக்கியமானவர்கள் மத்தியில் தற்கொலைக் குண்டு வைப்பதற்கு ஒருவனை அனுப்புவதாகவும் அவனுக்குத்தங்க ஒரு இடம பார்த்துக்கொடுக்குமாறும் எனக்கு உத்தரவு வந்திருந்தது. பார்ப்பதற்கு பதினைந்து வயதான சிறுவன். நீர்கொழும்பு பக்கத்தால் வந்து சேர்ந்தான். வயதைக் கேட்ட போது பதினேழு என்றான். என்னால் நம்ப முடியவில்லை. ஒன்றுவிட்ட தம்பி எனச் சொல்லி அவனை எனது அறையில் வைத்துக் கொண்டேன்.

அவனைப் பார்த்தால் இயக்கம் என சொல்ல முடியாது. கட்டையாக சிறிது குண்டாக பிள்ளையார் போல இருந்தான். அவனுக்கு ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பின்பும் ஐஸ்கிரீம் வேண்டும். எங்கே இருந்து வந்தான் என்பதையோ அவனது உறவினர் பற்றிய விபரங்களையோ நான் கேட்க விரும்பவில்லை.

சாப்பாட்டு நேரத்தைத் தவிர மற்ற நேரங்களில் அவனை சந்திப்பதை தவிர்த்துக் கொண்டேன். ரியூட்டரியில் படிப்பது என்ற சாட்டு எனக்கு வசதியாக இருந்தது. அப்பாவிப் பொடியனாக அந்த அறைக்குள் முழுநேரமும் இருந்தான். பல சஞ்சிகைகளையும் பல ஆங்கில குறுந்தட்டுகளையும் நான் வாங்கி வைத்திருந்த படியால் அதைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

சஞ்சிகைகளை மீண்டும் மீண்டும் அவன் பார்த்துக்கொண்டிருந்த போது "என்ன எல்லாம் படித்து முடித்து விட்டாயா?" எனக் கேட்டேன்.
"இல்லே அண்ணே... எனக்குப் படிக்கத் தெரியாது" என்றான்.

..............................

பாலம் திறப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பாக அவனுக்குரிய குண்டு பொருத்தின அங்கி வந்து விட்டது. பாலத்தை பத்துமணிக்கு திறந்து வைக்க விருப்பதாக தமிழ்ப் பத்திரிகையில் செய்தி இருந்தது. அவனது உடைக்குள் தற்கொலை அங்கியை பொருத்தி எட்டுமணிக்கே வெளியே கொண்டுவந்தாகி விட்டது. கட்டையாக குண்டாக இருந்தவன் குண்டோடு இன்னும் குண்டாகி விட்டான். அதை அவனுக்கு சொல்ல நினைத்தாலும் சொல்வதற்கு மனம் இடம்தரவில்லை. நகைச்சுவையை இரசிக்கும் மனநிலையில் அவனும் இல்லை. சிறிது தவறினால் அவனது உயிர் மட்டுமல்ல எனது உயிரும் போகலாம். இயக்கத்தைப் பொறுத்தவரை எனது உயிருக்கு அதிக மதிப்பு உண்டு.

வெள்ளவத்தையில் இருந்த முஸ்லீம் ஹோட்டலில் ஆட்டுக்கறி கோழிக்கறியுடன் பரோட்டா வாங்கிக் கொடுத்த போது மிகவும் ருசித்து சாப்பிட்டான். "அண்ண தலைவரோடு சாப்பிட்ட போது சாப்பாடு நல்லா இருந்தது. ஆனால் தின்னப் பயமாக இருந்தது. அதோடு கமெராக்காரன் அப்படிப்பார இப்படிப் பார் என அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தான். என்னால் ஒழுங்காக சாப்பிட முடியவில்லை. இதைப் பார்த்த தலைவரும் அன்று சரியாகச் சாப்பிடவில்லை. இன்றைக்குத்தான் ஒழுங்காக ருசித்து சாப்பிட முடிகிறது."

அவனது பேச்சை அனுதாபத்துடன் இரசித்தேன். பதில் எதுவும் சொல்லாமல் அவனது உப்பிய முகத்தை தடவிவிட்டு வனிலா ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்தேன். பத்து மணிக்கு பாலம் திறக்க இருப்பதால் நாங்கள் அரை மணி நேரம் தாமதமாக செல்ல வேணடும் என்பது எங்களுக்கு கிடைத்த உத்தரவு. செகியூரிட்டி செக்கப்புகள் குறைந்து விடும் என்பதும் ஒரு காரணம்.

வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டதால் நாங்கள் கால்நடையாக பாலம் திறக்கும் இடத்திற்கு சென்றோம். காலை நேரத்தில் ஏராளமானவர்கள் காலி வீதியால் வேலைக்குச் சென்று கொணடிருந்ததால் எங்கள் மீது சந்தேகம் விழவில்லை. வாகனங்கள் எல்லாம் தடுக்கப்பட்டு பல நிமிட நேரம் காக்க வைத்து அணு அணுவாக சோதனை போட்டார்கள். "மெதுவாக செல்லுங்கள் அண்ணை. மூச்செடுக்க கஸ்டமாக இருக்கிறது." அவன் இவ்வாறு அடிக்கடி சொன்னான்.

தியேட்டர்களின் முன்னாலிருந்த கட் அவுட்களை நின்று பார்த்த போது அவனது கண்கள் அகலமாக திறந்து முகத்தில் ஒரு மெதுவான புன்முறுவல் தெரிந்ததை அவதானிக்க முடிந்தது. வாசிக்கத் தெரியாத அவனுக்கு சினிமா முக்கியமாகத்தெரிந்ததில் வியபபில்லை. எப்படி சின்னவனாகவும் அபபாவியாகவும் இருக்கும் இவனை ஏன் தெரிந்தெடுத்தார்கள் என்று எனக்குள் வியந்தேன். படிக்கவில்லை என்கிறான். எந்த மாதிரியான குடும்பத்தில் இருந்து வந்தானோ? அவன் மீது பரிதாபம் வந்து எனக்கு கண் கலங்கியது. இயக்கத்தில் சேர்ந்த பின்பு சிசிலியாவை பிரிந்த போது தான் கண்கலங்கினேன். இப்பொழுது இது இரண்டாவது தரம்.

> "மெதுவாக செல்லுங்கள் அண்ணை. மூச்செடுக்க கஷ்டமாக இருக்கிறது." அவன் இவ்வாறு அடிக்கடி சொன்னான்.
> தியேட்டர்களின் முன்னாலிருந்த கட் அவுட்களை நின்று பார்த்த போது அவனது கண்கள் அகலமாக திறந்து முகத்தில் ஒரு மெதுவான புன்முறுவல் தெரிந்ததை அவதானிக்க முடிந்தது. வாசிக்கத் தெரியாத அவனுக்கு சினிமா முக்கியமாகத் தெரிந்ததில் வியப்பில்லை. எப்படி சின்னவனாகவும் அப்பாவியாகவும் இருக்கும் இவனை ஏன் தெரிந்தெடுத்தார்கள் என்று எனக்குள் வியந்தேன்.

பாலம் திறக்கும் இடத்திற்கு வந்தோம். ஏராளமானவர்கள் தெருவெங்கும் கூடி இருந்தார்கள். இந்த இடத்தில் எத்தனை பேர் மரணிக்கப் போகிறார்கள். ஏராளமான தமிழர்கள் வாழும் பகுதியானதால் அவர்களும் பலர் இறக்கப்போகிறர்கள். அதைவிட எத்தனை பேர் இன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாகப் போகிறார்கள். நான் கூட இன்றோ அல்லது சிலநாட்களிலோ பிடிபடக்கூடும்.

பாலத்திற்கு சமீபத்தில் இராணுவத்தினர் பொலிஸ் என நூற்றுக்கணக்கில் பலர் நின்றார்கள். அவர்களுக்கு மத்தியில் அரசியல்வாதிகள் போல் தெரிந்தவர்கள் வெள்ளைநிற தேசிய உடையில் நின்றனர். அவர்களைச் சுற்றி அரணாக இராணுவ அதிகாரிகள். இவர்களுக்கு மத்தியில் இவனைக் கொண்டு போய் வெடிக்கப் பண்ண வேண்டும். முகத்தை மார்போடு சேர்த்து வெடித்தால்தான் உனது முகமும் சிதறி அடையாளம் தெரியாது போகும் என அடிக்கடி அம்மான் சொல்லும் வார்த்தையை நினைவுபடுத்த வேண்டும்.



ஓரளவு மக்கள் கூட்டத்துக்குள் ஊடுருவிக் கொண்டு செல்லும் போது வெள்ளைக்காரர் ஒருவர் கழுத்தில் மாலையோடு நின்றார். அவர்தான் அந்த நிகழ்ச்சிக்கு முக்கியமான நபர் போல் பளிச்சென தெரிந்தார். இது என்ன பிரச்சினையாகிவிட்டது. எந்த வெளிநாட்டவரையும் எமது ஒப்பரேசனில் கொல்லக்கூடாது. தற்செயலாக வெளிநாட்டவர்கள் இறந்தால் அது அரசாங்கத்திற்கு இயக்கத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்கு இலகுவாகப் போய்விடும் என்பதால் கண்டிப்பான உத்தரவாக இருந்தது. எதற்கும் அம்மானுக்கு தொலைபேசி எடுப்போம் எனத் தீர்மானித்து "தம்பி நில். நான் மேலிடத்தில் பேசவேண்டும்" என்றேன்.

"அம்மானிடம் சொல்லுங்கள் என்னை நம்பச் சொல்லி" என்ற போது அவனது கண்ணில் இருந்து கண்ணீர் வந்தது. கையால் பேசாதே என சமிக்ஞை செய்து விட்டு, வன்னிக்கு எடுத்து, "அம்மான் வெள்ளைக்காரர் ஒருவர் கூட்டத்தில் நிற்கிறார்" என்றேன்.

"கொஞ்சம் பொறு. நாங்கள் செக் பண்ணிவிட்டு சொல்கிறோம்" என்றார்.

அந்த ஐந்து நிமிடங்கள் வாழ்க்கையில் மிகவும் நீளமானவை. எந்த முடிவுமற்று நீண்டு கொண்டு செல்லும் இரயில் பாதை போல் இருந்தது. போனில் பேசும் போது சிலர் என்னைத் திரும்பிப் பார்த்தார்கள். தமிழில் மெதுவாக பேசிவிட்டு சிங்களத்தில் ஒரு சில வார்த்தைகள் சத்தமாக பேசியதை அம்மான் புரிந்து கொள்வார். சைலன்சில் இருந்த கைததொலைபேசியில் வெளிச்சம் வந்தது.

பேசிய போது "நமக்குத் தேவையான ஒரு பெரிய நாட்டின் தூதுவர். அவர்தான் பிரதான விருந்தாளியாக வந்து தொலைத்து விட்டார். உடனே ஒப்பரேசனை கான்சல் பண்ணு."

"அம்மான் இந்த இடத்தை விட்டு வெளியேற முடியாது சுற்றி பாதுகாப்பு வலயம்"


"இந்த ஒப்பரேசனை அவருக்காக நாங்கள் நிறுத்தியதாக தெரிவதற்காக சுவரில் மோதி அவனை வெடிக்கச் சொல்லு."

கைத்தொலைபேசித் தொடர்பு நின்று விட்டது. இதை எப்படி அவனிடம் சொல்லுவது? ஆனால் சொல்லித்தான் ஆக வேண்டும். "தம்பி இந்த ஒப்பரேசனை கான்சல் பண்ணிவிட்டதாக அம்மான் சொன்னார். வெளிநாட்டு தூதுவர் இருப்பதால் வேண்டாம் என்கிறார். ஆனால் உன்னை எவரும் இறக்காமல் சுவரில் மோதி வெடிக்க வைக்கட்டாம் என அம்மான் சொன்னார்" என்றேன். அவனது முகத்தைப் பார்க்க முடியாமல் திரும்பியபடி சொன்னேன்.

"அம்மானிடம் சொல்லுங்கள் என்னை நம்பும் படி"

அந்த இடத்தை விட்டு வேகமாக வெளியேறி கடற்கரைப் பக்கம் வரும வரை இரண்டுமுறை செக்கிங் நடந்தது. நல்லவேளையாக கடற்கரை ரோட்டில் ஓட்டோ கிடைத்தது. அதன பின்பு எந்த செக்கிங்கும் இல்லை. வீட்டுக்குள் சென்றதும் கட்டிலில் போர்த்திக்கொண்டு படுத்து விட்டேன். உணவு தண்ணீர் பாத்ரூம் எதற்கும் எழும்பவில்லை.

மாலை ஆறுமணிக்கு தொலைக்காட்சியை பார்த்தேன். தலைப்புச் செய்தியாக பயங்கரவாதிகள் அனுப்பிய தற்கொலைக்குண்டுதாரியை இராணுவத்தினர் பிடிக்க முயற்சித்த போது அவன் தன்னை வெடிக்க வைத்து தற்கொலை செய்து கொண்டான். எனினும் உயிர்சேதம் எதுவும் இல்லை. புதிதாக திறந்து வைத்த பாலத்தை கொழும்பு நகரின் முக்கியமான கட்டுமானப்பணி என்று அதைத் திறந்து வைத்த வைபவத்தில் உரையாற்றிய வெளிநாட்டு தூதுவர் கூறினார் என அந்த செய்தி தொடர்ந்தது.



எனது காதில் எதுவும் விழவில்லை. "அம்மானிடம் சொல்லுங்கள் என்னை நம்பும் படி" என்ற வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எதிரொலித்தன.

*** ****

எனக்குக் கிடைத்த அந்த வாக்குமூலத்தைப் படித்த போது தற்கொலைப் போராளிகளை ஓரளவு புரிந்து கொண்டது போல் உணர்ந்தேன்.

(முற்றும்)

# மடம் வீதியில் பொலிஸ் காவலரண் குற்றச் செயல்களை தடுக்க ஏற்பாடு



(யாழ்ப்பாணம்)

யாழ். மடம் வீதிப் பகுதியில் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் காவலரண் ஒன்றை அமைக்குமாறு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் யாழ் மாநகர சபையானது மேற்படி காவலரணுக்குரிய வசதிகளை ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்றும் அமைச்சர் யாழ். மாநகர முதல்வருக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

அண்மையில் இப்பகுதியில் இரு சாராருக்கிடையில் ஏற்பட்ட மோதல் நிலை காரணமாக இப்பகுதியில் இன்னும் சகஜ நிலை தோன்றாத நிலையில் அப்பகுதி மக்களின் அழைப்பின் பேரில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுக் காலை அப்பகுதிக்கு விஜயம் செய்தார்.

இதன்போது குறித்த இரு சாராரும் கலந்து கொண்டு தங்கள் பக்க நியாயங்களை அமைச்சரிடம் முன்வைத்தனர்.

இருபக்க கருத்துக்களையும் கேட்டறிந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடந்த கால அழிவுகளிலிருந்து மீண்டு நாம் எமக்கான அபிவிருத்திகளை நோக்கி முன்னேறுகின்ற இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறான மோதல்கள் மீண்டும் எம் மக்களுக்கு பின்னடைவையே கொண்டு தரும் என்பதை சுட்டிக்காட்டினார்.

இதன் பின்னர் எந்தவிதமான மோதல்களுக்கும் இடமளிக்கக் கூடாது என இரு தரப்பினருக்கும் உணர்த்திய அமைச்சர், அண்மையில் நிகழ்ந்த மோதல் காரணமாக பாதிக்கப்பட்டவர்களது விபரங்களை தன்னிடம் சமர்ப்பிக்கும்படியும் கேட்டுக் கொண்டார்.

# பெண் மீது தாக்குதல் குருநகர் வாசிக்கு பிணை

(திருநெல்வேலி)

பெண் ஒருவரை அடித்துக் காயப்படுத்திய ஆண் ஒருவருக்கு யாழ். நீதிமன்றம் நேற்று பிணை வழங்கி உத்தரவிட்டது.

குருநகரைச் சேர்ந்த பெண் ஒருவரை அதே இடத்தைச் சேர்ந்த ஆண் ஒருவர் அடித்துக் காயப்படுத்தியதாக குற்றம்சாட்டி யாழ்ப்பாணம் பொலிஸார் ஆண் ஒருவரை யாழ். நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

கடந்த மாதம் 18 ஆம் திகதி இவர் இப்பெண்ணைத் தாக்கியதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது விசாரணையை மேற்கொண்ட நீதவான் மா.கணேசராஜா சந்தேகநபரை 40 ஆயிரம் ரூபாவுக்கான 2 ஆட்பிணையில் செல்ல உத்தரவிட்டு வழக்கை ஆகஸ்ட் மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (137,எஸ்)

# நாயாறில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு உணவல்லாத நிவாரணப் பொருட்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு பிரதேசத்தில் இடம்பெற்ற மீன்பிடி உபகரணங்கள் எரிந்து நாசமான சம்பவத்தில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு உணவல்லாத நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளையினால் மேற்படி பாதிக்கப்பட்ட 15 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருட்களான சமையலறைப் பாத்திரங்கள், உடு புடவைகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் என்பன நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

மேற்படி செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளையிடம் முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தினால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் குறித்து முன்வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இக்கிளையினால் உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

செஞ்சிலுவைச் சங்க முல்லைத்தீவு கிளையின் நிறைவேற்று அதிகாரி செ.சதீஸ்வரன் மக்களுக்கான உதவிகளை வழங்கிவைத்தார். (04)

## சமூகநல...

திட்டப் பயனாளிகளுக்கான காசோலை வழங்கல், சக்கர நாற்காலி வழங்கல், சிரேஷ்ட பிரஜைகளுக்கான 1000 ரூபா கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டார்.

நேற்று மு.ப. 11.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் விசேட தேவையுடையவர்கள் 50 பேருக்கு இரண்டரை இலட்சம் ரூபாவிற்கான காசோலைகளையும் ஒருதொகுதி விசேட தேவையுடையவர்களுக்கான சக்கர நாற்காலிகள், சிரேஷ்ட பிரஜைகளுக்கான 1000 ரூபா உதவிப் பணத்திற்கான கணக்குப் புத்தகங்களும் அமைச்சரால் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.எம்.எஸ்.ரத்நாயக்க, யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரசாங்க அதிபர் ரூபினி வரதலிங்கம், சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமநாதன் அங்கஜன் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். மேலும் இந்நிகழ்வில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டிருந்தனர். (பா)

## தெரிவுக்குழுவில்...

முடியும் என கிரியெல்ல எம்.பி. கூறினார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளரான சுரேஷ் பிரேமச்சந்திரன், நாடாளுமன்ற தெரிவுக்குழு பற்றி கருத்துரைக்கும் போது இணக்கப்போக்கை வெளிப்படுத்தினார். இது வழமையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடைப்பிடித்த கடும் போக்கிலிருந்து மாறுபட்டிருந்தது.

நாம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்பதைப்பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான பேச்சு மீண்டும் தொடங்குமாயின் த.தே.கூ. நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்கும் என இரா.சம்பந்தன் ஜனாதிபதியிடம் கூறியுள்ளார் என கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்பது தொடர்பில் நிபந்தனைகளின் பட்டியலை ஐ.தே.க. சமர்ப்பித்துள்ளது. அரசாங்கம், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துரையாடவும், 13 ஆம் திருத்தத்தின் அடிப்படையில் ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ளவும் அரசாங்கம் தயாராயின் நாமும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்போம் என லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் கூறினார்.

## ஹன்டர் வாகனம்...

வந்துள்ளனர். கிளிநொச்சி டிப்போ அருகில் வீதி அபிவிருத்திப் பணிகள் மேற்கொண்டு வரும் நிலையில் அவ்வீதியில் பாதை மறிப்பு இடம்பெற்றுள்ளது.

அந்த வேளை சபாரி மோட்டார் சைக்கிளில் இருவரும் வாகனங்களுக்குப் பின் தரித்து நின்றுள்ளனர். அந்த வேளை பின்புறமாக வந்த ஹன்டர் வாகனம் வேகக் கட்டுபாட்டை இழந்து இருவர் மீதும் மோதியுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளில் பின் இருக்கையில் இருந்த மனைவி தலை அடிபட நிலத்தில் வீழ்ந்துள்ளார். கணவன் தூக்கி வீசப்பட்டுள்ளார்.

இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்கென யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருவரையும் அனுமதித்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட போதிலும் மனைவி உயிரிழந்துள்ளார். கணவன் அவசர சிகிச்சைப் பிரிவில் தொடர்ந்தும் சிசிக்சை அளிக்கப்பட்டு வருகிறார்.

இவ்விபத்துச் சம்பவம் தொடர்பாக ஹன்டர் வாகன சாரதி கிளிநொச்சி பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்,77)

# பிரிட்டன் நிலைமைக்கு காரணம் அரசாங்கம்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சும், இலண்டனில் உள்ள இலங்கைத் தூதரகமும் பிரித்தானிய நிலைமைகளைக் கையாள்வதில் தோல்விடைந்துள்ளதையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் உரை நிறுத்தப்பட்டமை வெளிப்படுத்தியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

லண்டனில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றவிருந்த உரை நிறுத்தப்பட்டமை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ அனுமதி மறுத்துள்ள நிலையிலேயே ஐ.தே.கட்சி இக்குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்கான அனுமதியைக் கோரும் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இவ்விவ்காரம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல எனக் கூறி சபாநாயகர் சமல் ராஜபக்ஷ விவாதம் நடத்த அனுமதி மறுத்து விட்டார்.

அதேவேளை, பொதுநலவாய அமைப்பின் பொருளாதார மன்றத்தின் ஏற்பாட்டில் மன்சன் ஹவுசில், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றவிருந்த உரையை பொதுநலவாய அமைப்பின் பொருளாதார மன்றமும், லண்டன் நகர நிர்வாகமுமே நிறுத்தியதாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர இந்திய ஊடகங்களுக்கு குறிப்பிட்டுள்ளார

லண்டன் உரையை நிறுத்துவதற்கு மகிந்த ராஜபக்ஷ நிர்ப்பந்திக்கப்பட்டார் என மகிந்த ராஜபக்ஷவின் உரை நிறுத்தப்பட்டமை தொடர்பில் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. இந்நிலையில், இந்திய ஊடகங்களுக்கு விளக்கம் அளித்து பந்துல ஜயசேகர அனுப்பி வைத்த குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தேசியக்...

நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தியை தேசிய கொடி ஏற்றுமாறு சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா கோரினார்.

இதன்போது கொடியை ஏற்ற மறுத்த அவர் அமைச்சரை ஏற்றுமாறு கேட்டுக்கொண்டார். (பா)

## முதலமைச்சர்...

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் புத்திஜீவி ஒருவரைத்தான் முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்தத் திட்டமிட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கில் உள்ள கல்விமான் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவது நல்லதாக இருக்கும் என சம்பந்தன் சக உறுப்பினர்களுடன் ஆலோசித்துள்ளார்.

எனினும், இவரின் ஆலோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டித்துள்ளனர்.

கிழக்கில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை அல்லது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதே சிறந்தது எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நல்லிணக்கத்தை...

கமலேஸ் சர்மா ஏற்பாடு செய்திருந்த பிரித்தானிய மகாராணிக்கான விருந்துபசாரத்தில் ஜனாதிபதி பங்கேற்றார்.

இந்தநிலையில் இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்க நடைமுறைகளுக்கு தாம் உதவ தயார் என்று பொதுநலவாய நாடுகள் அமைப்பின் பேச்சாளர் ரிச்சட் உகு நேற்றுத் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பு, மனித உரிமைகளின் அடிப்படை அம்சங்களுக்கு மதிப்பளிக்கிறது. இந்தநிலையில், இலங்கை அரசாங்கத்தின் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் இலங்கைக்கு உதவ எமது அமைப்பு தயாராக உள்ளதாக உகு குறிப்பிட்டுள்ளார்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறையை எமது அமைப்பால் செய்துக்கொடுக்கமுடியும்.

அத்துடன் இலங்கை அரசாங்கம் விரும்பினால், தம்மால் அதனை நடைமுறைப்படுத்துதற்கான உதவிகளை மேற்கொள்ளமுடியும் என்றும் ரிச்சட் உகு குறிப்பிட்டுள்ளார்.

## உலகளாவிய...


ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், போரினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் சமூக, பொருளாதார, அபிவிருத்தி, சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் போன்ற விடயங்கள் தொடர்பில் இரண்டு தரப்புக்கு இடையில் கருத்துக்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள பிரச்சினைகள் தொடர்பில் அனைத்துத் தரப்பினரதும் சட்டரீதியான எதிர்ப்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொடுப்பதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதும் அதற்கு ஒன்றிணைந்த முயற்சி தேவைப்படும் என்பதும் பாப்பரசரின் எதிர்ப்பார்ப்பாக காணப்படுகிறது.

இதேவேளை இலங்கையின் சமய, கல்வி மற்றும் சுகாதார சமூக மேம்பாட்டுக்கு வத்திக்கானின் உதவி தொடரும் என்றும் பாப்பரசர் தரப்பு உறுதியளித்ததாக அவரின் அலுவலக செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பள்ளி வாசல்களின் விபரம் திரட்டல் முஸ்லிம்களை இழிவுபடுத்தும் செயல்

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



பள்ளிவாசல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விபரங்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் திரட்டுவது முழு முஸ்லிம் சமூகத்தையே இழிவுபடுத்தும் ஓர் அவமானச் செயலாகுமென நீதி அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் உள்ள பள்ளிவாசல்களின் விபரங்கள், அதன் பின்னணிகள் குறித்தான விபரங்களைத் திரட்டுவதானது முழு முஸ்லிம் சமூகத்தையே மானபங்கப்படுத்தும் ஓர் அவமானச் செயலாகவே நான் பார்க்கிறேன்.

பௌத்த விவகார அமைச்சின் கீழ்தான் முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களம் வருகிறது. இந்த அமைச்சின் செயலாளர், இந்த விபரங்களை முஸ்லிம் கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரிடம் கேட்டிருக்கலாமே? இதைவிடுத்து, சி.ஐ.டியினர் இந்த விபரங்களைக் கோருவது எந்த சக்தியின் தேவையை நிறைவேற்ற என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

இதை நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கப்போவதில்லை. பள்ளிவாசல்களுக்குள் தீவிரவாதிகள் இருப்பது போலவும், பள்ளிவாசல் குற்றச் செயல்களுக்குப் பயன்படுத்தப்படுவது போலவும் ஓர் எடுகோளை வைத்துக் கொண்டு இப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவது முழு முஸ்லிம் சமூகத்தையும் இழிவுபடுத்தும் செயலாகும். இதை நான் உரிய நேரத்தில் உரியவர்களுக்கு உரிய வகையில் சுட்டிக்காட்டுவேன். நாங்கள் உரிய தீர்மானங்களை எடுக்கவும் இவ்வாறான சம்பவங்கள் வழிவகுக்கப் போகின்றன.

இதுவரை எந்தப் பள்ளிவாசல்களும் தீவிரவாத செயற்பாடுகளுடன் தொடர்புபட்டது கிடையாது. ஆனால், அபத்தமான செயற்பாடுகளில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டு முஸ்லிம்களுக்கு எதிராக செயற்பட்டால் சமூகத்தின் பெயரில் சில முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்களை நாம் அரசியல் ரீதியில் எடுக்கவேண்டி வரும் என்பதை சொல்லிவைக்க விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்கு இராணுவ உதவி அதிகரிக்க சீனா இணக்கம்



இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய நேற்று முன்தினம் சீனாவின் படைத்துறை அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங் லீயைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பீஜிங்கில் அமைந்துள்ள படைத்துறை தலைமையகத்தில் சுமார் ஒரு மணித்தியாலம் இடம்பெற்ற இச்சந்திப்பில், அவசரமான எந்தவொரு நிலையிலும் இலங்கைக்கு படைத்தரப்பு உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஜெனரல் லியாங் குவாங் லீ வாக்குறுதி அளித்துள்ளார்.

அத்துடன், இருநாடுகளுக்கும் இடையிலான படைத்துறை சார்ந்த ஒத்துழைப்புக்களை அதிகரிக்கவும் சீன படைத்துறை அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

இச்சந்திப்பில் சீன படைத்துறையின் தலைமை அதிகாரிகளின் பிரதித் தலைவர் ஜெனரல் சியாவோ தியன் உள்ளிட்ட சிரேஷ்ட படை அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். சீன படைத்துறை அமைச்சரை இலங்கை இராணுவத் தளபதி ஒருவர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பது இதுவே முதல்முறையாகும்.

அதேவேளை, சீன படைத்துறையின் தலைமை அதிகாரிகளின் பிரதித் தலைவர் ஜெனரல் சியாவோ தியனை ஜெனரல் ஜகத் ஜயசூரிய தனியாகச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். இதன்போது போருக்குப் பின்னரான விடயங்கள் குறித்து சீன படைத்துறைக்கு பயற்சியளிக்கத் தயாராக இருப்பதாக ஜகத் ஜயசூரிய கூறியுள்ளார். அத்துடன், போரின் போது சீனா வழங்கிய படைத்தரப்பு சார்ந்த உதவிகள் மற்றும் பயிற்சிகளுக்கு அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

# தமிழ் இனவாதத்தின் தந்தை சம்பந்தன்

## என்கிறார் சம்பிக்க

தமிழ் இனவாதத்தின் தந்தையாக சம்பந்தன், அமிர்தலிங்கம் போன்றோரை கருத வேண்டுமென மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தமிழ் இனவாதத்தை அதிகளவில் தூண்டிய கட்சிகளாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழர் விடுதலைக் கூட்டணியையும் குறிப்பிட முடியும்.

பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்ற கட்சிகள் ஓரளவு நெகிழ்வுத்தன்மையுடன் செயற்படும் என பலரும் கருதினார்கள். எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது ஒன்றுபட்ட நாட்டை குரோதத்தின் மூலம் மீண்டும் பிளவுபடுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

சம்பந்தனும், அமிர்தலிங்கமும் தான் முள்ளிவாய்க்கால் பேரவலத்தை ஆரம்பித்தார்கள். இந்த கடும் போக்குடைய அரசியலை தலையில் சுமந்து கொண்ட ஓர் குழந்தையே வேலுப்பிள்ளை பிரபாகரன்.

இரத்தம் தோய்ந்த அரசியலின் தந்தையராக சம்பந்தன் போன்றோரை கருத வேண்டுமென சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்துள்ளார்.

# இரட்டைக் குடியுரிமை முறை மீளவும் அமுலாகிறது




(கொழும்பு)

இலங்கையில் இரட்டைக் குடியுரிமை முறைமை மீள அறிமுகம் செய்யப்பட உள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.


வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுக்கொண்டுள்ள இலங்கையர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி வெளி விவகார அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன், ரோமிற்கு சென்றுள்ள பிரதி வெளி விவகார அமைச்சர் சிங்கள ஊடகமொன்றுக்கு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரட்டைக் குடியுரிமை வழங்கும் நடைமுறை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் சிறிய திருத்தங்களுடன் மீளவும் இரட்டைக் குடியுரிமை முறைமை அமுல்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

# மரண அறிவித்தல்

## திருமதி சிவயோகம் செல்வராசா



**(முன்னாள் ஆசிரியை கொக்குவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்,கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)**

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கந்தர் மடம் மற்றும் சம்பியன்லேன், கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவயோகம் செல்வராசா அவர்கள் கடந்த 07.06.2012 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் செல்லம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான இராசையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசையா செல்வராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் சேனாதிராசா அவர்களின் அருமைச் சகோதரியும், திருமதி விஜயலட்சுமியின் மைத்துனியும், அனுசுயா, சசிலேகா (செல்வி), அம்பிகை, மதிவதனி, மலர்வதனி ஆகியோரின் தாயாரும், நடேசலிங்கம் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, இராஜராஜேஸ்வரன், இதயலிங்கம், இராஜகுலசிங்கம் ஆகியோரின் மாமனாரும், குமரன், யாதவன், நாராயனி, ஷர்மிலி, ஷிராணி, ஷாலினி, விநாயக், ஷங்கமி, றஜிதன், அனிதா, ஹாரினி, ஹர்ஷினி, தற்பரன், அகல்யா, பிறேமிகா ஆகியோரின் பாட்டியும், அபிஷேக்கின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 10.06.2012 ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல் :
மக்கள், மருமக்கள்,
மருமகன், பேராசிரியர்
மா.சின்னத்தம்பி.

(R/136)

# இத்தாலியிலுள்ள இலங்கை அகதிகளின் சுக, துக்கம் விசாரித்த நியோமல்



பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா இத்தாலி அகதி முகாம்களிலுள்ள இலங்கை அகதிகளைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

பிரிட்டனுக்குரிய விஜயத்தை முடித்துக்கொண்டு இத்தாலி சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேராவும் சென்றுள்ளார்.

இத்தாலியில் அண்மையில் ஏற்பட்ட பாரிய பூகம்பத்தினால் பெருந்திரளான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை இத்தாலிய அரசு இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைத்துள்ளது. அவர்களுள் இலங்கையர்கள் உள்ள பகுதிக்கு பிரதி வெளிவிவகார அமைச்சர் நியோமல் பெரேரா விசேட விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை அகதிகளைச் சந்தித்து உரையாடி அவர்களுடைய சுக துக்கங்களை கேட்டறிந்து கொண்டார்.

## வருடாந்த பரிசளிப்பு விழா

கைதடி யூப்பிட்டர் கல்வி நிலைய வருடாந்த பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 1.30 மணிக்கு கைதடி கயிற்றசிட்டி முருகன் கோயில் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது

நிறுவன இயக்குநர் சி.மதியழகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் வே. கா.கணபதிப்பிள்ளை, சிறப்பு விருந்தினர்களாக கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய அதிபர் சி. பவளகுமாரன், கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் திருமதி. லலிதாமலர் முகுந்தன் மற்றும் பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# நவிப்பிள்ளை பக்கச்சார்பாக செயற்படுவதாக குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவனீதம்பிள்ளை பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாக, ஐக்கிய நாடுகளுக்கான இலங்கை நிரந்தரப் பிரதிநிதி தமரா குணநாயகம் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு நவனீதம்பிள்ளை முக்கிய பங்காற்றியுள்ளதாக தமரா சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள நவனீதம்பிள்ளை ஒத்துழைப்பு வழங்கி வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் நவனீதம்பிள்ளைக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் தமரா குணநாயகம் இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றுவதற்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை முக்கிய பங்களிப்பு செய்துள்ளதாக அவர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆசிய பசுபிக் பிரிவின் பொறுப்பாளர் றொரி முன்குவான் அனுப்பி வைத்த சில மின்னஞ்சல்களின் மூலம், இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பங்களிப்பு தெளிவாக வெளிப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 யூன் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.